

# ராகா சஹஸ்ரம்



நீர்வேலி


## பிரம்மஸ்ரீ தி.நடனசபாபதிசர்மா
## ஸ்ரீமதி கிரிஜாம்பிகை தம்பதிகளின்

# சதாபிஷேகச் சிறப்பு மலர்

29.07.2010

# ராகா ஸஹஸ்ரம்

## 𑌰𑌾𑌗𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍍



யாழ்ப்பாணம, நீர்வேலி
காச்யப கோத்ரம்,
பிரம்மஸ்ரீ தியாகராஜக்குருக்கள் நடனசபாபதி சர்மா
ஸ்ரீமதி கிரிஜாம்பிகை தம்பதிகளின்

# சதாபிஷேகச் சிறப்பு மலர்

## விகிர்தி வருடம் ஆடிச் சதயம்

## 29—07—2010

## வியாழக்கிழமை

# நூல் வெளியீட்டுத் தரவுகள்


நூலின் பெயர் — ராகா சஹஸ்ரம்

மொழி — தமிழ்

விடயம் — சதாபிஷேக நாயகர்
பிரம்மஸ்ரீ தி.நடனசபாபதி சர்மா
அவர்களது வாழ்க்கைச் சிறப்பு பற்றிய
நயப்புரைகளும், அவருக்குச்
சான்றோர் வழங்கிய ஆசிகளும்
வாழ்த்துக்களும் வணக்கங்களும்
பல்துறை ஆக்கங்களும்.

வெளியீடு — பிரம்மஸ்ரீ தி. நடன சபாபதி சர்மா
அவர்களின் குடும்பத்தினர்.

முகவரி — 8 Allée Alfred Jarry,

31120 Portet Sur Garonne. France.

பக்கங்கள் — சதம் *(100)* - (96+4)

முதற்பதிப்பு — *29-07-2010.*

தொகுப்பும்
கணினி வடிவமைப்பும்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.Hons.
கந்தசாமி கோவிலடி,
இணுவில், சுன்னாகம், ஸ்ரீலங்கா.
தொ.பே. *021 222 6004*

அச்சுப்பதிப்பு — சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்,
கோண்டாவில். *021 222 6722*

# 'நடன' மாலையின்
# நன்மணிக் கோவை



சமர்ப்பணம்
முன்னீடு

### இயல் 1. அலாரிப்பு

சதாபிஷேக நாயகரை வாழ்த்திச்
சான்றோர் வழங்கிய
நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களும்

### இயல் 2. கீதமும் கீர்த்தனையும்

நல்விழாக் காணும் நாயகரின்
நயமான நல்வாழ்க்கை – சில பதிவுகள்.

### இயல் 3. பதம்

ஆயிரம் பிறைகண்ட அந்தணரின்
ஆக்கங்களின் தொகுப்பு

### இயல் 4. தில்லானா

அறிஞர் வழங்கிய அறிவுப் பெட்டகம்.
– கட்டுரைத்தொகுப்பு.

# சமர்ப்பணம்

எம்மைப் பெற்று, எழுத்தறிவித்து
இனிய பண்பும் இணையிலா அறிவும்
என்றும் அன்போடு ஊட்டி வளர்த்து
எல்லோரும் போற்ற ஏற்றங்கள் செய்த
எமது பெற்றோரை மகிழ்வித்து
அவர்கள் நீண்டகாலம் சுகதேகிகளாக
எம்மோடு வாழவேண்டுமென்பதற்காக
வேதங்களில் விதித்த சாந்திகளைச் செய்யுமுகமாக
எமது பெற்றோராகிய
பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா
ஸ்ரீமதி கிரிஜாம்பிகை தம்பதிகளின்
சதாபிஷேக விழா நடைபெறும் இவ்வேளையில்
'ராகா சஹஸ்ரம்' என்னும் இந்த மலரினை
அனைவரதும் ஆசி வேண்டி நமஸ்கரித்துப்
இந்த விழாப் பொலிவுறவும் மலர்வெளியீடு சிறப்புறவும்
உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார நன்றி கூறி
பெருமகிழ்வுடனும் பணிவன்புடனும்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

8, அலே அல்பிரட் ஜரி
31120 போர்த்தே சூர் கரோன்,
பிரான்ஸ்.

# சதாபிஷேகம் காணும் சால்புறு தம்பதியர்



பிரான்ஸ் வாசர்,
நீர்வேலி

காஸ்யப கோத்ரம்

பிரம்மஸ்ரீ தியாகராஜக்குருக்கள் நடனசபாபதிசர்மா
ஸ்ரீமதி கிரிஜாம்பிகை தம்பதிகள்

## முன்னீடு....



வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா

(கோப்பாய் சிவம்)

## விழாநாயகர்

## பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா

யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஈழத்தின் பல்வேறு பகுதிகளைத் தன் அரசபணிக் களங்களாகவும் கொண்டபின் நீண்டநாள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைத் தம் வசிப்பிடமாகவும் கொண்டிருந்து, இப்போது ஐரோப்பிய நாட்டில் பிரான்சை வசிப்பிடமாகக் கொண்டிருக்கும் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா அவர்கள் தமது எண்பது வயது பூர்த்தியை அமைதி விழாவாகவும் அமுத விழாவாகவும் கொண்டாடுமுகமாகத் தமது குடும்பத்தினருடன் சதாபிஷேக விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் அதனை அடையாளப்படுத்தும் வகையில் இந்த மலர் வெளியாகின்றது.

'ராகா சஹஸ்ரம்' என்ற பெயரில் வெளிவரும் இம்மலரின் தொகுப்பாளர் என்ற முறையில் இம்மலர் பற்றியும் விழா நாயகர் பற்றியும் சில அறிமுகக் குறிப்புக்கள் கூறுவது எனது கடமை. ராகா என்னும் வடசொல் பூரண நிலவு என்ற பொருளை உடையது. சஹஸ்ரம் என்றால் ஆயிரம். ஆயிரம் பிறை கண்ட அந்தணாளர் ஒருவரின் சதாபிஷேக விழா மலர் என்பதால் இப்பெயர் மிகப் பொருத்தமாக விழாநாயகராலேயே சூட்டப்பட்டது.

நாயகரைப்பற்றிப் புறநிலையிலிருந்து மூன்றாவது நபர் ஒருவர் சொல்வதாக இல்லாமல் உள்வீட்டு அறிமுகமாக அவரது மருமகன் - அதாவது அவரது சகோதரியின் மகன் - என்ற வகையில் அவரைப்பற்றி நான் அறிமுகப்படுத்த விரும்புவதால் அவர் ஒரு 'வணங்காமுடி மன்னன்' என்பதை முதல் வாக்கியமாகக் கூறுவேன். இது அவரது அக்காவாகிய எனது அம்மாவின் தகவல். உள்ளதை உள்ளபடி கூறுவதாலும், தாம் சரி என்று நினைப்பதை அப்படியே அஞ்சாமல் சொல்வது - செய்வது எனக் கொண்டிருந்தமையாலும் அவருக்கு அப்பெயர் பொருத்தமான வகையில் கிடைத்திருக்கிறது. இதைச் சொல்ல நான் விரும்புவதற்கு இன்னுமொரு சுயநலமான காரணமும் உண்டு.

'அப்படியே உரிச்சு வைச்சபடி மாமனைப்போல' என்று இப்போது எனது (வயதாகிக்கொண்டிருக்கும்) தோற்றத்தைப் பார்த்து எமது உறவினர்கள் பலர் கூறுவதுபோல் 'உன் மாமனைப்போல் நீயும் வணங்காமுடி மன்னன்தான்' என்று என் தாயார் கூறும் அந்தப் பெருமைக்குரிய விடயத்தைச் சொல்வதன்மூலம் எனக்குள் ஒரு ஆத்ம திருப்தி.

இனி, அவரைப்பற்றி......

சோதிட விற்பன்னரும் புராண படன வித்தகரும் சதாசாரம் மிக்க சிவாசாரிய மணியுமாகிய நீர்வேலி சிவஸ்ரீ க. தியாகராஜக் குருக்களுக்கும் இராஜலட்சுமி அம்மாளுக்கும் புதல்வராகப் பிறந்து (இந்நூலில் பிறிதொரு இடத்தில் அவரே குறிப்பிட்டுள்ளதுபோல) பலவித நெருக்கடிகளுக்குள் வளர்ந்து சுயமுயற்சியினாலே அரச சேவையில் எழுது வினைஞராக இணைந்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் மிகப் பொறுப்பான உயர்பதவிவரை வகித்தபின் உரிய வயதில் ஓய்வு பெற்றவர் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா.

தமது பதவியின் உச்சநிலையில் தம் அலுவலகத்தில் பலருக்கு அவர் சிம்மசொப்பனமாக இருந்தார் எனக் கூறுவது, அவரது துணிவும் உறுதியும் நேர்மையும் கடமை உணர்வும் எப்படி இருந்தன என்பதை விளக்கப் போதுமானது.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய நான்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். நிறையத் தேடல் உள்ளவராகச் சிறு வயதுமுதல் இன்றுவரை வாழ்ந்து வருகின்றார். வாசிப்பு மிக அதிகம். எமக்குக் கண்முன்னே அவர் ஓர் ஆதர்சமாக இருந்தாரென்றால், அடுத்த தலைமுறையினருக்கு அவரது வாழ்வும் பணியும் ஆக்கங்களும் இந்த மலர் மூலமாக ஓர் ஆதர்சமாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், 'என்னைப்பற்றி எழுதவேண்டாம்' என்ற அவரது கட்டளையையும் மீறி அவரது மலரிலேயே நான் இவற்றை எழுதுகின்றேன்.

சிறு வயதிலிருந்தே இலக்கியப் பயிற்சி உடையவராக, ஆக்க இலக்கிய கர்த்தாவாக அவர் மலர்ந்தார். இயல்பான அவரது ஆர்வம் அவரது 'அத்தான்' ஆகிய எமது தந்தையார் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்களின் தொடர்பால் வளர்ந்து பரிமளித்தது. அவர் இவருக்குக் குருவாய் இருந்தமையையும், தமது வாழ்வில் பஞ்சாட்சர சர்மாவின் தாக்கம் மிக அதிகம் என்பதையும் நடனசபாபதி சர்மா அவர்கள் எப்போதும் நன்றியோடு சொல்லிக்கொண்டிருப்பார்.

நடனசபாபதி சர்மா அவர்களது இலக்கிய ஆக்கங்கள் பல்துறைப் பங்களிப்பை உடையன. கட்டுரைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள், சிறுகதைகள், சமஸ்கிருத ஆக்கங்கள் எனப் பல்கி அமைந்தபோதும் இன்று இத்தொகுப்பில் சேர்த்துக்கொள்ள அவற்றில் பல கிடைக்கவில்லை என்பது வருத்தத்துக்குரியதே. எனினும் இங்கு தொகுக்கப்பட்டிருக்கும் சில ஆக்கங்களும் இவ் அறிமுகக் குறிப்பும் அடுத்த தலைமுறையினர் அவரைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் அவரது பணிகளை ஆராய்ந்து மதிப்பிடவும் ஓரளவுக்குத் துணைசேர்க்கும் என நம்புகிறேன்.

தமது ஓய்வுக் காலத்தில் அவரது கவனம் ஆலயக் கிரியைகள் பற்றியும் வைதிகக் கிரியைகள் பற்றியும் திரும்பியதால் இலக்கியத் துறைக்குக் கொஞ்சம் இழப்பு என்றாலும் நமது ஆன்மீகத்துறை நல்ல பயனைப் பெற்றுள்ளது. தீபபூஜை என்ற சிறிய புத்தகத்தில் ஆரம்பித்துப் பல வைதிக நூல்களை ஆராய்ந்து, தொகுத்து வெளியிட்டுள்ளமை அவரது பணிகள் யாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல் அமைந்தது.

'காட்டுத்துறைத் தம்பிராஜாக்குருக்கள்' என அன்போடு அனைவராலும் அழைக்கப்பட்ட சிவஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களின் மகளான கிரிஜாம்பிகை அவர்களை இல்லறத் துணைவியாக அடைந்து ஐம்பத்தைந்து வருட இல்லறத்தில்

மூன்று ஆண்மகவுகளையும் மூன்று பெண் மகவுகளையும் பெற்றெடுத்து அவர்கள் யாவரையும் நல்வழிப்படுத்தி நல்வாழ்க்கையை அமைத்து பிரான்சில் அருகருகாக வாழ்ந்துகொண்டிருக்கும் மூன்று புதல்வர்களுடனேயே இப்போது வசித்து வருகிறார். பெண் மக்கள் மூவரும் உயர்பதவி வகிக்கும் கல்விமான்களைக் கைப்பிடித்து இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

பேரக் குழந்தைகளையும் பீட்டக் குழந்தைகளையும் கண்டு மகிழ்வுற்றிருக்கும் இத் தம்பதியினரின் ஆசியை, நீர்வேலி ஸ்ரீ தியாகராஜக் குருக்களின் சந்ததியினர் சார்பிலும் அவரது சம்பந்திமாரின் சந்ததியினர் சார்பிலும் நான் வேண்டி நிற்பதோடு இவர்கள் தமது குடும்பத்தினருடன் எல்லா இன்பங்களையும் பெற்று நீடு வாழ அருள்செய்யவேண்டுமென நீர்வேலி அரசகேசரி விநாயகரின் பொற்பாத கமலங்களை வழுத்தி அமைகின்றேன்.

இம்மலர் நான்கு பகுதிகளைக் கொண்டமைகிறது. முதற்பகுதி அறிஞர்கள், அன்பர்கள் வழங்கிய வாழ்த்துக்களாக விரிகிறது. இரண்டாவது பகுதி விழா நாயகரின் வாழ்க்கை பற்றிய பதிவுகளைக் கொண்டு மலர்கிறது. இம்மலரின் மிக முக்கியமான பகுதி மூன்றாவதாகும். அன்றும் இன்றும் அவர் எழுதிய ஆக்கங்களைத் தருகிறது இப்பகுதி. இதில் குறிப்பிடவேண்டிய அம்சம் என்னவென்றால், மிகச்சமீபத்தில் அவர் நிறைய விடயங்களை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதுதான். சதாபிஷேகமும் மலர்வெளியீடும் அவருள் ஏற்படுத்திய உத்வேகம் பல புதிய கட்டுரைகளையும் கவிதையையும் மிக வேகமாக எழுத வைத்தது. இதற்காக, இவ்விழாவை ஆர்வமாக நடத்தும் அவரது புதல்வர்களை நாம் மிகவும் பாராட்டி நன்றி கூறவேண்டும்.

நான்காவது பகுதி விழா நாயகரோடு தொடர்புடைய அறிஞர் பெருமக்கள் சிலர் இம் மலருக்கென்றே சிறப்பாக மனமுவந்து வழங்கிய சில கட்டுரைகளின் தொகுப்பாக உள்ளது.

இம்மலர், பிரம்மஸ்ரீ நடனசபாபதி சர்மா - கிரிஜா தம்பதிகளின் நிறைவான இல்லறத்தின் ஒரு முத்திரையாக, அவர்களது முதிர்ந்து கனிந்த இதயங்களில் இனிமை சேர்ப்பதாக அமையும். அவரது மக்கள் மருமக்களுக்குத் தமது எதிர்கால வாழ்வைப் பெருமையுடன் முன்னெடுத்துச்செல்ல உதவும் ஓர் அடையாளச் சின்னமாக விளங்கும். பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளுக்கு பாரம்பரியப் பெருமையையும் பண்பாட்டு மரபையும் எடுத்துரைத்து வம்சத்தொடர்பின் மகிமையை நினைவூட்டும் நூலகமாகத் திகழும். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வாழ்வின் சுவைகளை மனத்தில் அசைபோடவும் வாழ்த்தவும் வாழ்த்தைப் பெறவும் உதவும் தொடர்பாடல் கருவியாக மிளிரும். தமிழ்கூறும் நல்லுலகிற்கும் வைதிகமரபிற்கும் இம்மலர் ஒரு சிறந்த ஆவணப் பெட்டகமாகவும் தகவற் களஞ்சியமாகவும் ஒளிரும்.

இந்த நம்பிக்கையோடும், இம்மலர்த்தொகுப்பென்னும் பெரும்பணி இவனுக்குக் கிட்டியது எத்தகைய பெரும்பேறு என்னும் பெருமையுடனும் நன்றிகளுடனும் விழாத்தம்பதிகளின் கரங்களில் சமர்ப்பித்து மகிழ்கிறேன்.

‘சர்வானந்தமயபீடம்’ — ப. சிவானந்த சர்மா B.A. (Hons)
இணுவில் மேற்கு, சுன்னாகம். — (கோப்பாய் சிவம்)



ஓ௦ ௱௦ ௱ணவதயெ நஃ:

௱ஜவஊந உலிஙூ௦ தீக்ஷ்ண ஊ௦ஷூ௦ திணைசுஃ।

ஙரஹஊ௱ஊர ஊஸெஷ௦ ஹூதாாஜ௦ வ௱ாணஃ॥

ஊஊாவா ஸூவூஜூ௦ கூஜிதூ கொடி காஜிஃ।

வஸாவதி ஸூத ஶீஸ௦ விவுநாஜ௦ நஊஇ॥

ஸ கூஊஙு௦ ஊஹாகாய௦

தவுத காஙுந ஸஷிஹ௦।

மு௦ஙொஊா௦ விஶாமுாக்ஷ௦

வநெஹ௦ ௱ணநாயகஃ॥



ஒ௦ ஸ்ரீ ஶ௱ஶ௱வெஹ்ா நஃ



ஸ்ரீகாஞ ஜ௱ஹிணொவஜநு௱ தவ நஃ

ஹூரெநு நரு௱ஜய:

வ௱வீநா௱௱வொZவி யஸுகா௱ணா

மெுஶாஜ்தா ஶளாவஜ!

த௦ ஸவ௱ரி ௱௱௦ ஜநொஜஜ்வவ௱ஷ௦

ஜநவஹிதாய௦கரு த௦

விநூஜாகரு த ஜஜ்வாணி நுஙிந௦

விதெ ஶிவ௦ கா௱ஜூஹெ॥



இந்த சம்ஸ்கிருத ஸ்தோத்ரம் நீர்வேலி பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா அவர்களால் இயற்றப்பட்டது.

# சூஜநெய ஸ்துதி

சுஜநா மஹ ஸம்ஹூத சூஜநெய நஜொஸ்துதெ|
ராஜேந்த ஜஹாஹாம ஜாநகீ ஶொக ஹாரிணெ||

வாநரொத்தம் வாஜ ராஜவெஸநா வரொமஜ|
கூரவயா வாஹி ஸெநெஶ ஓீநம் ஜாம் ஶரணாமத||

ஜ்ஞாநாநந்தம் யீரம் ஜாநகீ வியய ஸெவக|
வைராமு ஶீமு ஸம்வஜம் ராஜ வாஜக ஸெவித||

விஹீஷணாமு ஜிசும் வ வாமி ஜஜுந ஸாயக|
சூஜநெயம் ஸஜா வநெ சுஜநாஹூஜ காரக||

ஸவராஹீஷ வஜம் ஶாஙம் ஸூதீவொஜத ஹாவக|
ஜஷ ராவண ஶகும் வ ராஜமுக்ஷண வஜ்லும்||

வஜஜாஜணி யஜஹாமெயாய விஜஜீவிகு முாஙக|
ஸீதா ஸஹாய தெ ஸ்ரீஜநு ஸநாயய நஜொ நஜ||

வாஜாஜூயஜ யத வநு வீர வவந நநந|
வாநரெஶ விஹொ ஸூஜிநு வநெ வாமீகி கீதிஜத||

ஐஹஹவயஜ வஜதெ நிதும் நிரதகூம் நாஜ வியய|
ஸதுவாஜிநு ஜயா ஸிநெயா ஸாயஜ ஸஜ்ஜந வஜீத||

ராஜேந்த நஜஸ்துஹும் ஸீதா ஸநொஷ காரக|
கூரவயா வாஹி ஜாம் ஓீநம் கூயி ஹஙதி ஸஜவிஜத||


விஸ்வாவயம் ஜிவும் வாஙீதாயஜ வஜாயகம்|
வாஜநொ ஹாரிணம் வநெ வெராஜ வஙார ஹாரிண||

ஹார கெயஜர கடக காஙுநாஹாரணொஜ்வும்|
ரத்ந தாடஙம் ரஜணம் ஹஜெ ராவவ நநந||

ஶுஹ||

நீரவெமி தி. நடநஸஹாவதி ஶஜணா


விரவிதொயம் சூஜநெய ஸ்துதி||





# இயல் 1

# அலாரிப்பு



சதாபிஷேக நாயகரை வாழ்த்திச்
சான்றோர் வழங்கிய
நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களும்

"வியாகரண சிரோமணி"
(அண்ணாமலை சர்வகலாசாலை),
சிவாசார்ய கலாநிதி,
"வேத, ஆகம, சைவசிந்தாந்த, கிரியா, விசாரத"
**சிவஸ்ரீ. பூரண. தியாகராஜக்குருக்கள் B.A.Hons (Cey)**
திருகோணமலை வில்லூன்றிக்கந்தசுவாமி தேவஸ்தான
பிரதான சிவாச்சார்யர்,
மட்டக்களப்பு, சிவாநந்த வித்யாலய முன்னாள் சம்ஸ்கிருத,
இந்து நாகரிக விரிவுரையாளர்,
பூர்ணானந்த குருகுல வேத சாஸ்த்ர ஆகம கலாசாலை அத்யாபகர்



நீரவாடீ ஷ்ஷெ வஷாத ஶிவாசாயூ வாஸ்ய வ।
ஜ்யோதிஶாஸ்த்ர விதஸ்த்யாம ராஜ ஶாலா ஸூதஸ்ய ஹி॥
வெத ஶாஸ்த்ர ஓவிலாம் ஹ்ராஜி அதாஹ்யாஷா விஷோ ஶாலா:।
ராஜஸெவா யாரீணஸ்ய ஊதஸ்ரித ஊவஸ்ய வெ॥
ஶிரிஜா வஹ்ஹவெஸ்யவ நட்ந ஸஹாவதி ஸ ஶஊ்ணஃ।
வாது வளதுாஜிஹியூதெ ஊளஹிதுாஜி ஹிஸ்ஸநிதெ॥
ஸாஹ்ஸ்ஊ்ஃ ஸஊயாதெ ஶதாஹிஷெக ஜிநெ ஶாஹெ।
ஊம் ஶஹும் தநாதாஜெவொ ராஜகெஸரி விநாயகஃ॥
கநயொஃ கிஶு ஊம்வதெயாஃ ஶதாயாஷாயிகம் வயஃ।
ஷண்ணூவெஶொZநாஶ்ஹ்ணாதா ஹ்ரஷிம் ஹாஸ்யம் ஶ்ரியம் யஶஃ॥

*கஊ்லாவஸஊதஸ்ய ஊஊ வாது வாதூஜீநாம் ஸவெஷாம் ஹ்ருஊயஜூஊாஃ*
*கவம்வெயாயாஃ வ்யஶம்ஸா வாரம்வாராஃ ஸஞு॥*

ஜதி ஶம்

## சதாபிஷேக சாந்தி வைபவம் - வாழ்த்துமடல்

### தமிழ்உரை

யாழ் - "நீர்வேலி" என்று பிரசித்தி பெற்ற தலத்திலே புகழ் பூத்த உத்தம சிவாசார்யராகவும், சோதிடக்கலை வல்லுநராகவும் சிவப்பழமாகவும் விளங்கிய ராஜலஷ்மியம்மா - தியாகராஜக்குருக்கள் தம்பதிகளின் மூத்தமகனும், யாழ் இந்துக்கல்லூரியில் உயர் வகுப்பில் தேறி, அரசசேவையில் உயர்பதவி பெற்றுப் பணிபுரிந்தவரும், தமிழ், வடமொழி, வேதாகமப் பயிற்சியிற்றிளைத்தவரும், "கிரிஜா"வின் துணைவரும், எந்நேரமும் புன்னகை தவழும் முகத்தினருமான நடனசபாபதிசர்மா அவர்களுக்கு, எல்லாவிதமான மங்கங்களும் கூடியதும், புத்திரர்கள், பேரப்பிள்ளைகள், புத்திரிகள் (பெண்வழி) பேரப்பிள்ளைகள், நண்பர்கள், சுற்றம் புடைசூழ, மிகச் சிறப்பாக நிகழுகின்ற சதாபிஷேக சாந்தி வழா நன்னாளினிலே அரசகேரிப்பிள்ளையார் மங்களப் பேறுகளையெல்லாம் திருவருள் புரிவாராக.

இத்தம்பதிகளுக்கு நூறாண்டு காலத்துக்கு மேலான நல் வாழ்வினையும், உளமகிழ்ச்சி, சந்தோஷ ஆரவாரம், செல்வச் செழிப்பு, புகழ் ஆகிய நற்பேறுகள் அனைத்தையும் எம் குலதெய்வம் வில்லூன்றி ஷண்முகப்பெருமான் அருள்புரிவாராக.

எனதும், கமலா, எனது புதல்வர்கள், புதல்விகள் குடும்பத்தினர் அனைவரினதும் மனமார்ந்த எண்ணற்ற வாழ்த்துக்கள் உரியனவாகுக.



உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆதீனம்

**Uduvil Sri Sivagnana Pilliyar Temple**

V. MUTHUCMARASAMY SARMA
Chief Incombent, Chief Priest &
Retiered Dev. Marketing Officer
"THRIVERNI"
Manipay Road,
UDUVIL, (Sri Lanka)

வா. முத்துக்குமாரசாமி சர்மா
ஆதீனகர்த்தா, ஓய்வுபெற்ற மாவட்ட
விற்பனை அதிகாரி,
"த்ரிவேணி"
மானிப்பாய் றோட் - உடுவில்,
சுன்னாகம்.

69, Coxmoor Close
GU52 6ES
UK

.................199

## ஈழத் தமிழ் நாட்டின் வடபால், யாழ்ப்பாண நகரின் அண்மையில் நீர்வேலி என்னும் ஸ்தலத்தில்

### காஸ்யபர், ப்ரம்மஸ்ரீ தியாகராஜக்குருக்கள் தம்பதியினரின் புத்திரன்

## நடனசபாபதி சர்மா - கிரிஜாம்பாள் தம்பதியினரின் சதாபிஷேக ஆசி

ஶ்ரீவசுவஸு ஊாய ்ஷௌ ஊாளொ௱ஹௌ ஊாவியாவொுாஸாயாநං ஊஹிாயதெ।
யாநௗ০ யநං வ௱்০ ஸஹா்வா்ருஞாஹං ஶதவஸংவத்ஸர்০ ஜீவ ுஊாய ்ঃ॥

ஜஊள ஓংவதீ விவெநு௱ ஶஊவஸூ ஹாிஹா௱ ஒெவதா கூரவயா ஸவு
ஹௌாகவு,ஸிஜ ஸக்ஷாய ு ஊாயுள, வ ்சு ஶிசு ஸஷ ்ஜந வ௱ஊாநஃ
ஸநொஹ ஸநாயிநள, உஊித யஊுாந ்ஷாந ததுா௱ள ச ஹைூயாஊிதி
ஹவஹொ ஊஹாஹொZந ்ஹரஹணு்।

ஜீவ ுாய ்ஷாநுவ। ஜீவ ு ஸ ்ஊஜஶ்ரீ ஹவ। ஸஊவஸூ ஸநூஜஊாநி ஹவஹு்।
ஸவெ ு ஜநாஸு்விநொ ஹவஹு்। ஸகூஹ கூஹௌாண ஸஊரஜி௱ஸூ்॥

ஆயிரம் பிறைகண்ட பிரம்மஸ்ரீ தியாகராஜக் குருக்கள் நடனசபாபதி சர்மா தமிழ்ப் பாஷை, வேதசிவாகமம், ஆங்கிலம் இவற்றையெல்லாம் கற்று ஸ்ரீலங்கா அரசசேவையில் பணியாற்றி ஓய்வுபெற்று இறைபணியாற்றி ஆயிரம் பிறை கண்டு ப்ரம்மசர்யம், க்ருஹஸ்தம், வானப்ரஸ்தம் என்னும் ஆஸ்ரம நியமங்களை அனுஷ்டித்து சதாபிஷேகம் காண்கிறார்.

வேதவிதிப்படி அடுத்து, கனகாபிஷேகமும் பூர்ணாபிஷேகமும் காண இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து.

சுப மங்களம்.

இங்ஙனம்,

**வா. முத்துக்குமாரசாமி சர்மா தம்பதிகள்.**



உ

# காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்

அதிபர்,

"சிவாகமஞான பாஸ்கரன்"

*சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.*



T.MAHADEVAKURUKKAL,
DHARMASASTA GURUKULAM,
INUVIL, CHUNNAKAM.
T.P : 021 222 2660.



ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி தேவ்யாலயம்,
இணுவில்,
சுன்னாகம்.

திகதி :-...................................

---

யாழ்ப்பாண மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் பேரறிஞர் வரிசையில் நீர்வேலி, பிரம்மஸ்ரீ தி. நடன சபாபதி சர்மா அவர்களுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. பன்மொழிப் பண்டிதர். பல்துறை ஆற்றல் வாய்ந்தவர். அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றபின் வைதிக மரபிற்கு அவர் ஆற்றிவரும் சேவை மறக்கமுடியாதது.

சோதிடரும் புராண படன வித்தகருமான நீர்வேலி சிவஸ்ரீ க. தியாகராஜக் குருக்கள் அவர்களின் புதல்வர் என்ற வகையில் அவர் பெற்ற பாரம்பரிய அறிவோடு கோப்பாய் ஸ்ரீநிவாச சாஸ்திரிகளிடம் கற்ற சம்ஸ்கிருதக் கல்வியும் அவரது அத்திம்பேராகிய பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மாவிடம் பெற்ற இலக்கண இலக்கிய அறிவும் அவரை சம்ஸ்கிருத, வேத சிவாகமங்களில் அறிவாற்றல் பெற வைத்தன. தொடர்ந்து தமது விடாமுயற்சியினால் வைத்தியநாத தீட்சிதீயம் முதலிய ஆதார நூல்களையும் வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகள் முதலானோரின் வைதிக நூல்களையும் நன்கு ஆராய்ந்து தமது ஞானத்தைப் பெருக்கிக்கொண்டார்.

நீண்ட காலமாக என்மீது மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டவர் ஸ்ரீ நடனசபாபதி சர்மா அவர்கள். இத்துறை சார்ந்த நூல்களை எழுதுமாறு அவரைத் தூண்டியவர்களில் நானும் ஒருவன். யாழ்ப்பாணத்தை விட்டு பிரான்ஸ் சென்று தமது மகன்மாருடன் வசித்துவரும் இந்நாட்களிலும்கூட மறவாது அடிக்கடி என்னோடு தொடர்புகொள்பவர்.

அந்தண சமூகத்திற்கு அவர் ஆற்றிவரும் சேவை அளப்பரியது. அவரது நற்பணிகளில் இணைந்து செயற்படும் அவரது வாழ்க்கைத் துணைவியாரும் உயர்ந்த பண்பாட்டு மரபுமிக்க பரம்பரையில் வந்தவர். நல்ல பண்பும், அன்பு நிறைந்த உபசரிப்பும் நிறைந்த அவர் கிட்டியது சர்மா அவர்கள் செய்த பாக்கியமே.

அன்பான அவர்களின் இல்லறப் பயனாக அருமையான மக்கட்பேறுகளை அவர்கள் அடைந்துள்ளனர். அவர்களின் நன்மனத்திற்கேற்ப அனைவரும் உயர்ந்த வாழ்க்கை வாழ்வதை அறிந்து மகிழ்கின்றோம்.

சதாபிஷேகம் காணும் இத்தம்பதிகளும் அவர்களது குடும்பத்தினரும் மிகவும் ஆனந்தமாக நீண்டகாலம் வாழ்ந்து இன்னும் இன்னும் நற்பணியாற்றவேண்டும் என இணுவில் வட்டுவினிப் பதியுறை கண்ணகாபரமேஸ்வரியை வணங்கி வாழ்த்துகிறேன்.

**இணுவில்.** **சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்.**

# ஆயிரத்தில் ஒருவர்

நீர்வேலி தந்த நித்திலம் தியாகராஜக் குருமணியின் குலமது விளங்கக் குமரனருளால் குவலயத்துதித்த நற்குணமணி நடனசபாபதி சர்மா அவர்கள். தில்லை ஆடல்வல்லானின் திருநாமத்தைப் பெயராக்கிக் கொண்டவர். தாய்மொழியாம் தமிழ்மொழியுடன் வடமொழி, ஆங்கிலம், சிங்களம் போன்ற பலமொழி பயின்று பாண்டித்தியம் பெற்றவர். கற்றவர்க்கு இயல்பாகவே அமைந்த கர்வம் சிறிதேனுமிலிலாச் சீர்மையாளர். நல்ல பல குணவியல்புகளின் உறைவிடம். அரசசேவையில் பணியாற்றி உயர்பதவிகளை எய்தி முத்திரை பதித்த வித்தகர். சேவையின் நிமித்தம் பற்பல இடங்கள் ஏகிப் பணிபுரிந்த வேளையிலும் தன் குல ஆசாரம் வழுவாது பேணிக்காத்த கனவான். கற்றறிந்த அறிஞர்களையும் பெரியோர்களையும் தன் ஆசிரியப் பெருந்தகைகளையும் குருமார்களையும் நெஞ்சமதில் நிறுத்தி மதிப்பும் பணிவும் காட்டும் பண்பாளர். மனித இனம் பண்டுதொட்டுக் கட்டி யெழுப்பிக் காப்பாற்றி வந்த நயத்தக்க நாகரிகமும் பண்பாடும் தற்காத்து நவீனத்துவ அலைகளுக்கு நாணி மெல்லத் தலைறைவாகி வரும் இன்றைய நிலையில் இளம் தலைமுறையினர்க்கு இனிய மொழிகள் இயம்பி அவர்கள் தடம் மாறித் தடுமாறித் திசைமாறாது வாழ்வாங்கு நல்வாழ்வு வாழ வழிசமைத்து நல்வழி காட்டும் நல்லோன். இசையினில் ஞானமும் புலமையும் நாட்டமும் கொண்டவர். உறவோடும் நட்போடும் மனமொன்றி உறவாடி மகிழ்ந்து மகிழவைப்பவர். இளஞ்சிறார்களிடமும் பச்சிளம் பாலகர்களிடமும் பாசமும் பரிவும் அன்பும் கொண்டு அளவளாவி மகிழும் இயல்பினர்.

தென்றலினிது; செந்தமிழினிது, தீஞ்சொற்கவிதை இனிது, மழலை இனிது, மாதர் குரலினிது, மற்றுமுள்ள செல்வங்கள் இனிது, பிரான்ஸ் நாட்டின் வானளாவ நெடிதுயர்ந்து இயங்கும் ஈடன் கோபுரப் பேரழகு இனிது, கண்கவரும் இயற்கை எழிற்காட்சிகள் இனிது, பூவிரி சோலைகள் இனிது, பனிதாங்கும் மலைத்தொடர்கள் இனிது, சலசலத்தோடி வரும் நதிகளின் அழகு இனிது, புள்ளினங்கள், விலங்கினங்களின் சப்த ஜாலங்கள் இனிது. பழமையைப் பேணிப் பாதுகாத்துவரும் பாங்கு இனிது. துலுசு நகர வாழ்க்கை இனிது, இவையனைத்தும் இனிதேயானாலும் தம்முடைய ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், பாரம்பரியத்தையும், இறைவழிபாட்டினையும், பற்றற்ற தவவாழ்க்கை நெறியினையுமே பெரும் இனிதாக நினைப்பவர்கள்.

கரம்பிடித்த காரிகை நல்லாளொடு கருத்தொருமித்து இல்லறத்தை நல்லறமாக்கி அறவாழ்வு வாழ்ந்து வரும் பெருமகன். இவரது வாழ்க்கைத் துணைவியாரும் இவருடன் நீங்காது நிழல்போல ஒன்றிவாழ்ந்து, கருத்தறிந்து, குறிப்பறிந்து பதிசேவை செய்து மன நிறைவு அடையும் மாதர்குல மாணிக்கம். வாழ்வின் சோலை, பாலை இரண்டையும் சமமாகக் கருதி உற்ற நேரத்தில் நலம் தருவனவற்றை இதமாக காலமறிந்து கூறி மதியூகம் கொண்ட மந்திரிபோல வாழ்ந்து வரும் மங்கையர் திலகம். எம் சமூகத்திற்கும் குறிப்பாக இளையோர்கட்கும் நல்லன செய்ய வேண்டும் என்ற தளராத பேரவாவினால் நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பழந்தமிழ் வாக்கிற்கமையத் தான் கசடறக்கற்றுத் தெளிந்து உள்வாங்கியவற்றை - தன் உடல்நிலையினையும் பொருட் படுத்தாது - எழுதி நூல் உருவாக்கி அளப்பெருஞ்சேவை செய்து வரும் மாமனிதர்.


"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை

என் நோற்றான் கொல் எனுஞ் சொல்"

என்று ஈரடியில் வாக்கமைந்த வான்புகழ் வள்ளுவனாரின் வழியில் உங்கள் நாமம் ஓங்கத் தங்கள் தடம் பதித்துக் கல்வி மற்றும் தொழில் துறைகளில் இணைந்து, வாழும் நாட்டிற்கும் பெருமை தரும் ஒப்பற்ற செல்வங்கள் பிள்ளைகள். செல்வங்களின் செல்வங்களும் அவ்வாறே திறமை பல படைத்துப் பெருமை சேர்ப்பவர்கள். இப் பெருமகனாரும் துணைவியாரும் இன்னும் பல்லாண்டு காலம் நோயில்லாது பெருவாழ்வுடன் தொண்டுபல செய்து இனிதுவாழத் தில்லையில் நடனமாடும் சபாரத்தினப் பெருமானையும், எம்குல தெய்வம் பறாளாய் சிவசக்தி வேலவனையும் திருவருள் மழையினை வற்றாது பொழிந்து காத்தருள வேண்டுகின்றேன்.

எம் உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்வலைகளில் ஒருசிறு துளியினையே எழுத்துருவில் வடிக்க முடிந்தது. இவரது பெருமைதனை விரிவாக எழுத எண்ணரிய கரங்கள் படைத்திலனே அந்த நான்முகனே.

உங்கள் அன்பினை
நெஞ்சமதில் சுமந்து வாழும்
**வே. சத்தியமூர்த்தி சர்மா**
(பறாளாய், சுழிபுரம்) நியூசிலாந்து.



பரீஸ், லாசப்பல்,

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

**பிரதம சிவாசாரியர்**

**பிரம்மஸ்ரீ இ. பகவதீஸ்வரன் அவர்களால் வழங்கப்பெற்ற**

## சதாபிஷேக வாழ்த்து மடல்

ஆயிரம் பிறை காணும் ஈருடல் ஒருயிர் சதிபதிகாள்
மனமொன்றி மாண்புடன் வாழ்ந்து வரும் தம்பதிகாள்
பல்லாண்டு பல்லாண்டு பல நூறாண்டு நலமுடன் வாழ்க!
வள்ளிகுஞ்ஜரி மணாளன் அருள்நிறை துணையோடு.

மனையறம் பேணிக் காத்து மதிப்பொடு நிதியும் சேர்த்தே
அனைவரும் போற்றும் வண்ணம் மக்களை அவைமுன்னாக்கி
நினைவினில் நிலைக்குமாறு தரும நன்னெறியில் நின்று
வினைபல செய்த நீவிர் மேலும் பல்லாண்டு வாழ்க!

அறவழி நடப்போர்க்கிப் பெருவிழா புதிதே அல்ல
மறவழி நடவாதென்றும் மனவலி காத்தல் நன்மை
உறவழி அதிகம் உண்டே உயிர்வளர் வழியும் அ∴தே
பிறவழிச் செல்லா இப் பெற்றியோர் நீடு வாழ்க!

விழாக்காணும் நடனசபாபதி சர்மா கிரிஜாம்பிகை
பணிகள் பல செய்த பண்பாளர்கள் - துணிவோடு மேலும்
நல்ல தொண்டு செய்துகொண்டு நாளும் நலமுடனே
வாழ்க வளமுடன்! வாழ்க முருகன் அருளுடன்!!

**பரிஸ்,** **பகவதீஸ்வரன் ~ புஷ்பராணி**
**பிரான்ஸ்** **பிள்ளைகள்.**

யாழ்ப்பணம் பிரம்மஸ்ரீ ஸ்ரீமதி இ. சந்தானகோபால சர்மா,
பிரம்மஸ்ரீ ஸ்ரீமதி இ. ஜம்புகேஸ்வர சர்மா
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ, ஸ்ரீமதி இ. குமாரசுவாமி சர்மா

ஆகியோர் வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

அன்பும் பண்பும் பொருந்தியவராகவும் பலருக்கும் பயன்படத்தக்க பல நூல்களைத் தொகுத்து வெளியிட்டு எமது வருங்கால சந்ததியினருக்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளைச் செய்த எமது அருமை மைத்துனர் அவர்களது சதாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்று அவரும் அவரது குடும்பத்தினரும் நீடூழிகாலம் வாழக் காட்டுத்துறையான் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கிறோம்.

இலங்கைவாழ் சகோதரர்கள்

யாழ்ப்பணம் ஸ்ரீமதி ஈஸ்வரியம்மா சந்திரசேகரசர்மா,
கோப்பாய் ஸ்ரீமதி இராசாத்தியம்மா பஞ்சாட்சரசர்மா
ஏழாலை சிவஸ்ரீ, ஸ்ரீமதி பாலசுப்பிரமணியக் குருக்கள்

ஆகியோர் வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

சின்னஞ்சிறு வயதிலிருந்தே தமக்கெனத் தனித்துவமான சில கொள்கைகளுடனும் கோட்பாடுகளுடனும் வாழ்ந்துவருபவர் நமது சகோதரர் நடனசபாபதி சர்மா அவர்கள். அதற்கேற்ப ஊக்கமும் முயற்சியும் உரமூட்டியதால் தமது இலட்சியங்களை நிறைவேற்றி வெற்றிகரமாகத்தமத வாழ்க்கையை நடத்தி வருகிறார். அருமையான் வாழ்க்கைத்துணைவி கிரிஜாம்பாள். அன்பான - அறிவான குழந்தைகள் அவரது குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் எனக் கூறலாம்.


தமது மனைவி மக்களுடன் சதாபிஷேகம் கொண்டாடும் அவரை வெகு தொலைவிலிருந்தாலும் அன்போடு வாழ்த்தி மகிழ்கின்றோம்.

எல்லா மங்களமும் உண்டாகட்டும்.



# இயல் 2.

# கீதமும் கீர்த்தனையும்



நல்விழாக் காணும் நாயகரின்
நயமான நல்வாழ்க்கை – சில பதிவுகள்.

# என்னைப் பற்றி சில குறிப்புகள்

சிறுவயதில் எனக்கு ஆரம்பக்கல்வியாக சம்ஸ்கிருதம்தான் போதிக்கப்பட்டது. வெளித்திண்ணையில் என் தாத்தா (கதிரேசக் குருக்கள்) ஒரு துண்டைப் போட்டுப் படுத்துக்கொள்வார். என்னையும் ஒரு பக்கத்தில் படுத்துக்கொள்ளச் சொல்லி ஒரு மந்திரம் சொல்லிக்கொடுப்பார். அந்த மந்திரமாவது,

தணூ¯ஜா வெவ்ஸூ ஜெவஸ௵ ஹாமெளாளம் ஹஜஹி ஜெ|
தஹூாகூ தணூ¯ஜ ஊாநெந சுதஸூாஹிம் வுயதூ ஜெ||

இவ்வாறு ஏன் இந்த சுலோகம் சொல்லிக்கொடுக்கப் பட்டதென்றால் என்னை ஒரு புரோஹிதராக, சிவாச்சாரியராகப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்பதற்காகவே. நீதி சாஸ்திரத்தில் தினமும் ஒரு சுலோகம் பாடமாக்கித் தகப்பனார் முன் நின்றவாறு மார்பில் கைகளைக் கட்டிக்கொண்டு ஒப்புவிக்க வேண்டும்.

அந்தக்காலத்தில் அச்செழுக் கோவிலும் எம் மூதாதையர் வசம்தானிருந்தது. தாத்தாவின் சகோதரி செல்லம்மாப் பாட்டியையும் அவர் கணவர் மார்க்கண்ட ஐயரையும் அச்செழு அம்மன் கோவிலில் பூசைக்கமர்த்தியிருந்தார்கள். ஐயா விசேஷ காலங்களில் அங்கே குருக்கள் வேலைக்கு மட்டும் போய்வந்தார். அங்கு கந்தபுராண படனம் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடந்து வந்தது. அதந்தப் படிப்புக்கு ஐயா அங்கு சென்று பயன்சொல்வது வழக்கம். குறுக்கு வழிப்பாதை "கலட்டி" என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள். நிலத்தில் முளைமுளையாகக் கல் வளர்ந்திருக்கும். கற்களுக்கிடையே ஒற்றையடிப்பாதை. கவனமில்லாமல் கால்வைத்தால் காலைக் கல் பதம் பார்த்துவிடும். கலட்டி என்று இந்த நிலத்தைச் சொல்வது இதனால்தான்.

வழியெல்லாம் சதுரக்கள்ளிகள். கந்தபுராணத்தில் வரும் சூரபன்மனின் தம்பி சிங்கமுகனையும் அவனது தம்பியரையும் போல் வழியெல்லாம் சதுரக்கள்ளிமரங்கள் அணிவகுத்து நிற்கும். இவற்றிற்கிடையில் எனக்கு ஒரு அட்ராக்சன் (Attraction) என்னவென்றால் ஈச்சம்பற்றைகள். ஈச்சமரம் நிறை சிவப்பு முத்துக்களாக ஈச்சங் குலைகள் காய்த்துக் குலுங்கும். கிட்டப்போனால் ஈச்சம்முள் உடம்பைக் கீறிவிடும். நான் ஐயாவுடன் வரும் உள் நோக்கமே இந்த ஈச்சம்காய்கள்தான். சரி. ஐயாவும் ஒரு முக்கிய நோக்கம் வைத்திருந்தார். கிட்டத்தட்ட இரண்டு கிலோமீட்டர் குறுக்குவழிப் பயணத்தின்போது எனக்கு ஒரு சப்தமாவது பாடமாக்குவித்துவிட வேண்டுமென்பதே அவர் இலக்கு.

𑌰𑌾𑌮𑌃 𑌰𑌾𑌮𑍌 𑌰𑌾𑌮𑌾𑌃 என்றோ,

𑌹𑌰𑌿𑌃 𑌹𑌰𑍀 𑌹𑌰𑌯𑌃 என்றோ

சப்தம் நடக்கும். ஆளரவமற்ற, குடிமனைகளற்ற, அந்தக் குறுக்கு வெளிகளெல்லாம் சமஸ்கிருத சப்தங்களின் ஒலியை வாங்கிக் கொள்ளும் பாக்கியம் பெற்றிருந்தன போலும்.

ஐயாவினது கையில் நீர்வேலி சங்கரபண்டிதர் புதல்வர் சிவப்பிரகாச பண்டிதருடைய "சப்தசங்கிரகம்" எனும் வடமொழி இலக்கண நூல் இருக்கும். எனக்கு சப்தங்கள் நிறைய பாடமாகிவிட்டன. பின்பு இவை என் சமஸ்கிருத கல்விக்கு பெரிய

உதவியாக இருந்தன. நான் 14 வயதில் பிரவேசபண்டித வகுப்பில் சித்தியெய்தினேன் என்றால் அதற்குத் தந்தையாரின் இந்த ஆரம்பக் கல்வியே பலமான அத்திபாரமாகும்.

12 வயதிருக்கும்போது வீட்டில் படிக்கும் சம்ஸ்கிருதக்கல்வி போதாது எனப்பட்டது. தவிர, அது ஒழுங்காகவோ, ஒரு பாடத்திட்டப்படியோ நடைபெறவில்லையே. அந்நாட்களில் நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலில் ஒரு சம்ஸ்கிருத வகுப்பு நடந்து வந்தது. அங்கு ஐந்து பிராமண இளைஞர்கள் படித்துக் கொண்டிருந்தனர். தமிழ்நாடு மாயவரத்திலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் வைதிக காரியங்கள் செய்துவைத்துக் கொண்டு அத்தோடு பிராமணச் சிறுவர்கட்கு சம்ஸ்கிருதபாடம் - வேதாத்யயனம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருந்தவர் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள். அவர்தான் நீரவை கந்தசுவாமி கோவிலிலும் சம்ஸ்கிருதம் போதித்தார்.

பஞ்சகச்சமும் உச்சிக்குடும்பியுமாக பரமவைதிகமாக, படு பாவனமாக வாழ்ந்து வந்தார். இவர் அங்கு சம்ஸ்கிருத பாடம் போதித்தது எமது பாக்கியம்.

கந்தசுவாமி கோவிலில் நடந்த சம்ஸ்கிருத வகுப்பிற்கு என்னைப் போக அனுமதிக்குமாறு ஐயாவிடம் கேட்டேன். அவருடைய தயக்கமெல்லாம் சம்பளம்! மாதம் 2/= ருபா (இரண்டு) கொடுக்க வேண்டுமென்பதே. மாதம் இரண்டு ரூபா கொடுக்கமுடியாத நிலையில் எங்கள் குடும்பம் இருந்தது.

300 குடிகள் புரோகிதம். சாப்பாட்டிற்கு அரிசி காய்கறி பஞ்சமில்லை. நிறையச் சமைத்து வீட்டுக்கு வருபவர்கள் எல்லாருக்கும் சாப்பாடு கிடைக்கும். ஆனால் சல்லிக்காசு கையிலிருக்கமாட்டாது.

எப்படியோ கந்தசுவாமி கோவிலில் நடந்த சம்ஸ்கிருத வகுப்பில் சேர்ந்து படித்து வந்தேன். கூடப்படிப்பவர்களுக்கு என்மேல் வெறுப்பு. என்றாலும் தன்னந்தனியனாக மற்றைய ஐவருடனும் சேராது இருந்து படித்து வந்தேன். என்னைப் பார்த்துவிட்டு வாத்தியார் “ஊமை ஊரைக்கெடுக்கும்” என்று கூறுவார். இப்படிக் கூறினாலும் என்ன காரணமோ என்னிடம் விருப்பமாக இருந்தார். அப்பொழுது நீர்வேலி மத்தியில் இருந்த வேதவல்லி டீச்சர் சம்ஸ்கிருதத்தை எங்கள் ஸ்ரீநிவாசசாஸ்திரிகளிடமே படித்து வந்தார். ஒரு நாள் சாஸ்திரிகள் என்னையும் வேதவல்லி அக்கா வீட்டிற்கு அழைத்துச் சென்று அவருடன் சேர்த்து பாடம் சொல்லிக் கொடுத்தார். என் குரு என்னிடமிருந்த பேரன்பை நடைமுறையில் காண்பித்தது இப்படித்தான். வேதவல்லி அக்கா பிரவேச பண்டித பரீட்சைக்கு தோற்றும்போது அவரே எனக்கும் விண்ணப்பம் நிரப்பி என்னையும் பரீட்சை எழுதவைத்தார். அப்பொழுது எனக்கு வயது 13. பரீட்சையில் சித்தியெய்தவில்லை. அடுத்தவருடம் பரீட்சையின் போது கோப்பாய் பண்டிதர் பஞ்சாட்சரசர்மாவிடம் வியாகரண பாடத்தை நன்கு கற்று 14 வயதில் பிரவேச பண்டித பரீட்சையில் சித்தியெய்தினேன்.

நான் வேத சிவாகமங்களில் பாண்டித்தியம் பெற்று புகழ் பூத்த சிவாசாரியனாக கும்பாபிஷேகம் முதலிய அதிமுக்கிய கிரியைகளை இயற்றி இலங்கையிலேயே மிகச்சிறந்த ஒரு குருக்களாக வேண்டுமென என் தந்தையார் கனவு கண்டார். இதற்காகவே அவர் எனக்கு சம்ஸ்கிருதத்தை முதன்மையாகப் பயிற்றுவித்தார். நான் ஆங்கிலக்கல்வி பயில்வதை விரும்பவில்லை. சம்ஸ்கிருதத்தோடு சோதிடபாடமும் ஆரம்பமாயிற்று. ஆரம்ப பாடமாக கிரகங்களின் ஆட்சிவீடு, உச்சவீடு முதலியன முதலில் நன்கு மனத்தில் பதிய வேண்டும். கிரகங்களின் ஆட்சிவீடுகள் இன்னின்னவை என்று சுலபமாக பதிந்துவிட்டது. ஆனால் கிரகங்களின் உச்ச வீடுகள் மனத்தில் நிற்க மறுத்தது.

இதற்கு நான் ஒரு வழிபண்ணினேன். இவை மனத்தில் நிற்கும்படி ஒரு செய்யுளாக அமைத்தேன் இதுதான் அந்தச் செய்யுள்

"மேடத்தில் கதிரோன் உச்சம் விளங்கிடும் மீனந்தன்னில்
ஏடவிழ் புகரோன், கன்னி நற்புதன் மகரச் செவ்வாய்
ஆடகப் பொன்னன் நண்டில் அம்புலி இடபந் தன்னில்
கேடு செய் சனியும் பாம்பும் கொண்டனர் துலாம் தேள் தன்னை."

இந்தச் செய்யுளை ஒரு சிறுகடதாசியில் எழுதி அதை என் தகப்பனாரிடம் கொடுத்து ஒன்றும் கூறாமல் நின்றேன்.

அதைப்படித்த என் தகப்பனாரும் மிகவும் சாதாரணமாக அது ஒரு சோதிட நூலில் உள்ள பாடல் அல்லவா எனக்கேட்டார். சிரித்துக்கொண்டே தலையாட்டிவிட்டு எனது கவிதா சக்தியை வியந்து மகிழ்ந்தவாறு ஓடிவந்துவிட்டேன்.

நான் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கல்விகற்று, பின் சிறிது காலம் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியிலும் ஆங்கிலக் கல்வி கற்றுவந்தேன்.

நான் வகுப்பில் திறமையாகப் படித்த காரணத்தினால் என் ஆசிரியர்கள் என்னை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்றால் எனக்கும் முன்னேற்றம் கூடுதலாக இருக்குமென்று ஊக்கப் படுத்தியதால், 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் யாழ் இந்துவில் படித்து பின், 1951 டிசம்பர் மாதத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்து பல திணைக்களங்களில் சேவையாற்றி 1989, ஆவணி மாதம் 37 வருட சேவையின் பின் ஓய்வு பெற்றேன்.

**- பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா.**



# ஒரு சம்பவம்

நான் யாழ் இந்துக் கல்லூரியில் இறுதி ஆண்டான S.S.C வகுப்பில் சம்ஸ்கிருதமும் ஒருபாடமாகப் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒருநாள் சம்ஸ்கிருத பாட ஆசிரியர் ஒரு பாடத்தித்திற்குத் தப்புத் தப்பாகக் கருத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். நான் பதின்னான்கு வயதில் சமஸ்கிருத பிரவேச பண்டித பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தபடியால் S.S.C தரத்திற்கான பாடத்திட்டம் மிகமிக எளிதாகவே இருந்தது. ஆசிரியர் சொன்ன பிழையான கருத்தைத் திருத்த எனக்குப் பயம்! அந்தக் காலத்து ஆசிரியர்கள் பொதுவாக கையில் பிரம்புடன் மகா பயங்கரமாகவே மாணவர் கண்ணில் படுவர்.

பிழையைத் திருத்தப் பயந்து இருக்கையில் நெளிந்து எழுவதும், இருப்பதுமாக இருந்தேன். இதை ஆசிரியர் அவதானித்து “என்ன ஐயர் நெளிகிறாய்” என்று வினாவினார். நான் அடக்கமாக அந்த இடத்திற்குச் சரியான கருத்தை எடுத்துக் கூறினேன்.

உடனே ஆசிரியர் உற்றுப் பார்த்துவிட்டு “நீ சொல்வதுதான் சரியான கருத்து. நான் சொன்னது பச்சைப் பிழை” என்று கூறியதோடு, இனிமேல் சம்ஸ்கிருத வகுப்பிற்கு வருவதில்லையென்றும் - ஐயரிடமே எல்லாரும் கேட்டுப் படிக்கும்படியும் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார். நானே சிலநாள் வகுப்பெடுத்தேன். ஆனால் ஒருவரைத் தவிர ஏனைய மாணவர்களெல்லாரும் சம்ஸ்கிரு பாடத்தைவிட்டு அகன்றுவிட்டார்கள். எஞ்சிய ஒரு மாணவர் என் வீட்டிற்கே வந்து உடனிருந்து தீவிரமாகக் கவனஞ் செலுத்திப் படித்தார்.

S.S.C பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தன. நாங்கள் இருவரும் பரீட்சையில் சித்தியெய்தியதுமல்லாமல் - இருவருக்குமே சம்ஸ்கிருதத்தில் Distinction - சிறப்புச் சித்தி கிடைத்திருந்தது.

மேலதிகமாக தமிழ் இலக்கியத்திலும் எனக்கு சிறப்புச்சித்தி (Distinction) கிடைத்திருந்தது.

தமிழ் இலக்கியத்தில் அதற்குமுன் யாருக்கும் Distinction கிடைத்ததில்லை.

இது ஒரு Record!

**- பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா.**

## சதாபிஷேகம் காணும் செம்மனச் செம்மல்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

இது, தெய்வப்புலவர் திருவள்ளுவர் தந்த பொன்னான திருக்குறள். இறைவன் மனிதனை, விலங்குகளைவிட மேலான பல குணாதிசயங்களுடன் படைத்துள்ளான். அவற்றைப் பயன்படுத்தி நாம் எமது வாழ்வைப் பயனுள்ளதாக அமைக்க வேண்டும்.

எம்மை இவ்வுலகத்துக்கு அறிமுகப்படுத்தியவர் எமது தாய் தந்தையர். அவர்கள் சொற்கேட்டு, இளமையிலே கல்வியில் ஊக்கம் கொண்டு நன்றாகப் படிக்க வேண்டும். அறிவை வளர்க்க வேண்டும், உயர் பட்டம் பதவிகளைப் பெறவேண்டும். உண்மை, நேர்மை, அன்பு, பாசம் என்பவற்றைக் கடைப்படித்து வாழ்க்கையை நல்லபடி நடத்த வேண்டும். சான்றோருடைய நூல்களைப் படித்து உன்னத வாழ்வினை வாழத் தலைப்பட வேண்டும். இறைபக்தி உள்ளவர்களாக வாழ வேண்டும். இறைவழிபாடு அத்தியாவசியமானது என்பதனை உணரவேண்டும். நாள் தவறாது இறைவனை வழிபடவேண்டும். மன அமைதியும், நிம்மதியும் தருவது இறைவழிபாடு என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். இறைவனை வழிபடின் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்", வாழ்வின் பயன் பெறலாம்.

இவற்றுக்கெல்லாம் உதாரணமாக இவற்றை எல்லாம் வாழ்வில் கைக்கொண்டு வாழ்ந்து வருபவர், பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியவரான திருமிகு நடனசபாபதி சர்மா அவர்கள். வேத விற்பன்னர், சற்குணசீலர் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கர் அவர் தம் பாரியார் சற்குணவதி ராஜலஷ்மி தம்பதிகளுக்குப் புத்திரனாக, நீர்வேலியில், இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர்தான் இத்திருமகன். இளமையிலேயே தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் மொழிகளை ஆர்வத்துடனும், திறமையுடனும் கற்று, இவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றுப் பெற்றோரின் பாராட்டைப் பெற்றனர்.

செந்தமிழைச் செவ்வனே கற்று, தன்னுடைய யௌவனப் பருவத்தில் கட்டுரை, கவிதை, சிறுகதை என்பவற்றைப் படைக்கும் ஆற்றல் மிகுந்தவராக விளங்கினார். இவற்றால் யாழ்ப்பாணத்திலே எழுத்துலகில் தமது தடம் பதித்தவர் ஆகவும், பாராட்டப்பட்டவராகவும் விளங்கினார். பசுமையான அந்த நாள்கள் இனிவருமோ என்ற ஏக்கம் அவர் மனதில் உள்ளது.

ஆங்கில மொழியில் கல்வி கற்று அரசசேவையில் சேர்ந்தார். அவ்வேளையிலே சாந்தம், நற்பண்பு, நல்லழகு, நல்லறிவு நிரம்பப்பெற்ற "கிரிஜாம்பிகை" என்னும் மங்கை நல்லாளை வாழ்க்கைத் துணைவி ஆக்கிவைத்தனர் பெற்றோர்.

சமஸ்கிருதத்தை கற்றுச் சிறந்த பாண்டித்யம் பெற்று, அம் மொழியில் கிரந்த லிபியில் பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். இவற்றைப் படித்துப் பயன்பெற, சமஸ்கிருத அடிப்படை அறிவு வேண்டும். ஆதலினாலே "க்ரந்தாக்ஷர மாலா" என்னும் அத்தியாவசியமான நூலை 1998 இல் எழுதி வெளியிட்டார்கள். அந்நூலின் முன்னுரையில் அந்நூலின் அவசியத்தை "கிரந்த எழுத்தில் அமைந்துள்ள ஆகமங்களையும், ஆகமக் கிரியைகள் சம்பந்தமான பத்திகளையும் சைவாகமக் கிரியா

நூல்களையும் பயில விரும்பும் இளையவர்களுக்கு உதவுமுகமாகவே இந்நூல் வெளியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது" என்று கூறியுள்ளார். அத்தோடு நின்றுவிடாமல் இந்நூலை எப்படிக் கற்றுத்தரவேண்டும் என்பதனையும் எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

சமஸ்கிருத நூலாசிரியராகப் பரிமளிக்கத் தொடங்கிய அவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

அரசாங்க சேவையில் நிதானமும் நேர்மையும் உடையவராக இருந்து, உயர்பதவி எய்திய இந்தப் பெரியவர் யாழ்ப்பாணத்திலேயே இவ்வுயர்பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

இவர் அரசசேவையில் இருந்த காலை இல்லற வாழ்வை, நல்லற வாழ்வாக வாழ்ந்ததன் பயனாக மூன்று அருமைப் புதல்வர்களும் அன்புச் செல்வங்களாகப் புதல்விகள் மூவரும் வாய்க்கப் பெற்றனர். அறுவரையும் நல்லபடியே கல்வி கேள்விகளில் சிறப்புறவைத்து, உரிய பருவத்திலே திருமணம் முடித்துவைத்து பேரக் குழந்தைகளையும் நிறையவே கண்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் முனைவர் ப.கோபாலகிருஷ்ணசர்மா அவர்கள் இவர்களுடைய மூத்தமகளின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டு நிலமை காரணமாக, மூன்று ஆண்மக்களும் இடம் பெயர்ந்து, பிரான்ஸ் நாட்டின் "தலூஸ்" நகருக்கு வந்துசேர்ந்தனர். சீரான முறையிலே வாழ்க்கை நடத்தும், இம்மூவரும் தங்கள் தாய் தந்தையரைப் பேணிப் பாதுகாப்பது தமது கடமை என்பதனை உணர்ந்து, அரும்பாடுபட்டு அவர்களை இங்கு வரவழைத்து, தம்மோடு வைத்துப் பேணி வருவது போற்றுதற்குரியது.

"வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளனையது உயர்வு"

என்றல்லவோ கூறி இருக்கின்றார் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர். உடல்நலம் சிறப்பாக இல்லாதிருக்கின்றபோதிலும், தன்னால் இயன்ற சேவையை எமது சமூகத்தினருக்கு ஆற்றவேண்டும் என்னும் தணியாத தாகத்தினால் இத்தனை நூல்களைப் படைத்துள்ளார்கள். தன்னுடைய நேரத்தையும் உடல்நலத்தையும் பொருளையும் இவற்றிற்காகச் செலவிட்டுள்ளார் என்பதனை எண்ணும்பொழுது அவர் எத்தனை பெருமைக்கும் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர் என்பது புலனாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால்
வேறொன்றறியேன் பராபரமே" எனற எண்ணத்தோடு வாழ்பவர் இப்பண்பாளர்.

என்னுடைய தந்தையார் வழி மூதாதையரின் சந்ததியில் வந்துள்ள அன்புக்கும், பாசத்துக்கும், ஆற்றலுக்கும், பாராட்டுக்கும் உரிய நல்லறிஞர் சமூக சிந்தனையாளர் உயர்திரு நடனசபாபதி அண்ணா அவர்களும் பாரியாரும், நோய்நொடி இன்றி நீடு வாழவும், எமது வருங்காலச் சந்ததியினருக்கு இன்னும் பயனுள்ள நூல்களைத் தரவும் "சதாபிஷேகம்" காணும் இவ்வேளையில் அவருக்குத் தொலையாத செல்வமும் நிலையான இன்பமும் கிட்டவேண்டும் என்று இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

சுபம்.

பாரிஸ், பிரான்ஸ்.
09.06.2010

**ப.சிவஞானசுப்பிரமணியம்**

# சதாபிஷேக நாயகர்

# பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மாவினால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்கள்


1. க்ரந்தாக்ஷர பாடமஞ்சரி
2. க்ரந்தாக்ஷர மாலா
3. ஸ்வஸ்தி ஆபஸ்தம்ப சிராத்தம்
4. தீப பூஜை
5. ஆபஸ்தம்ப தகன ஸம்ஸ்காரம்
6. ஸ்வஸ்தி ஆபஸ்தம்ப பார்வண விதான ச்ராத்தம்
7. மஹாளய ச்ராத்தம்
8. நியந்த்ரி நித்ய கர்மானுஷ்டான மஞ்சரி (1)
   யசுர் ஆபஸ்தம்ப உபாகர்ம பிரயோகம்
9. நியந்த்ரி நித்ய கர்மானுஷ்டான மஞ்சரி (2)
   அமாவாசை தர்பணம்
10. சீமந்தம், ஜாதகர்மா









விழாநாயகரின் மாண்புறு பெற்றோர்.




விழாநாயகரின் இளமைத் தோற்றம்





இல்லற வாழ்வின் இனிய ஆரம்பம்




குருவுடன் சேர்ந்து குறைவிலா ஆய்வு
(பிரம்மஸ்ரீ கி.சீதாராம சாஸ்திரிகள்)





ஆன்மீக நிகழ்வுகளில்
அருள்பெறும் நாயகர்







அறிவின் தேடலில் அகமுக நாட்டத்தில்......




இலக்கிய நிகழ்வில் இன்புறும் ஏந்தல்.

அறுபதின் நிறைவில்
அகமும் நிறைதல்.







பிரான்ஸில் நடைபெற்ற திருமணப் பொன்விழா (29.04.2006)



# இயல் 3.
# பதம்



## ஆயிரம் பிறைகண்ட அந்தணரின் ஆக்கங்களின் தொகுப்பு

**ஒரு சிறுகதை எழுத்தாளர் என்ற வகையில் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா அவர்களைப்பற்றி எழுத்தாளர் செங்கை ஆழியான் அவர்களின் குறிப்புரை இங்கு இடம் பெறுகிறது.**

"நடனம். இவரின் இயற்பெயர் நடனசபாபதி ஐயர். ஈழகேசரியில் நினைவுத்திரை (1946), சிதைந்த வாக்கு (1947) ஆகிய இரு சிறு கதைகளை எழுதியுள்ளார். மறுமலர்ச்சியில் இவர் எழுதிய 'வாழ்வு' என்ற சிறுகதை வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு வெளியிட்ட மறுமலர்ச்சிச் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது. ஓய்வுபெற்ற அரச பணியாளர் எழுதிய சிறுகதைகள் ஐந்திற்குள். ஆயினும் சிறுகதைக்குரிய வடிவத்தையும் உத்தியையும் தெரிந்து வைந்திருக்கிறார் என்பது அவரது சிறுகதைகளிலிருந்து புலனாகின்றது.

- செங்கை ஆழியான்.

**சிறுகதை**

# வாழ்வு

பொழுது புலரும் சமயம். தெருவிலே யாரோ பேசிக்கொண்டு போனார்கள். "ஆரோ ஒரு கிழவன், கோயில் மடத்திலே செத்துக் கிடக்கிறான். ஊரிலே இருக்கிறவர்கள்தான் அதைப் போய் ஏதும் 'ஒரு வழி' பண்ணவேணும்....."

நான் திடுக்கிட்டேன். கோயில் மடத்திலா?... கிழவனா?... '
நேற்றுப் பின்னேரம் நடந்ததெல்லாம் என் நினைவுக்கு ஓடி வந்தன.

முதல்நாள் பின்னேரம். நாங்கள் நாலைந்து பேர் பாடசாலையிலிருந்து வீடு நோக்கி வந்துகொண்டிருந்தோம். மடத்தின் அருகிலுள்ள அரச மரத்தடியில் வழக்கம் போல் சிறிது நேரம் பேசிக்கொண்டு நின்றோம். அப்பொழுது ஒரு பயங்கரமான இருமல் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தோம். அந்த சப்தம் மடத்துத் திண்ணையிலிருந்து வந்துகொண்டிருந்தது. திண்ணையின் ஒரு பக்கத்தில் ஓர் உருவம் சுருண்டு கிடந்தது. அந்த உருவம் ஒரு கிழவன். அது யாரென்றறிய ஆவல் உண்டாயிற்று. எல்லோரும் மடத்துத் திண்ணையை அடைந்தோம்.

அவன் இருமியபொழுது அவனுடைய மூச்சு அடங்கிவிடும் போலிருந்தது. இருமும்பொழுதெல்லாம் அவனது உடல், கடல் அலை போல் எழுவதும் விழுவதுமாக இருந்தது. முன் ஒரு நாளும் அவ்விதக் காட்சியை நான் கண்டதில்லை.

அவன் வெறுந்தரையில் சுருண்டு படுத்திருந்தான். மறுபக்கமாகத் திரும்பிக் கிடந்தபடியால் அவன் எங்களைக் காணவில்லை. கொசு ஒரு புறம் அவனைத் துன்புறுத்தியது. கொசுக்களைத் துரத்துவதற்காக அவன் ஏதோ இலைகுழைகளைக் கையில் வைத்து அசைத்துக் கொண்டிருந்தான்.

ஒருவாறு இருமலின் கொடுமை தீர்ந்ததும் இந்தப்பக்கமாகத் திரும்பினான். அப்பொழுது நண்பன் சோமு கேட்டான். "உங்களுக்கு எந்த ஊர்? நீங்கள் இவ்வித வருத்தத்துடன் எங்கு வந்தீர்கள்?"

நண்பனுடைய கேள்விக்குப் பதிலேயில்லை.

சிறிது பொறுத்து "பள்ளிக்கூடத்திலிருந்தோ வருகிறீர்கள்?" என்ற பதிற் கேள்வி அவனிடமிருந்து வந்தது.

"ஆமாம்" என்றோம் ஒரே தருணத்தில்.

திரும்பவும் நண்பன் தன்னுடைய கேள்வியைப் போட்டான்.

கிழவன் ஒருமுறை செருமி, எங்களெல்லோரையும் ஒரு பார்வை பார்த்து விட்டுச் சொல்லத் தொடங்கினான்.

"நான் இருப்பது தீவுப்பக்கம். முகாந்திரம் - சுப்பையாபிள்ளை என்று கேள்விப் பட்டிருப்பீர்கள்... அவன் எனது மகன்தான். சிறு வயதிலேயே நான் எனது தாயை இழந்துவிட்டேன். என்னைத் தவிர மற்றைய உடன் பிறந்தோரும் என்னை விட்டு ..."

என்று முடிக்குமுன் ஒருபாட்டம் இருமல் வந்து அவனை உலுப்பிவிட்டுப் போனது. நன்றாக இருமிக் காறித்துப்பிவிட்டு அவன் தனது கதையைத் தொடர்ந்தான்.

"அவளும், என்னையும் என் இரு பிள்ளைகளையும் பரிதவிக்கவிட்டுப் போய்விட்டாள். சுப்பையாதான் இளையவன். மூத்தது ஒரு பெண் குழந்தை. சுப்பையாவுக்கு இரண்டு வயதாக இருக்கும்போது என் மனைவி இறந்து போனாள். ஆகையால் நான் படாத பாடுபட்டுக் குழந்தைகளை வளர்த்தேன். என் மகன் சுப்பையாவைப் போதியளவு இங்கிலீசு படிக்க வைத்தேன்.

"படிக்கும் பொழுதே அவன் பெரிய 'காவாலி'யாகி விட்டான். என்றாலும் படிப்பை மட்டும் கைவிடவில்லை. அதன் பலன்தான் இப்பொழுது முகாந்தரம் என்ற பட்டத்தோடு...." திரும்பவும் ஒருமுறை இருமல் வந்து பெரும் புயல்போல் அடித்துவிட்டுச் சென்றது.

"ஏதோ மேல்வகுப்புச் சோதனை 'பாஸ்' பண்ணிவிட்டுச் சும்மா இருந்தான். அந்த நாட்களில் அவன் செய்த காவாலித்தனத்திற்கு அளவில்லை.

என்ன சொன்னாலும் எதிர்த்து ஏதாவது சொல்லாமல் விடுவது அவனது சுபாவத்திலில்லை. சிறிதும் என் புத்திமதி கேட்பதில்லை. இதைக் கண்டு என் மனமிரங்கியது. இந்த நிலையில் என் மகளுக்குக் கல்யாணம் செய்யக்கூடிய வயது வந்தது. அப்புவும் கட்டாயப்படுத்தினார். தான் கண் மூடுமுன் அவளுடைய கல்யாணத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று. எங்கெங்கோ அலைந்து மகளுக்கும் ஒரு மாப்பிளை தேடிக் கல்யாணம் செய்து வைத்தேன். கல்யாணம் முடிந்து சில நாட்களில் மகளையும் கூட்டிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டான் அவன். நான் தடுத்துச் சொன்னேன். "தம்பீ எனக்கு வயது அறுபத்து மேலாகிவிட்டது. அப்புவும் படுத்த படுக்கையாய் விட்டார். நீங்கள் இப்படி அந்தரத்தில் விட்டுச் செல்வது சரியல்ல" என்று தடுத்தும் கேளாமல் அவன் ஒரே பிடிவாதமாக நின்று மகளையும் கூட்டிச் சென்றுவிட்டான். சில நாளின்பின் அப்புவும் இறந்துவிட்டார்.

என் மகனை நினைக்கும்போது என் மனம் கலக்கமுற்றது. அவனுக்குப் பெருந்தொகைச் சீதனத்தோடு ஒரு பெண்ணையும் பார்த்துக் கல்யாணம் செய்துவைத்தேன். அவனுடைய காவாலித்தனங்கள் முற்றாய் அடங்கின. அதேபோல் அவனும் பெருந்தொகைச் சீதனத்தால் அகங்காரம் பிடித்த மனைவிக்குக் கீழ் பெட்டிப் பாம்பாய் அடங்கினான். அவள் இட்டதே சட்டம்.

அவளுடைய இஷ்டம் இவனுடைய சொர்க்கம். வேலைக்குப் போகும் நேரந்தவிர ஏதாவது படித்தவண்ணமே இருப்பான். அவனது விருப்பம் படிப்பிலே தீவிரமாக இருந்தது. இதைப்பார்க்க நான் மிகச் சந்தோஷமடைந்தேன். ஆனால் நாளாந்தத்தில் திரும்பவும் துக்கம் என்னைப் பீடிக்கத் தொடங்கியது.

அப்பொழுதெல்லாம் நான் ஒரு வேலையும் செய்வதில்லை. செய்ய இயலுவதுமில்லை. வீட்டுக்குப் பாரமாக மட்டும் இருந்தேன். என்னை இருமல் பிடித்துக் கொண்டது. பின்பு கசமாக மாறியது.

என் மருமகள் பொல்லாத அகங்காரி. எனக்குச் சாப்பாடு போடுவதென்றால் எரிந்து விழுவாள். ஏசுவாள். திட்டுவாள். இல்லாத பொல்லாததெல்லாம் மகனிடம் சொல்லுவாள். அவளுடைய அக்கிரமங்களை அவன் கேட்பதில்லை. அவன் தான் பார்க்கிற வேலை போதாதென்று ஏதோ மேல் உத்தியோகத்திற்குப் படித்துக்கொண்டிருந்தான். அவளுடைய முறைப்பாட்டினால் தனது படிப்புக்கு ஏதாவது தடைவந்தால் அந்த ஆத்திரத்துக்காக என் மேல் சீறுவான். இது தான் எனக்குச் செய்த நன்மை!

ஒருநாள் ஏதோ அற்பவிஷயம் பெரிதாகிவிட்டது. கைகேசி இராமனுக்கு உத்தரவு இட்டது போல் எனது மருமகள் என்னை வீட்டை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டாள்...

நான் வெளிக்கிளம்பி மகளுடைய வீட்டிற்குப் போனேன். நான் போகக்கூடிய இடம் அது ஒன்றுதான் இருந்தது. மகளும், மருமகனும் பட்டினத்திலே குடியிருந்தார்கள். அவர்களுக்குக் குழந்தை குட்டி ஒன்றுமில்லை. மருமகனுக்கு கச்சேரியில் உத்தியோகம். நான் அங்கே போனபோது மகள்தான் ஏதோ வீட்டுக் காரியங்கள் பார்த்துக் கொணடிருந்தாள். நான் போனவுடன் எனக்குப் பெரிய உபசாரங்கள் செய்தாள். என்னுடைய நிலைமையை அறிந்து மிக வருத்தமுற்றாள். அவள் தமையனைப் போலல்ல. நற்குணமுள்ளவள்.

இனி எனது பிற்காலத்தை இங்கே கழித்துவிடலாம் என நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டு படுத்திருந்தேன்.

பின்னேரம் என்னுடைய மருமகன் கச்சேரியிலிருந்து வந்தான். என்னைக் கண்டதும் அவனுடைய முகம் மாறிவிட்டது. நான் அங்கே தங்கப் போவதை அறிந்தபோது அவளோடு இரகசியமாக ஏதோ வாதாடினான்.

மறுநாள் என் மகள் என்னிடம் வந்தாள், ஏதோ கதைப்பதற்கு. புருஷனுடைய ஆணைக்கும், தகப்பனுக்குச் செய்ய வேண்டிய கடமைக்கும் இடையில் அவள் பரிதவிப்பது நன்றாகத் தெரிந்தது.

“அப்பு! நான் என்ன செய்ய? அவர் தன்னுடைய சிநேகிதர்மாருக்கு இன்றைக்கு

இங்கே 'டின்னர்' கொடுக்கப் போகிறாராம். அவர்களிலே சிலர் கொஞ்ச நாளைக்கு இங்கேதான் தங்கப் போகிறார்களாம். நீ எங்கே அப்பு இருக்கப் போகிறாய்?"என்று கேட்டுவிட்டு அடக்க முடியாத துக்கத்தால் விம்மினாள்.

"எனக்குத்தான் இடமில்லையா? எங்கேயாவது இருந்துவிட்டுக் கொஞ்ச நாளைக்குப் பிறகு ஆறுதலாக வருகிறேன்" என்று அவளுக்குச் சமாதானம் சொன்னேன்.

"இந்தா அப்பு இதைச் செலவுக்கு வைத்துக்கொள்" என்று ஐந்து ரூபா காசை நீட்டினாள். எனக்கு ஏன் காசு? நான் காசையா எதிர்பார்த்தேன்? இந்த வயதுபோன காலத்தில் அன்பு ஆதரவான ஒரு துணையை அல்லவா எதிர்பார்க்கிறேன்! பாடுபட்டு வளர்த்த பிள்ளைகள் ஒன்றினுடைய பூரண அன்பை - ஆதரவை அடையாத இந்தப் பாவிக்கு இந்த ஐந்து ரூபா காசு எதற்கு?

"எல்லாம் இருக்கட்டும் பிள்ளை! பிறகு பார்த்துக் கொள்ளுவம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டேன்.... இன்றைக்கு இங்கு கிடக்கிறேன். நாளைக்கு செல்வச்சந்நிதி முருகனிடம் போகப் போகிறேன். நான் வருத்தக்காறன். மற்றவர்களால் விரும்பக்கூடிய எவ்விதத்திலும் நானில்லை. நடுச் சமுத்திரத்தில் விடப்பட்ட ஒற்றைக் காகம் போல் அலைகிறேன். என்னை என் அப்பன் - முருகன்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் அவனிடம் தான் போகப் போகிறேன். அப்பா! முருகா!!...."

அவனுக்கு இருமல் தொடங்கிவிட்டது, மிகக் கடுமையாக. நம்மால் அந்தக் கோரத்தைத் தடுக்க முடியுமா? அதைப் பார்க்கச் சகியாமல் வந்து விட்டோம்.

சிந்தனை கலைந்தது. மடத்தடிக்குப் போய்ப் பார்ப்பதற்காக எழுந்தேன்.

அப்பொழுது பத்திரிகைக்காரப் பையன் தினசரியைச் சுழற்றி எறிந்துவிட்டுப் போனான். பத்திரிகையைப் பிரித்தபோது அதிலிருந்து "அரசர் பிறந்த தினப்பரிசாக 'முதலியார்' பட்டம் பெற்ற முகாந்தரம் சுப்பையாபிள்ளைக்குப் பகிரங்க வரவேற்பு நடத்தப்படும்" என்ற செய்தி என் கவனத்தை இழுத்தது. திருப்பித் திருப்பிப் பார்த்தேன்.... இங்கே தகப்பன் மடத்தில் கிடந்து 'மனிதன்' என்ற பெயரையும் இழந்து 'பிணம்" என்னும் பெயர் பெறுகிறான். அங்கோ மகன் முகாந்தரப் பட்டத்திலிருந்து முதலியார்ப் பட்டத்திற்கு ஏறுகிறான். அங்கே அவனை வரவேற்க மங்கள வாத்தியங்கள் முழங்கப் போகின்றன. இங்கோ ஒரு சாவீட்டுப் பறைதானுமில்லை.

என்ன உலகம் இது?

## சிறுகதை

# பிராயச்சித்தம்

தேர்த்திருவிழாவில் கலவரம்!

ஆலயத்தில் பிரவேசித்த ஹரிஜனன்

யாழ்ப்பாணம், நவம்பர் 16

இன்று யாழ்ப்பாணம்...... ஊர்க் கதிரேசன் கோவில் தேர்த் திருவிழா நடந்துகொண்டிருக்கையில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ''கந்தன்'' என்பவன் ஆலயத்தினுள்ளே புகுந்துவிட்டான். அவனை அறிந்த ஒருவர் அவனை அடிக்க, உடனே மற்றவர்களும் விஷயத்தை அறிந்துகொண்டு, அவனைப் பலமாகத் தாக்கிவிட்டனர். பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று, அபாயகரமான நிலையில் அடிபட்டவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

தீண்டத் தகாதவன் ஆலயத்துள் பிரவேசித்ததால் கோயிலின் புனிதம் கெட்டுவிட்டதென்றும், ஆகையால் உடனே பிராயச்சித்தம் செய்தாலன்றித் தேர் இழுக்கப்படமாட்டாதெனவும் கோயில் முதலாளி அறிவித்துவிட்டார். அடிபட்டவனின் சகோதரன் பிராயச்சித்தத்துக்கு ரூபா 50 கொடுத்தபின்னர், பிராயச்சித்தம் நடந்து தேரும் இழுபட்டது. அடிபட்டவனுக்கு புத்தி மாறாட்டம் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளப் படுகிறது.

மேற்படி செய்தி பத்திரிகையில் வெளியாகி மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் இப்பொழுதும் நேற்றைய சம்பவம் மாதிரித்தான் அந்த ஊர்ச்சனங்களுக்குத் தோன்றிற்று.

இந்தியாவில் பல முக்கிய ஸ்தலங்கள் ஹரிஜனங்களுக்காகத் திறந்து விடப்பட்டன. இதையெல்லாம் பத்திரிகைகள் மூலம் அறிந்த கதிரேசன் கோவிற் பக்தர்கள் நையாண்டியாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். "இந்த விஷயம் மட்டும் எங்கடை ஊர்களிலே நடக்கமாட்டுது. அண்டைக்கு அவனொருத்தன் கோயிலுக்குள்ளை வரமுன்னம் எங்கடை பெடியள் அவனை என்ன பாடுபடுத்தினாங்கள் தெரியுமே? உந்தக் காரியம் மட்டும் இங்கை நடக்கமாட்டாது" இவ்விதம் கதிரேசன் கோவில் பக்தர்கள் வருங்காலத்தை அறியாது பேசிக்கொண்டனர். ஆனால் வெகுசில நாட்களுக்கிடையிலேயே ஒரு அதிசயக்கதை அந்த ஊரில் பரவலாயிற்று.

கதிரேசன் கோவில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் திறக்கப் படப் போகின்றதாம்.

பிராயச்சித்தத்துக்காக ஐம்பது ரூபா பணம் பெற்ற பழைய முதலாளி, பணம் வாங்கிய அடுத்த மாதமே திடீரென்று சிவலோக யாத்திரை போய்விட்டார். சிவலோகத்திலே, அவரைத் தீண்டாதானாகப் பாவித்து வெளியிலே நிறுத்தி வைத்திருப்பதாகவும் சில சீத்திருத்தக் காரச் சிறுவர்கள் சொல்லித் திரிந்தார்கள்!

இப்போது அவருடைய மகன்தாக் கோவில் முதலாளி. இவர் தந்தையைப் போலில்லாமல், பரந்த நோக்கமும், சீர்திருத்தவாதியுமாயிருந்தார். தந்தை செய்த அநியாயங்களுக்குப் பிராயச்சித்தம் செய்ய இவர் விரும்பினார். அதற்காக யாரையும் பணம் கொண்டுவரும்படி கேட்கவில்லை! கதிரேசன் கோவிலை ஹரிஜனங்களுக்கும் திறந்துவிடவேண்டுமென்று தீர்மானித்தார்.

இடையில் மகாத்மாஜியின் மரணச்செய்தியும் பேரிடிபோல் வந்துசேரவே இதுவே தக்கசமயமென்று, கோயிலைத் திறப்பதற்குத் தேதியும் குறிப்பிட்டு, விளம்பரப்படுத்திவிட்டார்.

இதைக் கேள்வியுற்ற அந்த ஊரின் அஞ்ஞானப் பக்த கோடிகளும், மற்றைய சண்டித்தனக்காரர்களும் மிகவும் சீற்றமுற்றுத் தமது புஜங்களைத் தட்டி, மீசையை முறுக்கி, வீரகர்ஜனை புரிந்து நிமிர்ந்து நடந்தனர். "ஆஹா, எளிய பயல்கள் கோயிலுக்குள் புகுவதைப் பார்ப்போம்" என்று வீரவார்த்தைகளை மொழிந்தனர்.

குறிக்கப்பட்ட நாளில் கோவில் ஹரிஜனங்களுக்காக திறக்கப் பட்டது. அன்றைய தேர்த்திருவிழாவிலும் பார்க்க இன்று ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது.

பொலிஸ் பாதுகாப்பும், சீர்திருத்தவாதிகளின் ஆதரவும், எதிரிகளின் வீறாப்புக்களை ஒடுக்கிவிட்டன.

தீபாராதனை செய்யும் சமயம் கோபுர வாசலில் "அரோகரா அப்பனே முருகா" என்று பலத்த சப்தம் ஏற்பட்டது. எல்லோரும் கோபுர வாயிலை நோக்கினர். அன்று அடிபெற்ற கந்தன் பக்தி பூர்வமாக விழுந்து வணங்கி ஆனந்தன் கண்ணீர் சொரிய எழுந்து நின்றான். அன்று ஒருவரும் அவனை அடிக்கவில்லை. அவன் பல தேவார திருவாசங்களைப் பாடினான்.

அன்று கந்தனை அடித்து வெளியில் துரத்தியவர் இன்று கந்தனைக் கண்டதும் தானாகவே வெளியில் வந்தார். அவருடைய வாய் முணுமுணுத்தது. "கலி முத்திவிட்டது இதுக்கு யார் என்ன செய்யலாம்" இதைச் சொல்லிக்கொண்டே அவர் வீட்டை நோக்கி நடந்தார்.



சிறுகதை

## தரிசனம்

டேய் வரதா, இங்கே வாடா, மாடு அறுத்துப் போட்டுது ஓடிவா” லட்சுமியம்மா உலகம் அழிந்து விட்டதுபோல் அலறினாள். கோவில் தெற்கு வாசலில் நின்ற இராமலிங்கய்யர் “டேய் வரதா நீ இன்னும் குளிக்கலையா? பூசைக்கு நேரமாகி விட்டது. இன்னும் அமுது வைக்கவில்லையா?” என்று கத்தினார்.

இராமலிங்கய்யரின் வீடு கோவில் மேற்கு வீதியில் தென்மேற்கு மூலையை ஒட்டி இருக்கும். வீட்டுக்கு முன் நிறைய பூமரங்கள், செம்பருத்தி, நந்தியாவட்டை, மல்லிகை எல்லாம் வைத்து உண்டாக்கியிருக்கிறார்கள்.

ஐயரம்மாவோ விடாமல் “டேய் மாட்டைப் பிடியடா பூமரங்களைத் தின்று விடும். இந்த நிமிஷமே எல்லா மரத்தையும் அழித்துவிடும். பிடி பிடி” என்று கத்தினார். வரதன் ஒன்றுந் தெரியாமல் திகைத்து நின்ற அந்த நேரம் அறுத்த மாடும் அவனுக்கருகில் வந்தது. வரதன் கயிற்றை எட்டிப் பிடித்தான். கட்டை அறுத்துச் சுதந்திரம் பெற்றமாடு கைக்கு அகப்படுமா? பாய்ந்து ஓடத்தொடங்கியது. வரதன் விடவில்லை. ஆனால் மாடோ பெரிய கேப்பைமாடு, கயிறோ கழுத்துக்கயிறு மாடு அடங்காது உன்னி இழுத்தது. வரதனுக்கு பன்னிரண்டு வயதுதான் இருக்கும். மாட்டை அடக்க அவனிடம் பலம் இல்லை. அவனும் பிடித்த பிடியை விடவில்லை. மாட்டோடு இழுபட்டுக் கொண்டு போனான். மாடு கோயில் பக்கமாத் தாவியது. தெற்கு வாசலில் நின்ற ஐயர் ஓடி வந்து வரதனோடு சேர்ந்து கயிற்றைப் பிடித்தார். மாடு தன் திசையை மாற்றி ஐயர் நின்ற பக்கமாகத் தாவியது. இராமலிங்க ஐயருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. செயலற்று நின்றார். இதற்கிடையில் மாடு ஐயரை இடறி இழுத்துவிட்டு கயிற்றையும் பறித்துக் கொண்டு ஓடியது. ஐயருக்கு விலாவிலே நல்ல அடி. கால் படத்திலே மாட்டின் குளம்பு மிதித்ததால் பெரிய காயம், காலை எடுத்து வைக்க முடியவில்லை.

இராமலிங்க ஐயரது கோவிலுக்கும் வீட்டுக்குமிடையே இருந்த இந்த வெளி வீதி வழியே என்னேரமும் காரும், வண்டியும், மோட்டார் சைக்கிளுமாக சனப்புழக்கமாக இருக்கும். எழுந்திருக்கமுடியாமல் இருந்த ஐயரை அவ்வழியே வந்த இரண்டு வாலிபர்கள் தூக்கி வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். வரதன் திகைத்து நின்றான். இதெல்லாம் கடைசியில் தனக்கெதிராகத்தான் திரும்பும் என்று அவனுக்குத் தெரியும், பயந்தவாறு நின்றான். ஐயரின் நிலையைப் பார்த்ததும் அம்மாவுக்கு மாட்டின் மேல் ஆத்திரமாக வந்தது. மாடு தான் அங்கில்லையே. வரதன்தான் முன்னுக்கு நின்றான். எல்லா ஆத்திரமும் காரணமில்லாமல் வரதன் மேல் பாய்ந்தது. “பாத்தியாடா நான் வேளைக்குச் சொன்னேனே மாட்டைப் பிடி, மாட்டைப்பிடியென்று. இப்ப என்ன நடந்தது பாத்தியா” என்று தாவி ஓடிப் போய் வரதனுக்கு அகப்பட்ட இடமெல்லாம் அடிஅடியென்று அடித்துவிட்டாள். அதுமட்டுமல்லாமல் இவ்வளவு நேரமும் அவனை குளிக்க விடமல் அதைச் செய் இதைச் செய் என்று வேலை ஏவியது தான் தானே என்பதையும் மறந்து “டேய் இன்னும் குளிக்கேல்லையாடா” என்று கேட்டு மேலும் நான்கு ஐந்து தடவை

முதுகில் மொத்தினாள். வரதனுக்குத் தினமும் இப்படி ஏதாவது நடந்து அடியும் உதையும் கிடைப்பது வழக்கம்தான் என்றாலும் அழுது கொண்டே கிணற்றடிக்குக் குளிக்க ஓடினான். வரதன் இராமலிங்க ஐயரது பிள்ளை அல்ல. அவன் பிறந்து ஒரு வருடத்தில் தாய் இறந்துவிட்டாள். வரதனின் தந்தை சில காலம் வரதனைத் தானே வளர்த்தார். இது அவருக்கு மிகக் கஷ்டமாக இருந்தது. வேறு பிள்ளைகள் இல்லை. மனைவி இல்லாதவராததால் அவரைக் குருக்கள் வேலைக்கு யாரும் அழைக்கமாட்டார்கள். பிழைப்பும் இல்லை. அவருக்கு வயது 35க்குள் தான் இருந்தது. வரதனுக்கு ஒன்பது வயதாகும் வரை வளர்த்துக் களைத்துப் போன தந்தை அவனைக் கிட்டிய உறவினரான இராமலிங்க ஐயரிடம் கண்கலங்கியபடியே ஒப்படைத்துவிட்டு இந்தியாவுக்குப் போய் இரண்டாந்தாரமாக ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு வந்து எங்கோ தூர மட்டக்களப்புப் பக்கம் போய்விட்டார்.

இங்கே வரதன் இராமலிங்கையர் வீட்டில் அவருக்கு மிகப்பிரயோகப்பட்டான். இராமலிங்கையருக்கு பிள்ளைகளிருந்தாலும் அவர்களை அவர் கோவில் பக்கம் போக அனுமதிப்பதில்லை. இந்தப் பிழைப்பு என்னோடு முடியட்டும். என் பிள்ளைகள் யாரும் எனக்குப் பிறகு இந்தத் தொழில் பார்க்கக் கூடாது. என்று அடிக்கடி கூறுவதோடு அவர்களை மாறிமாறி டியூசன்களுக்குப் போய்ப் படித்துப் பெரிய பெரிய உத்தியோகத்திற்குப் போக வேண்டும். அவர்களை அந்த விதமாகத் தயார் பண்ணவேண்டுமென்பது ராமலிங்கையரினதும் இலட்சுமி அம்மாளினதும் ஒரே விருப்பம்.

இராமலிங்கையர் பூஜை செய்த கோவில் மிகப் பெரியது. பழைமையானது பல சன்னிதானங்கள், நவக்கிரகம் அறுபத்துமூவர் இப்படிப் பெரிய எடுப்பில் எல்லாம் அமைந்தது. அந்தக் கோயிலை இராமலிங்கையரது முன் சந்ததியருள்ளே ஒரு பெரியவர் ஊரூராகச் சென்று, 'காசு தண்டியும்' மலேசியாவிலுள்ள சைவ அன்பர்கட்கெல்லாம் நோட்டீஸ் அனுப்பியும் நிறையக் காசுசேர்த்து இவ்வளவு பிரமாண்டமாகக் கட்டியதுடன் அவருக்குப் பின்வந்த அவரது பாட்டன் பூட்டன்மாரும் திருப்பணித் தொண்டை விடாது வசதியான பணக்காரர்கள், வர்த்தகர்கள், நேர்த்தி செய்பவர் இப்படிப் பல திறத்தவரிடமும் காசு தண்டிச் சேர்த்துப் புதுப்புதுத் திருப்பணிகள் செய்து வந்தனர். அந்தக் கோவிலின் வடக்கு வீதியில இரண்டு பரப்பு நிலம் தருமசாதனம் செய்த அம்பலவாணரின் மகன் பொன்னையா பழைய உறுதியைக் காட்டி கோவில் தன்னுடையது என்றும் தானே கோவில் முதலாளி என்றும் சண்டை பிடித்து வழக்காடிக் கொழும்பிலுள்ள தனது சொந்தக்காரரான துரைமாரின் அரசியல் செல்வாக்கினைப் பிரயோகித்து கோவில் எசமானாகினான். அவர் தானாகக் கோவிலுக்கு ஒன்றும் செலவு செய்யமாட்டார். எசமானானதும் முதல் வேலையாக சங்காபிஷேகத்துக்கு ஒரு ரேட் அபிஷேகத்திற்கு ஒரு ரேட் ஆயிரம் நாம அர்ச்சனைக்கு ஒரு ரேட், இப்படி பல ரேட்டுக்களில் டிக்கட் அடித்துக் கொடியவனான ஒரு மனிதனைத் தேடிப் பிடித்து கணக்குப்பிள்ளையாக்கி, ஹிட்லர் இராச்சியமாக கோவிலை நடத்திக் கொண்டு வந்தான்.

இப்படியான அனுபவங்களினால் விரக்தியடைந்தாலும் ஐயர் குடும்பம் வேறு ஊருக்கு ஓடாமல் அடங்கி ஒடுங்கிப் பரம்பரை பரம்பரையான பூசை வேலையைப் பார்த்து வந்தது. எசமான் பொன்னையா சுவிற்சிலாந்திலிருந்து லீவில் வந்த அந்த ஊர்ப் பொடியனொருவனிடம் கோவிலுக்கு ஒரு மணிக்கூடு வேண்டுமென்று சொல்லி

வாங்குவித்து கோயில் மண்டபத்தில் மாட்டினார். அன்றே ஐயருக்கு ஆரம்பித்துவிட்டது கெட்ட காலம்.

இனிமேல் இந்தக் கோவிலில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் போல் நிமிஷம் தவறாமல் பூசைகள் நடக்கவேண்டுமென்று கட்டளை போட்டதோடு இவ்வளவு காலமும் மூன்று காலப் பூசையாய் இருந்ததை மாற்றி ஆறு காலப் பூசையாய் ஆக்கிவைத்தார். மேலும் தனக்கு இறைவனே தனது கனவில் தோன்றிப் பரிதாபமாக தனது வயிற்றைத் தொட்டுக்காட்டி அமுது போதாது என்று கூறப்பட்ட வசனமானது அவர்களது உள்ளத்தை மெழுகாய் உருக்கிவிட்டது. ஆனால் கனவில் தோன்றிய கடவுள் மிகவும் சுயநலமாக தனக்கு நிவேத்தியம் போதாது என்ற விசயத்தை சொன்னதே தவிர ஐயருக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் போதாதென்ற விசயத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லை. இந்த புது நியதியால் ஐயர் மிகக் கஷ்டப்பட்டார். ஊர் புரோதகிதர் வேலை பார்க்க வேண்டும், அத்தோடு தோய்த்துக் குளித்து ஆறுகாலப் பூசையை எப்படித்தான் செய்து முடிப்பது? அதுவும் எல்லாமாகப் பதினைந்து சந்நிதானங்களைத் திறந்து பூட்டி ஒவ்வொரு சாமிக்கும் ஒவ்வொரு குடம் தண்ணீர் ஊத்தி பூ வைத்து ஒரு 'றவுண்ட்' வருவதற்குள் மற்றக் காலப் பூசை வந்துவிடும். அதற்குள் எசமான் வந்து கையுயர்த்தி சுட்டு விரலால் மணிக் கூட்டைக்காட்டி "ஐயர் இப்ப என்ன நேரம் பாரும்" என்று முறைத்துவிட்டுப் போவார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வரதனை அவன் தந்தை கூட்டிக் கொண்டு வந்து பொறுப்புத் தந்தார் . இராமலிங்கையர் சந்தோஷமாகப் பையனை ஏற்ற மறுநாளே கிராமப் பாடசாலையில் சேர்த்தார். ஆனால் அதற்கு மறுநாள் தொடக்கமே இடாப்பில் ஒழுங்காக வட்டம் தான் விழுந்தது.

கோவிலில் வரதனுக்கு நிறைய வேலை. இரக்கமில்லாமல் வேலை வாங்கினார்கள். காலையில் பூவெடுக்க வேண்டும். குளித்து மடப்பள்ளியில் நெருப்பு மூட்டி அமுது சமைக்க வேண்டும். எல்லாச் சந்நிதானத்திலும் உள்ள முதல் நாள் நிர்மாலியங்களைக் களைந்து குப்பையில் போட்டு இருபது அடி ஆழக் கிணற்றில் இருந்து நீர் மொண்டு அபிஷேகம் செய்து பட்டுச் சாத்தி பூச்சாத்தி சரவிளக்குகளுக்கு எண்ணெய் விட்டுத் தீபம் ஏற்றி, தீபக்கால், கற்பூரத்தட்டு, பஞ்சாராத்தி வகை அழுக்குகளைத் துடைத்துக் கற்பூரம் வைக்க வேண்டும். நிவேத்தியம் பொங்கியானதும் எல்லா சாமிகளுக்கும் ஒவ்வொரு தட்டில் தழிகை அடித்துப் பங்கிட்டு அவ்வவர் எதிரில் வைத்து தீபக் காலையும் ஏற்றி விட்டு அசையாமணியையும் இழுத்தடித்து விடவேண்டும். அப்படி அடிக்குமுன் எசமானின் பிரதிநிதியான மணிக்கூட்டையும் பார்த்துவிட வேண்டும். இந்த நேரம் எசமான் வந்துவிடக்கூடாது என்று முருகனைப் பார்த்து வேண்டுதலும் செய்வான். இதற்கு மேல் இராமலிங்கையர் வந்து பூசை செய்ய வசதியாய் இருக்கும். பின்னேரம் மூன்று மணிக்கு மீண்டும் கோயிலைத் திறந்து விளக்கேற்றி கந்தபுராண படனத்திற்கு ஆயத்தம் செய்ய வேண்டும். ஆனால் ஏனோ வரதனுக்கு இதில் ஒரு விருப்பம். இந்த புராணத்திற்கு பயன் சொன்ன புலவர் சந்தர்ப்பத்திற்கேற்ப இராகத்தில் நயம்படக் கருத்துரைப்பதைக் கேட்பது அவனுக்குப் பிடித்தமான நிகழ்ச்சி. அவனுக்குத்தான் வேறு பொழுதுபோக்கும் இல்லையே. முருகன் சூரபத்மனுக்கு விஸ்வரூபம் காட்டும் பகுதியைக் கேட்கும்போது மிகவும் பரவசப்பட்டு

விடுவான். நெகிழ்ந்துபோய் இந்தப் பகுதியை அனுபவிப்பான். இந்த ஒரு விஷயம் தான் அவனை வேறு ஒரு நிலையில் உள்ளவனைப் போல் பிரித்துக் காட்டியது. கந்தபுராண படனம் என்றால் அவனுக்கு முருகனை நேரில் சந்திக்கும் அரிய வாய்ப்பு.

அன்று அவனை பரவசத்தில் ஆழ்த்தி விடுகிற பகுதி. முருகனும் சூரபன்மனும் நேருக்கு நேராக சண்டையிடுகிறார்கள். முருகன் இடையில் ஒரு திருவிளையாடல் புரிகிறான். தனது விஸ்வருபத்தை சூரபத்மனுக்கு வெளிப்படுத்துகிறான். விஸ்பருபத்தை அந்த அசுரனும் தரிசித்து அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகுகிறான். சூரன் மட்டும் அவ்விதம் உருகவில்லை. வரதனும் உருகியபடியே தன் வயமிழந்து சிவானுபத்தில் திளைக்கிறான். அது ஒரு மயக்க நிலை. இந்த சின்ன வயதில் எப்படித்தான் அப்படியொரு பக்குவ நிலையோ தெரியாது. அவனது கன்மங்கள் தீர்ந்து விட்டனவோ என்னவோ அவனைச் சுற்றிய உலகம் மறைந்து அவனொரு சமாதி நிலையில் இருக்கிறான். ஒரு நாள் இப்படித்தான் புராண படனத்தை கேட்டு மெய்மறந்த நிலையிலிருந்தான்.

அந்த நேரம் பார்த்து ராமலிங்கையர் வரதா, வரதா, என்று கத்துகிறார். மிகவும் சமீபத்தில்தான் நின்று கூப்பிட்டார். வரதனின் காதில் விழவில்லை. மீண்டும் மீண்டும் கூப்பிடுகிறார். வரதன் இந்த உலகில் இருந்தாலல்லவோ? ராமலிங்கையருக்கு வந்துவிட்டது கோபம். புராண படனம் நடப்பதையும் பார்க்காமல் வரதனின் முதுகில் மளார் மளார் என்று அடித்து உசுப்பினார். வரதன் திகைத்துப் போய் நித்திரையிலிருந்து எழுபவன் போல் விழித்துப் பார்க்கிறான். புராணம் படித்தவர்கள் “இது என்னையா படிப்பு கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு சிறுபிள்ளையை அதுவும் தாயில்லாத பிள்ளையை சந்நிதானத்தில் வைத்து இப்படி அடிக்கலாமா? உங்களுக்கு இரக்க உணர்வேயில்லையா? இருதயத்தைக்கூட கடவுள் உங்களுக்கு படைக்கவில்லையா” எனக் கடிந்து கொண்டார்கள்.

“உங்களுக்கு என்ன தெரியும்? இப்ப ஒரு சகஸ்ரநாம அர்ச்சனைக்கு ஆள்வரப் போகிறார். இன்னும் வில்வ பத்திரம் எடுக்கவில்லை. எசமானோ எந்த நேரமும் எங்களில் பிழை பிடித்தபடியே இருக்கிறார். நான் என்ன செய்வது” என்று கூறிவிட்டு வரதனையும் இழுத்துக் கொண்டு போனார். தாயில்லாத பிள்ளை” என்ற சொல் அவனை வச்சிராயுதம் போல் தாக்கியது. மற்றவர்கள் இப்படித் தன்னைப் பற்றி அனுதாபப்படுவதை உணர்ந்ததும் அவனது துன்பத்தில் ஓர் புதிய பரிணாமம், ஒரு புதிய விஸ்தரிப்பு உண்டாகியது.

“ஏறடா விலவமரத்தில், என்று உரப்பி அவனை வில்வ மரத்தில் ஏற்றினார். உயரத்தில் ஏறினான். அவனுக்கு எப்போதுமே கால் நடுங்கும். அத்தோடு போசாக்கில்லாத நோஞ்சான். மிகவும் பயந்துகொண்டே வில்வக் கொப்புக்களை ஒடித்துப் போட்டான். ஏதோ ஒரு மாதிரியாக இந்த வேலை அப்போதைக்கு முடிந்தது. மரத்திலிருந்து கீழே இறங்கியும்கூட கால்கள் நடுங்கிய வண்ணமேயிருந்தன.

இரவு சரியாகச் சாப்பிடவும் முடியவில்லை. விம்மி அழுதுகொண்டே நித்திரையானான். நித்திரையிலும் விம்மினான். “இண்டைக்கு இந்தச் சனியனுக்கு என்ன நடந்தது?” என்று லட்சுமியம்மா அலுத்துக் கொண்டாள். நித்திரையிலும் அவனுக்கு

பகலில் நடக்கும் சம்பவங்கள் திரும்பத் திரையிடப்படுவதுபோல கனவுகள் வந்த வண்ணம் இருக்கும். அன்று தாயைப் பற்றிய சிந்தனை அவன் தாய் மிகவும் அழகானவள் என்றும் முன்பு பலர் கூறக் கேட்டிருக்கிறான். அம்மா எப்படி இருப்பாள். ஒரு முறையாவது தன்னிடமிரக்கப்பட்டு வந்தாளானால் தனது துன்பங்களைக் கூறி ஆறுதலடையலாமே வருவாளா? அவள்தான் செத்துப் போய்விட்டாளே, இப்படித்தான் அன்று முழுக்க எண்ணிக்கொண்டிருந்தான். நித்திரையிலும் அந்த வில்வமரம் வந்தது. அவன் அர்ச்சனைக்காக வில்வம் பறிக்க வேண்டும். மரத்தில் ஏறியாக வேண்டும். ஏறப்பயம். ஆனாலும் ஏறி வில்வம் பிடுங்க வேண்டும். ஆகவே மிகவும் கஷ்டப்பட்டு ஏறிவிட்டான். கால்கள் நடுங்குகின்றன. மரத்திலிலுருந்து தவறிவிழுகிறான். ஐயோ விழப்போகிறேனே விழுந்தால் செத்துப் போய்விடுவேனே எனக் கலங்குகிறான். 'முருகா! முருகா!' என்று அலறுகிறான். ஒரு கணம் தான்! என்ன ஆச்சர்யம் இப்பொழுது வரதன் தரையில்! தலையிலே ஒரு பெரிய கூடை நிறைய வில்வ தளங்களைச் சுமந்துகொண்டு நிற்கிறான். இய்ல்பூக்கமாகவே அவன் கோவிலை நோக்கி நடக்கலானான். இப்பொழுது களம் மாறுகிறது.

கோவில் ஒரு குன்றின் மேல் இருக்கிறது. வரதன் குன்றில் ஏறுகிறான். களைப்பே தெரியவில்லை. உடம்பு லேசாகவிருக்கிறது. இதோ கோவில் வந்துவிட்டது. அப்பப்பா என்ன ஒளி! என்ன பிரகாசம்! ஆயிரங்கோடி சூரியப்பிரகாசம் என்பது இதுதானோ! ஆஹா! இது என்ன கோவில். இதோ கோவில் வாசலுக்கு வரதன் வந்துவிட்டான்.

அதோ முருகன் வரதனின் வரவையே எதிர்பார்த்திருப்பவன்போல நிற்கிறான். வரதன் வில்வக்கூடையைச் சுமந்து சென்று அப்படியே ஒரு கூடை வில்வத்தை முருகனுடைய பாதங்களில் கொட்டுகிறான். முருகன் உரத்த குரலில் "தேவயானே - வள்ளிநாயகி" என அழைக்கவே அவ்விருவரும் ஓடி வருகின்றனர். முருகன் ஆனந்தமாகச் சிரித்த முகத்துடன் "இதோ வரதன் வந்திருக்கிறான்" என்று கூறினார். அம்பிகையை நிமிர்ந்து பார்த்தால் அவர் கருணை கூர் முகங்களைக் கண்டதும் அவனுக்குத் தாயின் எண்ணம் வந்துவிட்டது. "அம்மா அம்மா" என வாய் கோணி வெம்புகிறான். "அம்மா என்னை எல்லாரும் அடிக்கிறாங்கள். அம்மா, அம்மா, நான் உங்களோடை இருக்கப்போகிறேன்.. என்னை எங்கேயும் அனுப்பி விடாதீர்கள். அம்மா அம்மா" என்று கதறினான். உடனே இரு அம்பிகைமாரும் வரதனை இறுக அணைத்து முதுகைத் தடவிக் கொடுக்கிறார்கள். அந்தத் தெய்வத்தாயாரின் கைப்பட்ட இடத்தில் தெய்வீக உணர்வு ஏற்படுகிறது. இதுதான் தெய்வீக உலகமோ - சொர்க்கலோகவாசம்! வரதன் அப்படியே நிலத்தில் வீழ்ந்து அம் மூவருடைய பாதங்களையும் தன் தலை மேல் மீண்டும் மீண்டும் ஒற்றுகிறான். அவர்களுடைய பாதங்களிலே தலைபடிய வீழ்ந்து கிடக்கிறான். ஆனந்த வெள்ளத்தில் இப்படியே நான் இந்தத் தெய்வங்களின் பாதங்களில் விழுந்து கிடக்க வேண்டும் என எண்ணுகிறான். அவன் ஆனந்தத்தில் திழைக்கிறான். இருந்தாற்போல் ஏதோ பெரிய சத்தம்! அது இராமலிங்கைய்யர்தான் "டேய் வரதா - டேய் வரதா" என இடிபோன்று உறுமுகிறார். வரதன் சொர்க்கத்திலிருந்து நழுவி விழுகிறான். இராமலிங்கையர் அவனைத் தோளில் பிடித்து உலுப்புகிறார். வரதன் துடித்துப் பதைத்து எழுந்திருக்கிறான்.

"ஏன்டா நித்திரையிலை கத்தினாய்? அம்மா அம்மா எண்டு ஒரு நாளும் இல்லாமல் உன் அம்மாவை நினைத்துக் கத்துகிறாயே. என்ன இருந்தாற்போல் அம்மாவின் நினைவு? பேசாமல் தூங்கு.

இலட்சுமி அம்மாளும் எழுந்துவிட்டாள். "இந்த நேரத்திலை அதுக்கு என்னவோ பிடித்திட்டுது. சனியன்" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார். இராமலிங்கையர் அவளை அடக்கி, "போதும் போதும். நீ இப்ப ஆரம்பிக்காதை. நித்திரை கொள்" என்றார். கோவில் கடிகாரம் மூன்று அடித்தது எல்லோரும் மீண்டும்உறங்கி விட்டார்கள். வரதன் உறங்கவில்லை. அவனது கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. அத் திவ்யானுபவம் அவனை மறுபிறவியெடுத்த மாதிரி மாற்றிவிட்டது. அவனுக்கு கனவில் கண்ட அந்தக் காட்சியை மீண்டும் மீண்டும் பார்க்கவேண்டும்போல் இருந்தது. அவனுக்கு இந்த உலகில் இனி ஒன்றும் வேண்டாம். முருகன் யாருக்காவது இப்படிக் கனவில் காட்சி கொடுப்பதுண்டா, எனக்கு முன்னால் வள்ளி தேவசேனா சமேதனாய்த் தோன்றினானே! முருகா! முருகா! அவனால் படுத்திருக்கமுடியவில்லை.

வரதன் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்ததான். அவன் கனவில் கண்ட காட்சியைத் தன் மனத்தில் பதித்து அது அவனது மனத்திரையை விட்டு அகலாதவாறு நிறுத்தி ஆனந்தப்பரவச நிலையில் நிலைத்துவிட்டான். ஆடாமல் அசையாமல் கற்சிலைபோல நெடுநேரம் அந்த யோகநிலையில் இருக்கிறான். அம்பிகை இருவரும் மீண்டும் மீண்டும் அவனை முதுகில் தடவிக் கொடுக்கிறார்கள். ஆனந்தம்! ஆனந்தம்! அதே நிலையில் சில மணி நிலைத்து இருந்தான். அவனது உச்சியில் பிரமரந்திரம் கசிந்து அமிர்தம் சொட்ட ஆரம்பித்தது. உடம்பெங்கும் கசிந்து நின்றது. அவனது உடல் பாரம் இழந்தது. அந்தரத்தில் மிதப்பது போல இருந்தது. அமிர்ததாரை உச்சிப் பொட்டியிலிருந்து சொட்டச் சொட்ட அவன் ஞானமயமாய் விட்டான். உலக பந்தங்கள் சட்டென்று அறுந்தன. அவனது பிறப்புச் சங்கிலி அறுந்தது. இன்னொரு கருவாய்ப் பிறப்பு இனி அவனுக்கு இல்லை. அவனுக்கு ஞானமார்க்கம் திறந்து விட்டது. உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை அவன் வேறு யாதோவாகிவிட்டான். தெய்வம் அவனை ஆட்கொண்டுவிட்டது. ஐந்து மணி இருக்கும் எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். வரதன் எழுந்து வெளியே நடந்தான்.

சிறிது நேரத்தில் இராமலிங்கையர் வீட்டில் எல்லாரும் எழுந்துவிட்டனர். வழக்கமாக வரதன் இவர்கள் விழிக்கும்போது வீட்டில் இருப்பதில்லை. வெளியே சென்று காலைக் கடன் முடித்து குளித்து கூடை நிறையப் பூ எடுத்துக்கொண்டு திரும்புவான். இன்றும் அப்படித்தான் நினைத்தர்கள். ஆனால் அவன் வரவில்லை. அன்று கோவிலில் நிறைய வேலை. அவனைத் தேடி அலைய ஐயருக்கு நேரமில்லை. "எங்கே போகப்போகிறான் வருவான்தானே" என்றிருந்துவிடடார். ஆனால் அவன் வரவில்லை. அவனைப்பற்றித் தகவல் ஒன்றும் இல்லை.

ஆறுமாதங்கள் ஓடியிருக்கும். ஊரில் ஒரு கதை பரவியது. யாரோ ஒரு பால சந்நியாசி வயலையடுத்து தாழம் புதர்கள் படர்ந்து வளர்ந்திருந்த நிழலான இடத்தில் பல நாட்களாகக் கண் திறவாமல் யோக நிலையில் தவம் செய்கிறார் என்றும், அவர் அன்னாகாரம் கொள்வதில்லை என்றும் அவர் கண் விழித்ததும் அவரை அமுதுசெய்விக்க பல பக்தர்கள் கூடிக் காத்து நிற்பதாகவும் மக்கள் பேசிக்கொண்டனர்.

இராமலிங்கையரது ஆள் ஒருவன் ஓடோடி வந்து ஐயரிடம் கூறினான். ஐயா அது எங்கடை வரதன் சின்னையாதான். அவரின் முகத்தைப் பார்த்தால் என்ன ஒளி வீசுது. சனங்கள் வெயில், மழை படாமல் பெரிய பந்தல் போட்டுவிட்டார்கள். அங்கே

ஒரே கற்பூரமும் சாம்பிராணி, ஊதுபத்தி புகையுமாய்த்தான் இருக்குதையா. அவரை விட்டகலாமல் சனங்கள் இருபத்துநாலு மணி நேரமும் பஜனை செய்து கொண்டிருக்கிறார்கள். வரதையா கண்ணைத் திறப்பதேயில்லையாம். நாட்கணக்காய் தியானத்தில் இருக்கிறார். இதைக்கேட்டு இராமலிங்கையரது கண்களில் கண்ணீரவழிந்தது. அவர் ஒன்றும் பேசவில்லை.

வரதன் ஏன் இனிக் கண்ணைத் திறந்து இந்த உலகைப் பார்க்கப்போகிறான்? அந்த இடத்தில் இன்னும் சில மாதங்களிலோ வருடங்களிலோ தெய்வசமாதி நிகழப்போகிறது.

அந்தப் பிரதேசம் ஒரு புனிதஸ்தலமாகிவிட்டது. அவ்விடத்தில் இனி ஓயாது நாம சங்கீர்த்தனம் நிகழ்ந்தவாறேதான் இருக்கும்.

சித்திரும் புத்திதரும் செந்திருவைச் சேவிக்கும்
பக்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்குங் - கொத்தி
அரிமுகனைக் காய்ந்த அருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

- குருநமசிவாய தேவர்



சிறுகதை

# சிதைந்த வாக்கு

"ரகுநாதையரே நமஸ்காரம்" என்று கூறிக்கொண்டே வந்தார் சுப்பராமையர். "நமஸ்காரம்" என்று கூறிவிட்டு அவரை உட்காரச் செய்து தாமும் உட்கார்ந்தார் ரகுநாதையர்.

"என்ன இன்றைக்கு இந்தப் பக்கம்?"

"இல்லை..... அப்படியொன்றுமில்லை சும்மா..........பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்."

"என்ன பார்த்து விட்டுப் போகவா? விஷயமில்லாமல் நீர் இந்தப்பக்கம் திரும்பமாட்டீரே!"

"ஆமாம் விஷயமில்லாமலா போய்விடும். அது கிடக்க. உமக்கு ராகவையரைத் தெரியுமல்லவா?"

"நன்றாய் தெரியும்"

"அவருக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறாள்; சரோஜா என்று பெயர்......"

"அவளைக்கூட எனக்குத் தெரியும்"

"நல்லது'

"சரி, அவர்களைப் பற்றி இப்போது என்ன?"

"உம்முடைய மகனுக்கும் அவளுக்கும் கல்யாணம் செய்து வைக்கலாமே என்றுதான் கேட்கிறேன்."

"அப்பா...... இதற்குத்தானா இவ்வளவு பீடிகை...... அது நடக்காத விஷயம்."

"ஏன் நடக்காது? பெண் என்ன அழகில் குறைவா? அல்லது ஜாதியில் குறைவா? இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்து விடுகிறேன். அப்புறம் என்ன?"

"இரண்டாயிரத்தை கொண்டுபோய்க் குப்பையில் எறியும்..... இப்போதானே பையன் ஏதோ படிக்கவேண்டுமென்று புஸ்தகத்தை எடுத்திருக்கிறான். அதற்குள்ளே கல்யாணத்தைக் கொண்டு வந்து கெடுக்கப் பார்க்கிறீர்கள்!"

"எதற்காக நான் அவனைக் கெடுக்கிறேன்? கலியாணத்தை முடித்துக்கொண்டு படிக்கிறதுதானே!"

"அது என்னவோ இப்போது அவனுக்கு கல்சாணம் அவசிய மில்லை. அல்லாமலும் இப்போதானே அவனுக்குப் பத்தொன்பது வயது! இந்த விஷயத்தில் மட்டும் நீர் குறைவைத்துக்கொள்ளக் கூடாது."

"குறை என்ன குறை. இரண்டாயிரம் வாங்கித் தந்து விடுகிறேன். அதற்குமேல் அவரிடம் சக்தி இல்லை. பெண் அழகானவள். உமது மகனுடன்தான் படிக்கிறாள். இரண்டுபேருக்கும் நல்ல...."

"சுப்பராமையரே நீர் .இந்த விஷயத்தை அழுத்துவது நல்லதல்ல. எவ்வளவு

கொடுத்தாலும் சரி. சரிப்படாது. முதலில் இந்த விஷயம் என் மகன் காதுக்கு எட்டினால் போதும். உடனே சண்டைக்கு வந்துவிடுவான். அவன் இருபத்தைந்து வயது வருமுன் கல்யாணம் செய்துகொள்வதில்லையென்று சொல்லியிருக்கிறான். அல்லாமலும் அவனுடைய விஷயத்தில் தலையிடுவது இல்லை என்றும் நான் நிறுத்தியிருக்கிறேன். ஏதோ படித்து இரண்டு சம்பாதிக்கத் தொடங்கிய பின்பு அவனே தன்னிஷ்டம்போல செய்து கொள்ளட்டும்" என்று கூறி வேறு என்ன என்பபோல் பார்த்தார். இனித் தாமதிப்பதில் பிரயோசனம் இல்லையென்று நினைத்து சுப்பராமையர் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்.

சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு அறையிலிருந்த தேவராஜனுக்கு உள்ளங் குளிர்ந்தது. தன்னைத்தேடி எத்தனையோ சம்பந்தங்கள் வருகின்றன என்று ஒரு தனிக் கர்வம்.

ரகுநாதையர் முன்பு மிக ஏழ்மை ஸ்திதியிலிருந்தவர். அவருடைய மூன்று பெண்களையும் கரைசேர்ப்பது எப்படியென்று யோசித்து வருந்தினார். "காலக்காற்று" என்று சொல்வார்களே! அது எப்பொழுதும் ஒரே திசையை நோக்கி வீசுவதில்லை. சில சமயங்களில் அது பெரிய சூறாவளியாக மாறிப் பெரிய அனர்த்தம் கூடச் செய்வதுண்டு. இந்தக் காற்று ரகுநாதையருக்குச் சாதகமாக வீசவே அவருடைய கையில் என்ன விதமாகவோ பணம் வந்து சேர்ந்தது. அந்தப் பணத்தைக் கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கிப் பெரிய பணக்காரராகிவிட்டார். அவருடைய பெண்களும் ஒருவர்பின் ஒருவராகக் கரைசேர்க்கப்பட்டனர்.

தேவராஜன்தான் ரகுநாதையரின் கனிஷ்ட புத்திரன். அவன் நல்லூரிற் படித்துக்கொண்டிருந்தான். சரோஜாவும் இவனுடைய வகுப்பில்தான் படித்துவந்தாள். இவர்களுக்கு கல்லூரியில் அதிகம் சம்பாஷிக்க நேரமேது? தேவராஜனுடைய வீட்டிற்குப் பக்கத்தில் அவன் சிறியதாயின் மகன் ராஜத்தின் வீடு. அங்கு சரோஜா அடிக்கடி போவாள். தேவராஜனும் சந்திப்பான்.

சரோஜாவின் தகப்பனார் எத்தனையோ வரன்களுடைய ஜாதகத்தைக் கொண்டுவந்து பார்த்துவிட்டார். ஒன்றும் வாய்க்கவில்லை. பாவம் ராகவையர் வரன் தேடுவதை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டார். சரோஜா தனது மாமியாரின் மகளிடம் தேவராஜனைப் பற்றிக் கூறியிருக்க வேண்டும். விஷயம் அவளுடைய தகப்பன் வரைக்கும் வந்துவிட்டது. ராகவையரும் தொல்லை தீர்ந்தது என்று சுப்பராமையரைத் தூண்டிவிட்டார்.

அன்றிரவு முழுவதும் படுக்கையிற் புரண்டாள். தனது பழைய காதற் சம்பாஷணைகளையும் காதற் கடிதங்களையும் எண்ணும்பொழுது அவள் பெரிய அவமானம் அடைந்ததாக எண்ணிக் கொண்டாள். அந்த நேரமே எழுந்து அவன் தனக்கு எழுதிய கடிதங்களை அவனிடம் கொண்டுபோய் அவன்முன் எறிந்து அவனை வாயாரத் திட்டவேண்டும் போலிருந்தது அவளுக்கு. மறுநாள் எழுந்ததும் என்ன விதமும் அவனை நேரிற் கண்டுவிடுவது என்று தீமானித்துக்கொண்டு பாடசாலைக்குப் புறப்பட்டாள்.

பாடசாலையில் மத்தியான லீவுக்காக மணி அடித்தது. அனைவரும் வகுப்பைவிட்டு வெளிக்கிளம்பினார்கள். தேவராஜனும் வெளியே போவதற்காக எழுந்தான். அப்பொழுது சரோஜா ஏதோ தேவராஜனுக்குச் சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அவளால் பேச முடியவில்லை. தேவராஜன் சரோஜா சங்கடப்படுவதைக் கண்டு விட்டான். "ஏதாவது அலுவலா?" என்று கேட்டான். "ஆம் என்னை மன்னிக்க வேண்டும்......" அவளுக்குத் தொண்டை அடைத்துவிட்டது. ஒருமுறை கனைத்து அக்கம்பக்கத்தில் யாராவது நிற்கிறார்களா என்று பார்த்துவிட்டு பேசத் தொடங்கினாள். "நேற்று

சுப்பராமையர் வந்தபொழுது நீங்கள் அங்குதானே இருந்தீர்கள்!" இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. ஏதோ பழைய ரீதியில் கதைப்பாள், என்று எண்ணினான். சம்பந்தந்தைப் பற்றிய விஷயம் அவளுக்குத் தெரியும் என்பதை அவன் அறியவில்லை. பேசாதுநின்ற தேவராஜன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு "ஆமாம், எதற்காகக் கேட்கிறாய்"

"இந்தக் கேள்வி எதற்காக?"

"அவர் உங்கள் தகப்பனாரிடம் எங்கள் கல்யாணத்தைப் பற்றிப் பேசியபொழுது உங்கள் அப்பா எல்லாம் உங்களிஷ்டப்படி நடக்கப்போவது என்றும் அதுவும் வெகுநாட்களுக்கப்புறம் என்று கூறினாராம். அதற்காக உங்களைக் கேட்கிறேன் நீங்கள் என்னை நிச்சயமாக கல்யாணம் செய்துகொள்வீர்களா? அப்படியானால் நான் எவ்வளவு காலமும் உங்களுக்காகக் காத்திருப்பேன்.

"நான் இப்பொழுது எதுவுங்கூறமுடியாது"

"அப்படியானால் அன்று நீங்கள் கொடுத்தவாக்கு - சத்தியம்"

"அது காற்றோடு போயிருக்கும். அதை நீ இன்னும் நீ ஞாபகத்தில் வைத்திருந்தால் அந்தத் தோஷம் என்னுடையது அல்ல!" இதைக்கேட்ட சரோஜா அறையை விட்டு "விறுவிறு" என்று போய்விட்டாள்.

இது நடந்து ஆறுமாதம் கழிந்துவிட்டது. ரகுநாதையரின் வியாபாரம் விருத்தியடைந்து வந்தது.

மழைக் காலத்தில் இருந்தால்போலிருந்து கறையானுக்குச் சிறகு முளைத்துவிடுகிறது. "ஏ பூமியே இனி உன்னிடம் அடைபட்டுக் கிடப்பேனா?" என்று கூறிக்கொண்டே அந்தரத்தில் பறக்கின்றது. ஆனால் சிறிது நேரத்தின் பின்பு பார்த்தால் பூமியில் பல சிறகுகள் காற்றிலடிபடும். பூமியை விட்டுக் கிளம்பியவைகள் பூமியிலேயே நகருவதைக் காணலாம்.

ரகுநாதையர் நஷ்டப் படுகுழியில் வீழ்ந்தார். கடன் வந்து சூழ்ந்துகொண்டது. ஒன்றும் செய்யமுடியவில்லை. தேவராஜனுக்கு ஒரு நல்ல கல்யாணம் செய்துவைத்தால் அந்தப் பணத்தைக் கொண்டாவது சிறிது தேறலாம். அப்பொழுது அவருக்கு சுப்பராமையர் பேசிய இரண்டாயிரம் ரூபாவுடன் கூடிய சம்பந்தம் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால்.....

"எப்படி சௌக்கியந்தானே. நான் உம்மிடம் ஒரு பிரதானமான அலுவலாக வந்திருக்கிறேன்...." என்று இழுத்தார் ரகுநாதையர்.

"அப்படி என்ன அலுவல்" என்றார் சுப்பராமையர்.

"நீ முன்பு பேசிய அந்தப் பெண்ணைத் தேவராஜனுக்குக் கல்யாணம் செய்து வைக்கலாம் என்று யோசிக்கிறேன்.... நீர்தான்"

"......... என்ன நானா?"

"ஆம், நீர்தான் ஏதாவது வழி பண்ணவேண்டும்."

"அவள் இப்போது" ஏதோ பரீட்சைக்குப் படிக்கிறாள் பீ.ஏ. வரை படித்துவிட்டுத்தான் கல்யாணம் செய்துகொள்வாளாம்" என்றார் சுப்பராமையர்.

- ஈழகேசரி 13.04.1947

# தமிழில் கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பார்ப்பனார் ஆற்றியபங்கு

தமிழ்மொழிக்குச் சிறப்பையளித்து உலகமொழிகளுள் பழமையானதும் சிறப்புவாய்ந்ததும் என எடுத்துக்காட்டக் கவிச்சக்கரவர்த்தி கம்பரும், வள்ளுவரும் போதும். சங்க இலக்கியங்களின் சிறப்பு தனிப்பட்டவை.

இந்த நூற்றாண்டிலும் சென்ற நூற்றாண்டிலும் தமிழ் பல துறையில் பெரிதும் வளர்ந்துள்ளது. அவ்விதமான வளர்ச்சிக்குப் பார்ப்பன இனத்தவரின் பங்கும் கணிசமானது. பார்ப்பனரின் பங்களிப்பைக் கூறப்புகுந்தால் அது ஒரு முழு நூலாக விரியும். அதை ஈண்டுச் சுருக்கமாக ஆராய்வோம். இவ்வகையில், சிந்திக்கையில் முதலில் நாம் கருத்திற் கொள்ளவேண்டியவர், தமிழ் தாத்தா என அன்புடன் அழைக்கப்பட்ட டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களாகும். அவர் ஆற்றிய தொண்டிற்கு நிகராக வேறு ஒருவரையும் கூறமுடியாது. அவர்கள் தமிழ் மக்கள் செய்த தவப்பயனாய் அவதரித்தவர்.

ஐயரவர்கள் பெயரளவில் மாத்திரம் அறியப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களையெல்லாம் கிராமங்கள்தோறும் பழம் புலவர்கள் வீடு தோறும் படித்த வித்துவான் வீடுகள் தோறும் தேடிச் சென்று ஏட்டுச்சுவடிகளைப் பெற்று ஆராய்ந்து தமிழுலகிற்கு புத்தகங்களாகப் பதிப்பித்து நல்கியுள்ளார்கள். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி என இவற்றையெல்லாம் அழிவிலிருந்து காப்பாற்றி மீண்டும் தமிழ் மக்களின் கரங்களில் கொடுத்துதவிய அந்தப் பெருந்தகையின் சேவைக்கு நிகர் இல்லவேயில்லை.

அவரது சுயசரிதை கண்டதும் கேட்டதும் ஆகிய நூல்களிலிருந்து அவர்பட்ட சிரமங்களிற் சிறுபகுதியை மாத்திரம் நாம் அறியக்கூடும்.

அவருக்குதவியாகவிருந்து இப்பணியினை இனிதே முடிக்கப் பெருந்துணை புரிந்தவர் அவரது மாணவரும் கலைமகள் பத்திரிகையின் தாயக ஆசிரியருமான கி. வா. ஜகந்நாதையர் அவர்களாவார். கி. வா. ஜகந்நாதையர் அவர்கள் சிறந்த சிறுகதைகள் படைத்துள்ளதோடு சிறுகதை முன்னோடிகளுள் ஒருவருமாவார்.

இவர் அருமையான கட்டுரைகள் பல எழுதியுள்ளார். அவை தமிழுக்கு வளம் செய்பவை. இவர் தமிழ் யாப்பிலக்கணத்தை இலகுவாக்கி எழுதிக் கொடுத்துள்ளார்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடையதும் கி. வா. ஜகநாதையர் அவர்களதும் பெருமை திராவிட இயக்கத்தினரால் தொடங்கிவைக்கப்பட்ட துவேஷ அரசியலாளரால் மதிக்கப்படவில்லை. மாறாக யார் யாரோ போலிகள் முன்னிறுத்தப் படுத்தப்படுகிறார்கள்.

வாசிக்கும் பழக்கத்தை அடுப்படிக்குள் கொண்டு சென்ற பத்திரிகை ஆனந்த விகடனாகும். மாலியுடைய கார்ட்டுன்கள் பின்பு ராஜு - தாணு போன்றவர்களுடைய கார்ட்டுன்கள் ஆனந்தவிகடனையும் கல்கியையும் அலங்கரித்தன. ஆனந்தவிகடனைக் கையில் எடுத்தால் ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தம்!!! தான். இடையில் காளான்கள் போல் எத்தனையோ பத்திரிகைகள் வந்து மறைந்தாலும் ஆனந்தவிகடன் தலைநிமிர்ந்து எல்லாப் பிரளயங்களையும் வென்று உயர்ந்து நிற்கின்றது. இது பார்ப்பனரின் பங்களிப்பென்று பார்ப்பனரனைவரும் நெஞ்சை நிமர்த்த வேண்டிய கைங்கரியம்.

கல்கி எழுதியளித்த "சிவகாமியின் சபதம்" "பார்திபன் கனவு" இரண்டிற்கும் நிகராக உலக இலக்கியத்திலேயே ஒன்றைக் கூறமுடியாது.

பார்ப்பனர் பங்களிப்பென்று பேசுங்கால் மஹாகவி பாரதியாரைக் குறிப்பிட வேண்டும். தமிழ்க் கலை இலக்கியத்துறைக்கான சேவையில் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்தவர் மஹாகவி சுப்பிரமணிய பாரதியாரேதான். அவர் பெயர் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டியது. அவர் வேதங்களை நன்கு பயின்றவர். சாஸ்திரங்களையும் ஆராய்ந்தவர். பார்ப்பனீயத்தைத் திராவிட இயக்கம் எதிர்ப்பதற்கு முன்பே எதிர்த்து வழிகாட்டியவர். என்றாலும் தமிழுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பார்ப்பனர் என்ற ஆராய்ச்சியில் முதலிடம் வகிப்பவர் பாரதியார் அவர்களே. அவர் மறுத்தாலும் அவர் ஒரு முழுப் பார்ப்பான்.

"மடிகட்டி படிமேல் நிற்கும் மண்ணாங்கட்டிப் பார்ப்பான்

அவன் வாயில் மண்"

என்று பார்ப்பனர் மேல் காறி உமிழ்ந்த சுப்புரத்தினம் என்ற தமிழ்க் கவிஞர் தனது பார்ப்பனத்துவேஷத்தையும் மீறித் தனது பெயரைப் "பாரதிதாசன்" என்று மாற்றிக் கொண்டார். இவரது இயற்பெயர் அறியப்படாது "பாரதிதாசன்" என்ற புனைப் பெயரே நிலைத்து நிற்கின்றது. இவரது சுப்புரத்தினம் என்ற பெயரை யாருமறியார்.

பத்திரிகைத் துறையை எடுத்துக்கொண்டால் அங்கே பார்ப்பனர் தான் முன்னின்று சேவை செய்திருக்கின்றனர். மெற்றாஸ் ஹிந்து உலகப் புகழ் பெற்ற ஒரு தினசரி. இது இந்தியாவின் மனச்சாட்சியை உலகிற்கு வெளிப்படையாக காட்டும் பத்திரிகை. இது பார்ப்பனர்களால் தொடங்கி நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கும் தினசரிப் பத்திரிகை.

தமிழ் பத்திரிகை வாசிப்பதை முதல்முதல் பெண்களுக்குக்கூட விஸ்தரித்து தமிழ்நாட்டின் அடுப்படிக்குள்ளே கொண்டு சென்ற பத்திரிகை ஆனந்தவிகடன் எஸ். எஸ். வாசனால் ஆரம்பிக்கப்பட்டு அவரது சந்ததியினரால் நடத்தப்பட்டு வருவது. இதுவும் பார்ப்பனரது பத்திரிகையே. "கல்கி" என்ற பத்திரிகை "கல்கி" என்ற புனை பெயர் கொண்ட கல்லிடைக்குறிச்சி கிருஷ்ணசாமி என்ற பார்ப்பனரால் தொடங்கப்பட்டு அவரது சந்ததியினரால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இனி, சங்கீதத் துறையை எடுத்துக்கொண்டால் அங்கும் பார்ப்பனரது ஆட்சி தான். பூச்சி சீனிவாசையங்கார், அரியக்குட்டி ராமானுஜ ஐயங்கார், மஹாராஜபுரம் விஸ்வநாதையர், முசிரி சுப்பிரமணிய ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், எம். எல் வசந்தகுமாரி, அருணா சாய்ராம் என்ற பெரிய பட்டியலே இருக்கிறது.

ஹரிகதாகாலட்சேபத்தில் துறையூர் ராஜகோபால சர்மா போன்ற முன்னோடிகள் பலர். இன்று விசாகாஹரி யாரும் எட்டாத பரப்பையும் உயரத்தையும் எட்டிக் கொடிகட்டிப் பறக்கிறார். இன்றைய சிறந்த பாடகர் எஸ்.பாலசுப்பிரமணியம் ஒரு பார்ப்பனரே. ஆனால் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த கலைஞர்கள் தாங்கள் பார்ப்பனர் என்பதை மறைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர். பார்ப்பனர்களான புதிய தலைமுறைக் கலைஞர்களை நாமும் இங்கு காட்டிக்கொடுக்க வரும்பவில்லை. ஆனாலும் அவர்களனைவரும் பார்ப்பனரேயாம்.

# சம்ஸ்கிருதம்

சம்ஸ்கிருதத்தைத் தேவபாஷை என்பர். இது எழுந்தமானத்தில் கூறிய கூற்றல்ல. இந்தப் பாஷை மூலமே நாம் தெய்வங்களைத் தொடர்பு கொள்ளமுடியும்.

வேறெந்தப் பாஷையிலுமில்லாத ஒலியமைப்பைப் பெற்ற பாஷை சம்ஸ்கிருதம். இதைப் பரமசிவன் பாணினிக்குக் கூறியருளினார். எப்படியென்றால்,

நடராஜமூர்த்தியானவர் தமது பஞ்சகிருத்திய நிருத்தத்தைச் செய்து இறுதியில் பதினைந்து தடவை உடுக்கையை ஒலிக்கச்செய்தார். அதிலிருந்து பின்வரும் சூத்திரங்கள் உண்டாயின. இச்சூத்திரங்களே பாணினியின் வியாகரணத்திற்கும் சம்ஸ்கிருத பாஷைக்கும் ஆதாரமாயமைந்தவையாம்.

இச் சூத்திரங்களிலே சம்ஸ்கிருத எழுத்துக்களெல்லாம் அடங்கியுள்ளன.

ந்ருத்தாவஸானே நடராஜ ராஜோ நநாத டக்காம் நவ பஞ்ச வாரம்।
உத்தர்த்துகாம: ஸநகாதி ஸித்தான் ஏதத் விமர்ஶே ஶிவஸூத்ர ஜாலம்॥

அ இ உண்
ரு லுக்
ஏ ஓங்
ஐ ஔச்
ஹ ய வ ரட்
லண்
ஞ ம ங ண நம்
ஜ பஞ்
க ட தஷ்
ஜ ப க ட தஶ்
க ப ச ட த ச ட தவ்
க பய்
ஶ ஷ ஸர்
ஹல்
இதி மாஹேஶ்வராணி ப்ரத்யாஹார ஸூத்ராணி।

இவ்வாறு சிவனாரது உடுக்கையிலிருந்து எழுந்த நாதங்களை ஆதாரமாகக் கொண்டு பாணினி முனிவர் வடமொழியை ஆக்கினாரென்பர்.

ஆகாயமென்பதுதான் பிரம்மம்.

ஸத்யம் ஜ்ஞானம் அனந்தம் ப்ரஹ்ம
யோ வேத நிஹிதம் குஹாயாம்
பரமே வ்யோமன்

இந்த அந்தராகாசத்தில்தான் பிரம்மம் அடங்கியுள்ளது. சம்ஸ்கிருத எழுத்து ஒலிகளின் தாக்கம், அந்த ஒலியின் வலிமை மாத்திரமே ஆகாயத்தில் அதிர்வலைகளை உண்டாக்க வல்லது.

ஆனபடியால்தான் வேதங்கள் சம்ஸ்கிருதத்திலமைந்தன.


வேதங்களைப் பயின்று நன்கு அவற்றை ஆராய்ந்த யோகி அரவிந்தர்,

“வேதங்கட்குக் கருத்துச் சொல்வது கடினம். எத்தனையோ வேதமந்திரங்கள் ஒலிக்காகவே ஆக்கப்பட்டுள்ளன” எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது உண்மையிலும் உண்மை.

சம்ஸ்கிருத பாஷையின் பெருமை அதன் மந்திர சக்தி எல்லாம் நாதத்தை அடிப்படையாகக் கொண்டவை.

சம்ஸ்கிருதம் பயிலும் மாணவர்கள் உச்சரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.



# பழைய காலங்களில் எவ்வாறு சம்ஸ்கிருதம் பயிற்றப்பட்டது

சம்ஸ்கிருத பாஷை ஒலியை முக்கியமாகக் கொண்டது. காஞ்சிப்பெரியவர் இதை அடிக்கடி கூறத்தவறவில்லை.

விருத்திராசுரன் இந்திரனைக் கொல்ல ஒருமகன் வேண்டும் என்று வேண்டித் தபம் செய்தபோது ஸ்வரப் பிழையால் இந்திரனால் கொல்லப்படக் கூடிய ஒரு மகனைப் பெற்று அவ்வாறே ஸ்வர உச்சரிப்புப் பிழைகளால் அந்த மகன் ஈற்றில் இந்திரனால் கொல்லப்பட்டான் என்பதை உதாரணமாகக் காட்டி விளக்கியுள்ளார்.

சம்ஸ்கிருதம் படிப்பித்த அக்காலத்துப் பெரியவர்களால் மிகவும் கடுமையான வழிமுறைகளைக் கையாண்டு மாணவர்கட்கு ஆரம்பக்கல்வியைப் போதித்தனர். உச்சரிப்பிற்கு முக்கியத்துவம் அளித்தார்கள்.

அக்காலத்தில் பாலசிட்சை I, II என்று இருபுத்தகங்களைக் கற்பித்துப் பின் ராமோதந்தம் - நீதிசாஸ்திரம் இவைகளைக் கருத்துடன் சொல்லிக்கொடுத்து - அதேசமயம் சப்தம் (Declension) பாடமாக்குவித்து ரகுவம்ச காவியம் போன்றவற்றைக் கற்பித்தார்கள்.

நாகர லிபி தெரிந்திருக்கவில்லை என்றாலும், ரகுவம்சம் - குமாரசம்பவம் போன்ற காவியங்களை (கிரந்தலிபியில் கிடைத்தவற்றை) புகட்டினர்.

ஒரு சுலோகம் படிப்பித்தல் என்றால் முதலில் சுலோகத்தைப் பலமுறை வாசிக்கச்செய்து, பின் பதங்களைப் பிரித்துப் பின் ஒவ்வொரு சொல்லுக்கும் சப்தம் சொல்லவைத்து, பின் அன்வயப் படுத்தியபின் பொருள் சொல்வர். (அன்வயப்படுத்துதல் என்றால் சொற்களை வசன ஒழுங்கில் அமைத்தல்)

*வாமயூாவிவ ஸம்வருக்தள வாமயூ வுதிவதயெ।*

என்ற சுலோகத்தைக் கற்பிப்பது என்றால்

*வாகூ சுயூள ஐவ ஸம்வருக்தள வாகூ சுயூ வுதிவதயெ।*

எனப்பிரித்து, பின்

*வாகூ　　வாஉள　　வாஉஃ*

*வாஉம்　　வாஉள　　வாஉஃ*

என்று தொடர்ந்து ஏழு வேற்றுமைகளையும் சப்தம் சொல்லுவித்து, இவ்வாறே எல்லாச் சொற்களுக்கும் சப்தம் சொல்லுவித்து, வினைச் சொற்களென்றால் தாது ரூபங்களை

*வநெ　　வநாவஹெ　　வநாஉஹெ*

*வநஸெ　　வநெயெ　　வநஂயெ*

*வநதெ　　வநெதெ　　வநஹெ*

என்று Pass பண்ணுவித்து கருத்துக் கூறி முடிப்பர்.

இதைவிட 𑌸𑌮𑌾𑌸𑌂 வேறு.

சுலபமான உதாரணம்:

𑌰𑌾𑌮 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍌 எனச் சேர்ந்த பதத்திற்கு


𑌰𑌾𑌮𑌃 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 । 𑌰𑌾𑌮 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍌 என 𑌸𑌮𑌾𑌸𑌂 கூறுவர்.

இப்படி ஆறுதாலாக விரிவாகக் கற்றவர்கள்தான் உண்மையான பாண்டித்யம் பெற்றுச் சாதித்தார்கள். ஒரு சுலோகம் கற்பிக்கும்போது எவ்வளவு விஷயங்களை அடங்கிக் கற்பித்தார்கள் தெரிகிறதல்லவா? வேதம் அத்தியயநஞ் செய்யும்போது கனம் ஜடை சொல்லிப் பயிற்சி அளிப்பார்களல்லவா? அதுபோல் சப்தம் சொல்லுவிப்பது வழக்கம்.

தற்காலத்தில் நாம் மாணவருக்கு சம்ஸ்கிருதம் கற்பிப்பது என்றால் கட்டாயம் நாகரலிபி கற்பித்தே ஆகவேண்டும். ஏனென்றால் இப்பொழுதெல்லாம் தமிழகத்தில் பல்லவக் கிரந்த எழுத்தும் (கிரந்த எழுத்தை அப்படித்தான் குறிப்பிடுவர்.) அதில் அச்சிடப்படும் நூல்களும் அருகிவருகின்றன. கிரந்த எழுத்தில் வெளியிடப்படும் பிரதிகள் பத்துக்கூட விற்பனையாகும் சாத்தியம் கிடையாது. நகரலிபியிலே K.L.V.சாஸ்திரிகளால் எழுதப்பட்ட,

𑌪𑍍𑌰𑌥𑌮𑌾 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂, 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂, 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂

முதலிய மூன்று வாசினைப் புத்தகங்களைப் படித்துமுடித்தால் சம்ஸ்கிருத பாஷை அறிவில் நல்ல தரத்தை எட்ட முடியும்.



# யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வி

சம்ஸ்கிருதம் அந்தணருக்கேயுரிய அந்தணர்களின் பாஷை என ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. இது சரியா தப்பா என ஆராய வேண்டும்.

அந்தணர்கள் அதாவது யாழ்ப்பாணத்து அந்தணர்கள் வட மொழியைப் பிழைப்புக்காக மாத்திரம் கற்றுவந்தார்கள். அச்சு யந்திர வசதியற்ற சென்ற நூற்றாண்டில், கோவில் நித்திய, நைமித்திகங்களுக்குரிய மந்திரங்கள் பத்ததி வடிவில் உலவின. எமது சந்ததியில் முன்னோரான மாப்பிளைக்குருக்களிடம் சிறந்த பத்ததிகள் இருந்ததாக கேள்விப்பட்டோம். அவர் பெரிதும் மதிக்கப்பட்டவராகவும் இருந்தார். இதுதவிர பிராம்மணர்களிடையே சம்ஸ்கிருதப் புலமைக்கு அச்சுவேலி ச.குமாரசுவாமிக்குருக்கள் - யாழ்ப்பாணத்து உ.வே.சாமிநாதையர் போன்று - எத்தனையோ ஆகம நூல்களை எழுதி அச்சேற்றுவித்தார். இவருடைய சிவாகமசேகரம் - சிவலிங்கப் பிரதிஷ்டா விதி என்பன தலையானவை, நிகரற்றவை, பெரிதும் தேடப்படுவன. நாம் யாழ்ப்பாணத்தில் நிலவிய சம்ஸ்கிருதக் கல்வியைப் பற்றி ஆராய்ந்தால் - குமாரசாமிக்குருக்கள் தவிர அந்தணர்களிடையே குறிப்பிட்டுச் சொல்ல யாருமில்லை. ஆனால் இந்த குமாரசுவாமிக் குருக்களே சம்ஸ்கிருதம் கற்றது நீர்வேலி சிவசங்கரபண்டிதர் மற்றும் அவரது புத்திரர் சிவப்பிரகாச பண்டிதர் ஆகியோரிடமேயாம். பிராமணருக்கு சம்ஸ்கிருதம் பயிற்றுவித்த இந்த இரு பெரியோரும் பிராமண சமூகத்தின் பெருவணக்கத்திற்குரியவர்கள்.

சென்ற நூற்றாண்டில் சம்ஸ்கிருதக் கல்வியில் கோலோச்சியவர்கள் அந்தணரல்லாத பெரியோர்களே! நீர்வேலி சிவசங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர் தவிர நவாலிப் பகுதியில் குமாரசாமிப் புலவர் அந்தணச் சிறாருக்கு சம்ஸ்கிருதம் புகட்டி வந்தார். சங்கர பண்டிதர் 'சத்த சங்கிரகம்' எனும் வியாகரண நூலையும் ஆரம்பக் கல்விக்காக 'சம்ஸ்கிருத பாலசிக்ஷை' என்ற புஸ்தகத்தையும் அச்சிட்டு வெளியிட்டுப் பெருஞ் சேவையாற்றினார். அவருடைய பால சிட்சையும் - சத்தசங்கிரகமும்தான் அந்தணச் சிறுவர்கள் ஆரம்பத்தில் கற்க உதவியாக இருந்தன.

பருத்தித்துறையில் அமைந்த கலாநிதி யந்திரசாலையினர் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரியாரைக் கொண்டு ஒரு பாலசிட்சைப் புத்தகம் அச்சிட்டு உதவினர். அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதரிடமே சம்ஸ்கிருதம் கற்றதாகக் கூறினோம் அல்லவா, எமது தந்தையாரும் அதே காலத்தில் சிவப்பிரகாச பண்டிதரிடம் குருக்களோடு சகமாணவனாக சம்ஸ்கிருதம் படித்தாகக் கூறியுள்ளார். நான் பிறந்த நீர்வேலி இவ்வகையில் சிறப்புப் பெறுவதையிட்டு பெருமையடைகிறேன்.

இந்தியாவிலிருந்து சிதம்பரசாஸ்திரியார் என ஒருவர் வந்து கல்வி கற்பித்தார். இன்னுமொரு சாஸ்திரிகள் - அவர் பெயரும் சிதம்பர சாஸ்திரிகள்தான் - அவரும் நல்லூர்ச் சிவன்கோவிலில் இருந்து சம்ஸ்கிருதம் பயில்வித்தார்.

மாயவரத்திலிருந்து அதற்கடுத்த சந்ததியினர் கல்வி கற்க வாய்ப்பாக ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் வருகைதந்து கோப்பாயில் வசித்து வந்தார்.

இவர் நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் அக்கோவில் ஆதீன கர்த்தா - சுவாமிநாதக் குருக்களினால் அமைத்து வைக்கப்பட்ட சம்ஸ்கிருத வகுப்பில் வேதமும் - சம்ஸ்கிருதமும் கற்பித்தார்கள்.

அடியேனும் இந்த தெய்வத்திடம் சம்ஸ்கிருதம் பயிலும் பாக்கியம் பெற்றேன். இடையிடையே காலத்திற்குக் காலம் சில பிராமண சமாஜங்கள் நடப்பதும் முறிவதுமாக ஒரு நாடகம் நடந்தது. இந்த சமாஜங்களின் ஆதரவில் காலத்திற்குக் காலம் வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நிகழ்ந்தன. மாணவர்கள் ஆர்வம் இன்மையால் எல்லா வகுப்பும் நின்றன.

கோப்பாய் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் சம்ஸ்கிருதம் கற்பிப்பதோடு அமையாது வைதீகக் கிரியைகள் பூர்வக்கிரியைகள் ஆற்றுவித்து உபாத்தியாயம் செய்வித்து வந்தார். சற்றுப்பிந்தி வந்த, வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகள் அவர்களும் சம்ஸ்கிருதம் உயர் கல்வியாகப் படிப்பித்தார். இவரிடம் கற்றுத்தேர்ந்த முத்துக்கள் இருவர். ஒருவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள். மற்றவர் கோப்பாய் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா.

தற்பொழுது இந்தப் புனிதமான பாரம்பரியம் முறிந்துவிடாமல் அந்தணச் சிறுவர்கட்கு சமஸ்கிருதம் பயிற்றுவிப்பதோடு கோவிலில் நடக்கும் ஆகமக் கிரியைகளில் நேரடியான நடைமுறை Practical பயிற்றுவித்தலும் செய்வித்து, சம்ஸ்கிருதக்கல்வி கற்பிக்கும் முறையில் புரட்சியையும் புதுமையையும் நளினத்தையும் கலந்து வழங்கி வருபவர் தா. மகாதேவக் குருக்களாவர். யாழ்ப்பாணத்தில் தடுக்கிவிழுந்தால் இவருடைய மாணவர் ஒருவர்மீதுதான் விழ வேண்டும். அத்தனை மாணவ மணிகளைத் தயார்பண்ணி யாழ்ப்பாணச் சைவமரபுக்குப் பெருந்தொண்டாற்றி மிக அமைதியாக வாழ்ந்து வருகிறார். அந்தணர் சமுதாயம் இவருக்குப் பெரும் கடமைப்பட்டுள்ளது. ஆகமக்கிரியைகளை இலகுவாக்கி வழங்கியமை இவரது தனிச்சிறப்பு. இதனைப் பலர் மனத்திற் கொள்ளாமலும் பாராட்டமலும் இருப்பது வேதனை.

சற்றே பின்னோக்கிச் செல்லவேண்டியுள்ளது. சீதாராம சாஸ்திரிகளும் பஞ்சாட்சர சர்மாவும் பிராமண சமுதாய எல்லையைக் கடந்து நான்காம் வருணத்தாருக்கும் சம்ஸ்கிருதக் கல்வி கற்பித்துள்ளார்கள். இற்றைக்கு நாற்பது வருடங்கட்கு முன் லண்டன் பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர் பலர் சம்ஸ்கிருதத்தையும் ஒரு பாடமாகவே படித்துத் தேர்ந்தனர். அப்போப்பட்ட பலர் நாடியது சீதராம சாஸ்திரிகளையும் பஞ்சாட்சர சர்மாவையும்தான். பல பட்டதாரிகள், சில சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் இவர்களை நாடி சம்ஸ்கிருதம் கற்றுள்ளனர்.

நம்மிடையே வாழ்ந்த இன்னொரு பெரியாரைத் தவறவிடலாகாது. தவறவிடமுடியாது. இவர் பாரதத்திலிருந்து வந்து நம் குலமகள் ஒருவரை மணந்து நம்முடன் வாழ்ந்த வித்துவ சிரோமணி - நியாய சிரோமணி சுப்பிரமணிய சாஸ்த்திரிகள். வேதாத்தியனம் முடித்தவர். படித்தது சங்கரமடத்தில். பின்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்று நியாயசிரோமணிப் பட்டம் பெற்றவர். சக்தியே உருவானவர். கோபாவேசத்துடன்தான் எதையும் நாடுவார். யாழ்ப்பாணத்துப் பிராமண சமூகம் கல்வியில் பின்னிற்கிறதே என்று கோபம். தமிழ் தெரியாதவனைக் குட்டிய புலவர் ஒருவர். அப்படிப்பட்டவர்களை குறும்பியளவாய்க்காதைத் துளைத்தவர் இன்னொரு புலவர் - இவர்களைப்போல் கோபாவேசத்தோடு வலம்வந்த வடமொழி ஆசான் அறியாமையைச் சகிக்க முடியாமல் குழம்பியவர் இவர். இவருடைய கம்பீரமான தோற்றமும், பேச்சும் - தாக்குதல்களும் அலாதியானவை. வடமொழியின் முழுத்தோற்றமாய் வலம்வந்தவர் இவர். இவரது அறிவு பயப்பட வைத்தது. சிறந்த சம்ஸ்கிருத அறிஞர்.

சீதாராம சாஸ்திரிகளோ நண்பர்போல குழையக் குழைய இனிமையாகப் பேசுபவர். ஏராளமான உபகதைகள் சொல்லி மயங்கவைப்பவர். இவர் வியாகரணம் கற்பித்ததை பாணினி ஒருவரால்தான் பாராட்டமுடியும். இவர் ஒரு வியாகரண சிரோமணி.

நம்மிடையே வாழ்ந்து வந்து நமது மருமகளையே மணமுடித்த வியாகரண சிரோமண பூரண தியாகராஜா நிறைய நூல்கள் எழுதியதோடு நமது ஆலய மூலமூர்த்தியர் பேரில் பல தோத்திரங்கள் யாத்து வழங்கியுள்ளார்.

நமது நியாய சிரோமணி சுப்பிரமணிய சாஸ்திரிகளுடைய சகமாணவர்/ சமகால மாணவராக இருந்தவர். சமஸ்கிருத வியாகரண சிரோமணி. மிக இனியவர். கல்மனமில்லாத குழந்தை போன்றவர். "கடலேயனையம்யாம் கல்வியாலென்ன அடலே பெரிய" செருக்கற்றவர். தற்பெருமை சற்றும் இல்லாதவர். மிக மிக எளிமையானவர். கல்வி விஷயத்தில் உதவுவதற்கு எந்த எல்லைக்கும் சென்று உதவுவர்.

விஜ்ஞா ஜஹாதி வி நயஜ்। என்ற நீதி வாக்கியத்திற்கு உதாரணமாக வாழ்பவர். அடக்கம் எளிமை இவரது பூஷணம்.

நான் மேற்கூறிய பெருமக்கள் எல்லாம் நம்நாட்டில் சம்ஸ்கிருதக் கல்வி நிலைக்க, பரவ பெருந்தொண்டாற்றியவர்கள் என்ற வகையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்கள்.

யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வியைப்பற்றிக் குறிப்பிடுகையில் சுன்னாகத்தில் முகாந்திரம் சதாசிவக்குருக்கள் அவர்கள் வீட்டில் சிதம்பர சாஸ்திரிகளால் நடத்தப்பட்ட சம்ஸ்கிருத வகுப்பினைக் குறிப்பிடத் தவறக்கூடாது. சதாசிவஐயரவர்கள் சுவாமி விபுலானந்தர் தலைமையிலமைத்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினை பொன்னெழுத்துக்களில் குறிப்பிட வேண்டும். இந்த ஆ - தி - பா - சங்கம் இயங்கி எத்தனையோ பண்டிதர்களை யாழ்ப்பாணத்தில் உருவாக்கி நடமாடவிட்டது. அடியேனும் இந்தப் பிரவேசபண்டித பரீட்சையில் சித்தியெய்தியவன் என்று வணக்கத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சம்ஸ்கிருத கல்விக்கு உருப்படியான சேவை இந்த வகையில் - முகாந்திரம் தி.சதாசிவஐயரவர்களால் ஆற்றப்பட்டது என்பதை உரத்துக் கூறவேண்டும். இவர் ஒரு வித்தியாதரிசியாகக் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றியவர்கள். பிற்காலத்தில் இந்தப் பதவிக்கு Circuit Education Officer என்ற பெயர் மாவட்டக் கல்வியதிகாரி எனக் கவர்ச்சியான பேர் கொடுக்கப்பட்டது. அந்நாட்களில் அவரை இன்ஸ்பெக்டர் சதாசிவ ஐயர் என்றால்தான் தெரியும். நமது காலத்தில் யாழ்ப்பாணத்தில் வளைய வந்த இன்னொருவர் கோண்டாவில் நாராயண சாஸ்திரிகள் தமிழகத்தில் இவரது தந்தையார் வீட்டை "கனபாடிக்கூத்து" எனக் கூறுவர். இவரும் ஒரு வேதவித்து. எளிமையின் வடிவம். அலட்டிக்கொள்ளாதவர். சைக்கிளில் அலைந்து திரிந்து வைதிக கிரியைகள் செய்து வைத்த சிறந்த நல்ல ஒரு மனிதர் இவர். இவரும் யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருக் கல்வி வளரக் காரணமானவர்.

மேற்கூறியவாறு இந்தியாவிலிருந்து வந்த சாஸ்திரிகள் பலரும் இங்கு வாழ்ந்த இன்ஸ்பெக்டர் சதாசிவ ஐயர், அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், கோப்பாய் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா, பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் முதலிய பெரியோர்களெல்லோரும் யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருக்கல்வி வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்து வந்துள்ளார். இவர்களை நாம் பணிந்து சிரந்தாழ்த்தி வணங்கி நிற்கிறோம்.

# ஆலயங்களில் வடமொழியில் வழிபாடு செய்வது ஏன்?

சமீப காலங்களில் சைவமக்களிடையே ஒருவித எழுச்சி தோன்றியிருக்கிறது. இதை எழுச்சியா, குழப்பமா என்று கூற முடியவில்லை. தமிழ்மக்கள் மத்தியில் சுதந்திர தாகம், தமிழ் உணர்வு என்பன மேலோங்கி நிற்கும் இக்காலகட்டத்தில் ஆலயங்களில் வழிபாட்டையும் தமிழிலே ஆற்றினால் என்ன என்ற ஒருகேள்வி மக்களிடையே தோன்றியுள்ளதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இனிமேல் ஆலயங்களில் தமிழில் வழிபாடுகள் நடத்தலாமா? என்று ஆராய்வதற்கு முன்பு, இதுகாறும் ஏன் ஆலய வழிபாடுகள் சம்ஸ்கிருதமொழியில் நடைபெற்றுவந்துள்ளன என்பதைச் சற்று ஆராய்வோம்.

கிறிஸ்தவ சமயத்திற்கு பைபிள், இஸ்லாமுக்கு குர்ஆன், பௌத்த சமயத்திற்கு திரிபிடகம் எப்படியோ அப்படியே சைவ சமயத்திற்கு வேத சிவாகமங்கள் ஆதாரமான முதல் நூல்களாம். இதை ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் கூட "வேத சிவாகமங்கள் இரண்டும் சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளிச்செய்த முதல் நூல்களாம்" என்று தமது முதலாம், இரண்டாம் சைவ வினாவிடைகளில் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

நமது சைவசமயத்திற்கு முதனூலாயமைந்த இந்த சிவாகமங்கள் என்பன யாவை? அவற்றில் என்ன கூறப்படுகின்றன? என்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தமது முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகளில் எவ்வாறு விளக்குகிறார் என்று பார்ப்போம்.

**கேள்வி:** சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு அருளிச்செய்த முதனூல்கள் எவை?

**பதில்:** வேதம், சிவாகமம் என்றும் இரண்டுமாம். ஆகமத்தின் பெயர் தந்திரம், மந்திரம், சித்தாந்தம்.

**கேள்வி:** சிவாகமங்கள் இருபத்தெட்டும் எங்கே தோன்றின?

**பதில்:** சதாசிவமூர்த்தியுடைய உச்சிமுகமாகிய ஈசானத்தினின்றும் தோன்றின.

**கேள்வி:** சிவாகமம் இருபத்தெட்டுந் தனித்தனி எத்தனை பாதங்களுடையன?

**பதில்:** ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நான்கு பாதங்களுடையன.

**கேள்வி:** சிவாகமங்களக்கு வழிநூல்கள் எவை?

**பதில்:** மிருகேந்திரம் முதலான உபாகமங்கள் இருநூற்றேழுமாம்.

**கேள்வி:** சிவாகமத்தின் ஞானகாண்டப்பொருளைச் சுருக்கி இனிது விளங்கும் தமிழ்ச் சித்தாந்த நூல்கள் எவை?

**பதில்:** திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றி பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்குமாம்.

ஆலயங்களில் நிகழ்த்தப்படும் கும்பாபிஷேகம், துவஜாரோகணம் (கொடியேற்றம்), தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா முதலிய நைமித்திய காரியங்களும், ஏனைய நித்திய பூஜை முதலியன பற்றிய விதிகள் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன.

ஒரு ஆலயம் கட்டப்பட வேண்டிய விதிமுறைகளையும், விக்கிரகங்களின் லட்சணங்கள் பற்றியும், கொடிமரம், பலிபீடம், ஸ்தூபி, கோபுரம் முதலியவற்றின் பரிமாணங்கள் பற்றியும் ஆகமங் களில் கூறப்படுகிறது.

கும்பாபிஷேகம் செய்யும் விதிமுறைகள், யாகங்கள் அமைக்கும் விதம், ஓமகுண்டங்களின் லட்சணம், எண்ணிக்கை என்பனவெல்லாம் கூறப்படுகின்றது.

கும்பாபிஷேகத்தின்போதும், துவஜாரோகணத்தின்போதும் ரதோற்சவம், தீர்த்தோற்சவம் முதலியவற்றின்போதும் ஓதப்பட வேண்டிய வேதமந்திரங்கள் இன்னின்றவென்றெல்லாம் ஆகமங்களிலும் உபாகமங்களிலும் கூறப்படுகின்றன. குமார தந்திரமெனும் உபாகமம் முருகனது ஆலயங்களில் ஆற்றப்படும் கிரியைகள் பற்றித் தனியாகவும் சிறப்பாகவும் கூறும்.

சைவசமயம் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை கும்பாபிஷேகம் முதல் நித்தியபூசை வரையிலான சகல நித்திய, நைமித்திக வழிபாடுகள் சிவாகமங்களில் கூறப்பட்டவாறு நடைபெற்று வருகின்றன.

விக்கிரகங்களின் தெய்வ சாந்நித்தியம் நிலைத்து ஓங்குவதன் பொருட்டுச் செய்யும் நியாசம், தியானம், ஆவாஹனம், பிராணப் பிரதிட்டை ஆகிய கிரியா விசேஷங்களை ஆற்றும்போது கூற வேண்டிய மந்திரங்களெல்லாம் இன்னின்னவென்று வற்புறுத்தப் பட்டுள்ளன. மந்திரங்களோடு இணைத்துச் சொல்லப்படும் சக்தி வாய்ந்த பீஜாக்ஷரங்கள் தரப்பட்டுள்ளன. வெவ்வேறு தெய்வத்திற்கு வித்தியாசமான பீஜாக்ஷரங்கள் உள்ளன. இந்த பீஜாக்ஷரங்கள் மந்திரங்களின் சக்தியை வலுப்படுத்துவனவாம்.

மேலே கூறப்பட்ட கிரியைகளையெல்லாம் தமிழில் எப்படிச் செய்யலாம்? ஆலய வழிபாட்டில் மேலே சொன்னவற்றைவிட வேறும் எதனையோ கிரியா விஷேசங்கள் உள. யந்திரங்கள், மண்டலங்கள் (உம்: வாஸ்து மண்டலம்) வரைந்து அவற்றில் பீஜாக்ஷரங்கள் நிரப்பப்பட்டு ஆராதனை செய்யப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் எப்படித் தமிழை உபயோகிக்கலாம். அந்த ஒலிகளைத் தமிழில் அமைக்கவியலாதே! சிவாச்சாரியார்களும், அர்ச்சகர்களும் தமிழுக்கு விரோதிகளல்லர்.

ஆனால் மேற்கூறிய கிரியைகளைத் தமிழில் எவ்வாறு செய்வது, என்ன மந்திரத்தைச் சொல்லி வழிபாடு செய்வது என்பதுதான் பிரச்சினை. உச்சாரண ஒலிகளை எப்படித் தமிழில் கொண்டு வருவது என்பதுதான் பிரச்சனை.

வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவற்றைத் தள்ளி வைத்துவிட்டு புதிய மார்க்கத்தை வகுக்க நமக்கு அதிகாரமுள்ளதா? இது முக்கியமாக ஆராயப்பட வேண்டும். அப்படி மாற்றியமைக்கப்பட்டால், அவ்வாறு மாற்றியமைக்கப்படும் மார்க்கம் நிச்சயமாக சைவசமயமாக இருக்க முடியாது. சைவத்திற்கு மாறான போட்டியான இன்னொரு புதிய மதமாகத்தான் இருக்க முடியும்.

பழைய கத்தோலிக்க மதத்துடன் மாறுபட்டவர்கள் எதிர்ப்புச் சமயமாக புரட்டஸ்தாந்து சமயத்தை நிறுவினார்கள். புரட்டஸ்தாந்து சமயம் பிரிந்த நாட்தொட்டு இன்றுவரை இரண்டு மதப்பிரிவினர் களுக்கிடையே பெரிய யுத்தங்களே நடந்துள்ளன. இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்னும் சரித்திரப்பாடத்தையும் நாம்

இங்கு உற்றுநோக்க வேண்டும். கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்தவருக்குமிடையில் நடந்துமுடிந்த யுத்தங்களில் மடிந்த மக்கள் லட்சணக்கணக்கில் அடங்குவர். இந்த இருசாராருக்குமியிலான போர் இன்னும் அயர்லாந்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நாயன்மாருடைய காலத்திற்கு முன்பே ஆகம முறைப்படி ஆலயங்கள் கட்டப்பெற்று ஆகம விதிப்படி நித்திய, நைமித்தியங்கள் பேணப்பட்டு வந்துள்ளன.

அவ்வாறு ஆகமவழி வந்த கோவில்களையே நாயன்மார்கள் வழிபட்டு அருள்பெற்று அநுபூதிமான்களாகி முத்தியின்பத்தைப் பெற்றார்கள். அந்தக் கோவில்களில் வழிபட்டு அந்தத் தெய்வங்களின் அருளினால் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்கள். அவர்கள் சென்று வணங்கிய ஆலயங்களிலுள்ள சுவாமியின் பேரில் அவர்கள் பாடிய தேவாரங்களில் ஒரு சிறிய பகுதியைத்தான் நம்பியார் நம்பியால் எமக்கு மீட்டுக்கொடுக்க முடிந்தது. நாயன்மார்கள் பக்திப்பரவசத்தினால் தேவார திருவாசங்களைப் பாடிவிட்டுச் சென்றார்களேயன்றி அவர்கள் தங்கள் தேவாரங்கள் கோவில்களில் ஆராதனைக்குரிய மந்திரங்களுக்குப் பதிலாக ஓதப்பட வேண்டுமெனக் கருதியிருக்கவில்லை.

நாயன்மார்கள் காலத்திற்குப் பின்னும் எத்தனையோ அரசர்கள் ஆலயங்களைக் கட்டி, அவைகட்கு மானியங்கள் அளித்து கல்வெட்டுக்களில் சாஸனம் செய்தபோது எந்த ஒரு அரசனும் வழிபாடுகள் தமிழில்தான் நிகழ்த்தப்பட வேண்டுமென்று சாசனம் செய்யவில்லை. மாறாக வேதாகம மார்க்கங்களையே வலியுறுத்தி சாசனம் செய்துள்ளார்கள் வேதம் ஓதும் பிராமணர்கட்கு நிலங்கள் கொடுத்து ஆதரித்துள்ளார்கள்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சைவசமயம் அழிந்துவிடாமல் பெரும் போராட்டம் எல்லாம் நடத்தி சைவத்தைக் காப்பறாற்றியவர்கள். பல சமய நூல்களை இயற்றி அச்சிட்டு வெளியிட்டவர்கள். அவர்கள் ஆகம மரபுகளின்பால் வைத்திருந்த நம்பிக்கைக்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை ஈண்டுகூறுவது மிகையாகாது.

மிகப் பிரபலமான நல்லூர் ஆலய நடைமுறைகளில் சில ஆகம மரபிற்கு மாறானது என்று சுட்டிக்காட்டி அதைத் திருத்திக் கொள்ளுமாறு ஆலய அறங்காவலரைக் கேட்டுக்கொண்டார் நாவலர். ஆனால் அறங்காவலர் அதனைச் செவிமடுக்கவோ, ஆராதனை முறைகளை திருத்திக்கொள்ளவோ இல்லை. இதனால் வேதனை அடைந்த நாவலர் ஆகம மரபுகளை மதிக்காத கோவிலுக்கு நான் போகமாட்டேன் என்று சபதஞ் செய்து இறுதிவரை நல்லூர்க் கோவில் பக்கமே காலடி வைக்காது தம் எதிர்ப்பினைக் காட்டிக்கொண்டார்.

வேதமந்திரங்கள் அவற்றின் ஒலிகளுக்காகவே ஓதப்படுகின்றன. வேத மந்திர ஒலிகள் அந்தர ஆகாயத்தில் உள்ள ஒலி அலைகளில் அதிர்வுகளை ஏற்படுத்த வல்லவை எனக் கற்றோர் கூறுகின்றனர். இன்றைய விஞ்ஞானமும் இதற்கு சாட்சி பகருகின்றது. வானொலி, டெலிவிஷன்களின் இயக்கங்களை அறிந்தவர்களுக்கு இவற்றை விளங்கிக்கொள்வதில் சிரமமம் இருக்காது.

மந்திர ஒலிகள் விக்கிரங்களில் சக்தியை உண்டு பண்ணுகின்றன. மூர்த்திகரத்தை வலுப்படுத்துகின்றன. இவை ஆலயத்திலும், அதன் சூழலிலும் தெய்வ சந்நித்தியத்தை உண்டுபண்ண வல்லவை.

இங்கே ஒரு முக்கிய விஷயத்தைக் கருத்தில் கொள்ளப் பலரும் தவறிவிடுகின்றனர். இமயம் முதல் குமரி வரையிலுள்ள முழு பாரதத்திலும் நம்

சமயத்தைச் சார்ந்தவர்களே வாழ்கின்றனர். இவர்களெல்லோரும் சிவனையும் உமையவளையும், முருகனையும், திருமாலையும், லட்சுமியையும் மற்றும் நம் கடவுளர்களையே வணங்குபவர்கள்தான். தமிழ்நாட்டின் முருகனை வடநாட்டில் கார்திகேயனென்று அழைக்கிறார்கள். ஆதிகாலத்தில் பாரதத்தில் சிவனை வழிபடும் ஒரே ஒரு மதம்தான் இருந்தது. அதுகூட "மதம்" என்று அடையாளப்படுத்தப்படவில்லை. ஒரேயொரு மதம் என்பதால் அதற்கு ஒரு பெயர் தேவைப்படவில்லை. தேவைப்படும்போது சனாதன தர்மம் எனக் குறிப்பிட்டார்கள். மேலைத்தேயத்திலிருந்து வந்த மிலேச்சர்கள் இந்துநதி பாயும் நாட்டை இந்தியாவென்றும் அங்கு நிலவிய வழிபாட்டை இந்துசமயம் என்றும் வழங்கினர். இப்பொழுது இந்தியாவில் சிவனையும் திருமாலையும் வணங்கும் சகலருக்கும் இந்து என்ற குறியீடு நிலைத்து விட்டது.

இந்தியாவில் நூறுகோடி இந்துக்கள் இருக்கின்றனர். அவர்களில் ஆறுகோடியினர் மாத்திரமே தமிழர்கள், இந்துக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு வழிபாட்டு மொழி இருப்பது எவ்வளவு சிறப்பு. வடஇந்தியாவைத் தவிர்த்து திராவிடம் என வழங்கப்படும் தென்னத்தை எடுத்துக்கொண்டால் அங்கு தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் எல்லாரும் அங்கு சிவனை வணக்குபவர்கள்தான். திராவிட தேசத்தில் உள்ள நான்கு மொழியினரையும் சேர்த்தால் ஏறக்குறைய முப்பதுகோடி இந்துக்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஆறுகோடியினரே தமிழ்மக்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தென்னகத்திலுள்ள முப்பது கோடியினரும் தமிழ்நாட்டில் உள்ள சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து வணங்குவது வழக்கம். இராமேஸ்வரத்திலுள்ள இராமநாதேஸ்வரர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களில் பலர் வடநாட்டு சேட்டுகளும் ஏனையோருமாம். இவர்களுக்கு நாம் தமிழில் மந்திரம் சொல்ல முடியுமா?

"தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற கூற்றில் உள்ள பரந்த மனப்பான்மையும் ஆழ்ந்த ஞானமும் உற்று நோக்கற்பாலது. ஆனால் இன்று இந்த பரந்த மனப்பான்மையை விட்டு குறுகிய நோக்கமுள்ளவர்களாக ஆக்கப் பட்டுவிட்டோம். போகட்டும் விடுங்கள்.

சில நடைமுதுறை விஷயங்கட்கு வருவோம். கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஸ்ரீ சத்தியசாயி பாபாவை வணங்கும் ஒரு இயக்கம் பரவி சைவமக்கள் வெள்ளிக்கிழமைகளில் கோவில்களுக்குப் போவதுபோல் வியாழக்கிழமைகளில் பாபா பஜனைக்குப் போவது வழக்கமாகிவிட்டிருக்கிறது. சாயிபாபா பஜனையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் இருக்கின்றன. இவை புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் பத்துக்குக் குறைவான பாடல்களே தமிழில் உள்ளன. பஜனைகளின்போது பாடப்படும் பாடல்கள் எல்லாமே ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அமைந்த பாடல்கள்தான். பாபாவின் அர்ச்சனை மந்திரம், சுப்பிரபாதம் எல்லாமே சம்ஸ்கிருதத்தில் உள்ளன. நம் சைவ மக்கள் இந்தப் பஜனைகளில் பக்திபூர்வமாக கலந்து கொள்கின்றனர். பஜன்கள் பாடப்படும்போது எல்லாரும் பரவசநிலையில் ஆனந்தமாக ஆடிப்பாடி அனுபவித்துப் பாடுகிறார்கள். இவ்வாறு இவர்கள் பக்திப்பரவச நிலையை அடைவதெல்லாம் சம்ஸ்கிருத தெலுங்கு கன்னட மொழிகளிலமைந்த

"ப்ரேம முதித மனஸே கஹோ ராமராமராம்"

"யமுனா தீரவிஹாரி"

"போலோ ராம் போலோ ராம் ஜய்ஜய் ராதேராம்"

என்பது போன்ற வேற்றுமொழிப் பாடல்களைப் பாடியேயாம். இங்கு பாஷை பக்திக்கு இடையூறு செய்யவில்லை. கருத்து விளங்கவில்லையே என்று யாரும் கவலைப்படவில்லை. யாருமே பாபா பஜனையைத் தமிழில் நடத்துங்கள் என்று இந்த இருபத்தைந்து வருட காலத்திலும் கூச்சல் போட்டதில்லை. நமது கோவில்களுக்கு போகும் அதே நம் மக்கள்தான் பாபா பஜனைகளையும் நடத்தி வருகிறார்கள். பாபாவின் பஜனைகளில் பக்தி ததும்பி நிற்பதை யாரும் அவதானித்தறியலாம்.

சரி, தேவார திருவாசகங்களை ஓதி வழிபடுகிறோம் என்று வைத்துக்கொண்டாலும் தமிழல் உள்ள தேவார, திருவாசங்களின் பொருளை எத்தனை பக்தர்களால் விளங்கிக்கொள்ள முடியும். தேவார திருவாசங்களின் பொருள் எல்லோருக்கும் விளங்குமா?

பொருள் விளங்காத மந்திரத்தால் பலனில்லையென்று தமிழில் தேவாரங்களை ஓதி வழிபடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதுகூட திருவாசங்களின் பொருள் எல்லோருக்கம் விளங்குமா - அப்படியானால் தேவார திருவாசங் களின் கருத்து விளங்காத படிக்காத பாமர மக்களுக்கு கோவிலுக்கு போவதினால் பயனில்லையென்று ஆகிறதே. சிந்தித்துப் பாருங்கள். தமிழோ, வேறு மொழி விளங்காத பாமரன் கோயிலுக்குப் போவதால் பயனில்லை என்று கூறிவிட முடியுமா?

அர்ச்சகரானவர், பூசை வழிபாடு செய்யும் நேரங்களில் இறைவனைப் பார்த்துக்கொண்டுதான் வேதமந்திரங்களை ஓதுகிறார். மக்களை நோக்கியல்ல. வேதோச்சாரனம், பிம்பம், தம்பம், கும்பம் என்பவற்றில் மூர்த்திகரத்தையும் தெய்வீகத்தையும் ஏற்படுத்துவதற்காகவே ஓதப்படுகின்றன. ஆலயங்களில் தெய்வ சாந்நித்தியம் மிக்கவையாக ஆக்குவதற்காகவே இந்த வேத மந்திரங்கள் வகுக்கப் பட்டுள்ளன. தெய்வ சாந்நித்தியம் நிறைந்த ஆலயங்களில் வழிபடுவதனால் பக்தர்களுக்கு அனுக்கிரகம் கிடைக்கின்றது.

ஆலயங்களில் தமிழில் மக்கள் தேவார திருவாசங்களை பூஜா காலங்களின்போதும் அதற்கு முந்தியும் ஓதி வழிபடுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டே வந்துள்ளது. ஏறக்குறைய அறுபது (60) வருடங்களுக்கு முன்பு எமது வீட்டிற்கு அருகாமையில் அமைந்த பிள்ளையார் கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் சிவநாம பஜனை தவறாது நடந்து வந்தது. அதில் முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்வார்கள். ஆனால் ஒரு பத்து வருடங்கட்கு முன்பு அங்கே சென்று அவதானித்தபொழுது அங்கு சிவநாம பஜனை முன்புபோல் இப்பொழுது நடப்பதில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் பழைய வழக்கத்தைக் கைவிடாமல் இரண்டே இரண்டு பேர் அதுவும் அறங்காவலர் சபையைச் சேர்ந்தவர்கள் கையில் தாளங்களுடன் தேவார திருவாசங்களைப் பாடிக்கொண்டு கோவிலைச் சுற்றி வந்ததைப் பார்க்க வேதனையாக இருந்தது. தமிழில் வழிபடும் ஆர்வம் எங்கே போய்விட்டது.

யாழ்ப்பாணத்து தமிழரைக் கல்வியறிவுமிக்க ஒரு சமுதாயத்தினராக வளர உதவிய புராணபடனங்களுக்கும் இதுதான் நேர்ந்தது. இன்றும் கோவில்களில் புராணபடனங்கள் நடக்கின்றன. ஆனால் அவற்றைக் கேட்டுப் பயனடைய யாருமில்லை. புராண படனத்தினால் அறிவுபெற்ற சமுதாயம் என்றதைச் சுட்டிக்காட்டவே கந்தபுராண கலாச்சாரமெனக் கூறப்பட்டது என்பதை இங்கு சுட்டிக் காட்டவேண்டும். புராணங்கள் வேதாகம சாரங்களைப் பாமரரும் விளங்குமாறு எடுத்துக்கூறுவன புராணபடனமென்பது. இவற்றை மேலும் எளிதாக்கி, தெளிவாக்கி புராணத்திற்கு பொருள் கூறுவதேயாம். இதைக் கேட்கக்கூட இன்று யாருமில்லை. தமிழில் பொருள் கூறப்படும்போது அதைக்கேட்க யாரும் வருவதில்லையே. ஏன் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் பின்பற்றி வந்த

மரபின்படி சமஸ்கிருதத்தில் பூசை செய்வதினால் அந்தணர்கள் தமிழ்மொழிக்கு எதிரானவர்கள் என்றொரு கருத்து இளைஞர்களிடம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. பல்லாயிரம் வருடங்களாகத் தமிழ்நாட்டில் வாழும் அந்தணர்கள் இனத்தினால், உணர்வினால் தமிழரே. அவர்கள் பேசும் தாய்மொழி தமிழே. அவர்கள் அசல் தமிழர்கள். தமிழ்ப்பற்று மிக்கவர்கள்.

அந்தணர்கள் தமிழை வளர்த்து பெருந்தொண்டாற்றியவர்கள். தேவார திருவாசகமோதி சைவம்வளர்த்த சமயகுரவர்கள் நால்வரில் மூவர் அந்தணர்கள். கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் ஒரு அந்தணர். அழிந்த திருமுறைகளை மீட்டெடுத்துத் தந்த நம்பியாண்டார் நம்பி ஒரு அந்தணர்.

அழிந்துபோன குண்டலகேசி, வளையாபதி, மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் என்னும் ஐம்பெருங் காப்பியங்களை ஊர்தோறும் அலைந்துதேடி, ஏடுகளிலிருந்து துருவி ஆராய்ந்து பதிப்பித்து பெரிய தொண்டினை ஆற்றியவர் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படும் டாக்டர்.உ.வே.சாமிநாமைதயரவர்கள்.

மஹாகவி சுப்பிரமாணியபாரதி முறையாக வேதமோதிய பிராம்மணர்! முதன்முதலில் பத்திரிகைகள் சஞ்சிகைகள் தாபித்து ஆங்கிலத்தில் டிக்கின்சைப்போல், தமிழ்வாசகர்களை உண்டுபண்ணி எல்லாரையும் தமிழ் படிக்க வைத்தது அந்தணர்கள். கல்கி என்ற கிருஷ்ணமூர்த்தி, ஏ.எஸ்.வாசன் எல்லாரும் தமிழரே. சுதந்திரத்திற்காகப் போராடி சிறை சென்றவர்களில் கணிசமானவர்கள் பிராமணர்கள். இராஜகோபாலாச்சாரி சுதந்திரப்போராட்ட வீரர், சிறை சென்றவர். தமிழ் மொழிக்கு இவர் ஆற்றிய தொண்டை மறக்க முடியுமா?

முதன்முதலில் தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்த சுவாமி வேதாசலம் என இயற்பெயர் பூண்ட மறைமலை அடிகள் சைவத்தின்பால் அபிமானங்கொண்ட ஆஸ்திகர்தான். இவருக்கு வலதுகரமாக இருந்து தனித்தமிழ் இயக்கத்தை நடத்திய சூரிய நாராயண சாஸ்திரிகள் கூடப் பிராமணர்தான். தனித்தமிழ் இயக்க உத்வேகத்தில் இவர் தனது பெயரைப் பதிமாற்கலைஞர் என்று மாற்றிக்கொண்டவர்.

தமிழுக்குத் தொண்டாற்றிய அந்தணர்களின் பட்டியல் மிக நீண்டது. இதை யாராலும் மறுக்கமுடியாது. நாகரிகம் வளர்ந்த பண்பட்ட ஒரு இனத்தவரிடையே "துவேஷம்" இருக்கக்கூடாது. அதை யாரும் அனுமதிக்கவும் கூடாது. ஆகவே நாம் இதுவரை கூறியதாவது சைவாகம வழிநின்று அதிற் கூறப்பட்ட விதிமுறைகளின்படி ஆலய வழிபாட்டினைச் செய்தால்தான் அது சைவசமயமாகும். சைவாமகங்கட்கு விரோதமான கோவில்களை நடத்தினால் அது சைவத்திற்கு மாறான வேறொரு சமயமாக மாறுமே தவிர சைவமாகாது. பல்லாயிரம் வருடங்களாக சமண, பௌத்த, கிறிஸ்தவ மதங்களோடு போராடி, நிலைத்து நிற்பது. காலத்தால் அழியாது காலத்தின் சோதனைகளை வென்று நிற்பது சைவம். சைவாகமங்களே சைவத்தின் பலம்.

ஐந்தாங்குரவரான ஆறுமுகநாவலர் போற்றிப் பாதுகாத்து, நமக்கு அளித்த சைவத்தை சைவ ஆலளயங்களை முன்புபோல் பாதுகாத்து வழிவழியாக வந்தபடி எங்கள் பாட்டன், முப்பாட்டன்கள் வழிபட்ட வழியில் நாமும் நின்று வழிபட்டு சைவத்தைக் காப்ப எம் அனைவரதும் கடனாகும். அது பிதர்கடன்.

நமச்சிவாய என்னும் நாமம் நிலைக்கட்டும். நாத நாம நமச்சிவாயவே. எல்லோரும் வாழ்க.

# அச்சுவேலி. சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

யாழ்ப்பாணத்துச் சைவமக்களின் தவப்பயனாய் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் அவதரித்தார். அவர் பிறந்த வருடத்தைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லையானாலும், அவர் பிறந்தது 1892க்கும் 1895ற்கும் இடையிலாக இருக்கலாம். இது எப்படியானால் எமது தந்தையார் சிவசங்கர - சிவப்பிரகாச பண்டிதரிடம் படித்த பொழுதுதான், பண்டிதவர்களிடம் குமாரசுவாமிக் குருக்களும் படித்ததாகவும், குருக்கள் தன்னைவிட இரண்டொரு வயது இளையவர் என்றும் தந்தையார் கூறியிருக்கிறார். இதன் அடிப்படையிலேயே மேற்கூறிய வருடங்களில் அவர் பிறந்திருக்கலாமென ஊகித்தேன். நிற்க. படிக்கும்பொழுதே அவர்கள் ஆகம ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள்.

நாவலர் அவர்கள் பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், பாலபாடங்கள், இலக்கணச்சுருக்கம் முதலிய பல தமிழ் நூல்களைப் பதிப்பித்து யாழ்ப்பாணத்தில் நாவலர் ஒரு திசையிற் செல்ல, நமது குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் இன்னொரு திசையில் மிகவும் காத்திரமான வலுவான பெரிய சேவையை ஆற்றியுள்ளார்கள். குருக்களாற்றிய சேவைகளைத் தமிழில்கூட யாரும் செய்யவில்லை. தமிழகத்தில் டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் அவர்கள் எவ்வாறு பழைய தமிழ் நூல்களை ஆராய்ந்து பதிப்பித்து தமிழகத்திற்கு அளித்தாரோ அவ்வாறே நமது அச்சுவேலி குருக்களவர்கள் ஆகமங்களை ஆராய்ந்து அச்சிடுவித்து சைவ உலகிற்குப் பெரிய உபகாரம் செய்துள்ளார்கள்.

நமக்கு வேதசாஸ்திரங்களையளித்த ரிஷிகளுக்கு உபாகர்மத்தின்போது எப்படி பிரம்ம யக்ஞ தர்ப்பணாதிகளைச் செய்து கடன் தீர்க்கிறோமோ, அவ்வாறே நமது குமாரசாமிக் குருக்களும் அவ்வாறான பூஜா, மரியாதைகளுக்குரியவராவார் என்று எம்மால் அறுதியிட்டு கூறமுடியும்.

அவர்கள் தாம் பிறந்த அச்சுவேலியில் சைவப் பாடசாலையொன்று நிறுவியுள்ளார். அப்பொழுது பரசமய வியாபகம் அதிகமாக அங்கு நிலவியது. தீவிரமான பரசமயப் பிரசாரம், சமயமாற்றம் முதலிய காரியங்கட்கு பாடசாலைகள் ஒரு கருவியாகப் பாவிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் அச்சுவேலியில் ஒரு சைவப்பாடசாலையின் அவசியம் மிகமிக முக்கியமான தேவையாக உணரப்பட்டது. ஆதை அவர் செய்து முடித்தார். இவர் ஸ்தாபித்த பாடசாலை சரஸ்வதி வித்தியாசாலை என நாமதேயம் பூண்டுள்ளது.

பாடசாலை கட்டுவித்ததுமல்லாமல் சைவ மாணவர்க்கு சைவசமயம் சம்பந்தமான அறிவினை நல்குவதற்காக

சைவப்பிரகாசிகை - 1ம் புத்தகம்

சைவப்பிரகாசிகை - 2ம் புத்தகம்

சைவப்பிரகாசிகை - 3ம் புத்தகம்

சைவப்பிரகாசிகை - 4ம் புத்தகம்

சைவப்பிரகாசிகை - 5ம் புத்தகம்

என ஐந்து பாட நூல்களை அச்சிட்டு வெளியிட்டார்கள். இவர்கள் எமக்கருளிய நூல்களிற்சில பின்வருமாறு :-

தமிழில்

01 சிவபூசை விளக்கம்
02 பிராசாத தீபம்
03 சிவபூசை விதி
04 அனுட்டான அகவல்
05 விநாயக பரத்துவம்
06 புவனேசுவரி மகத்துவம்
07 சைவப்பிரகாசிகை 01முதல் 05வரை- ஐந்து புத்தகங்கள்.
08 சிராத்த தீபிகை
09 மகோற்சவ சந்திரிகை
10 வேதாகம நிருபணம் - முதற்பாகம்
11 வேதாகம நிருபணம் - இரண்டாம் பாகம்

சம்ஸ்கிருதத்தில்

01 சிவாகம சேகரம்

02 சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி

03 விக்னேஸ்வர பிரதிஷ்டாவிதி

04 சுப்பிரமண்யப் பிரதிஷ்டாவிதி ஆகியன சிலவாம்.

இந்நூல்களையெல்லாம் அச்சிடுவிப்பதற்கு உதவியாக குருக்கள் ஏறக்குறைய இருபது பேறறிஞருடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் கிடைக்கக் கூடிய ஆகம நூல்களை ஆராய்ந்து அத்தோடு ஆதியான காரணம், காமிகம், வாதுளம் ஆகிய ஆகம நூல்களையும் நன்கு ஆராய்ந்து மிகவும் சுத்தமாக வெளியிட்டுள்ளார்கள். இவற்றைக் குருக்களவர்கள் ஆராய்ந்ததற்குச் சான்றாக அவரது நூல்களில் இந்தப் பிரமாண நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்நூல்களைப் பதிப்பிப்பதற்கு குருக்கள் அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டார் என்பதை நாம் ஊகிக்கமுடியும். சிவலிங்கப் பிரதிஷ்டாவிதியின் உபோற்காதத்தில் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

“நான் முன்பு வெளியிட்ட நூல்களைப் பார்த்த அன்பர்கள் இதன் தொடர்பாயுள்ள பகுதிகள் முழுவதையும் ஒருங்கே பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து

வெளிப்படுத்தல் வேண்டுமென்று வேண்டினார்கள். அவர்கள் விருப்பத்திற்கியைந்து அவ்வாறே இச்சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி இரண்டாம் பாகத்தை நிறைவேற்றினேன்.

இதனைப் பரிசோதித்துக் கொண்டு வருங்காலத்தில் பழைய பிரதிகள் வேண்டப்படுதலை எனது நண்பர்கட்கு நேரிலும், கடிதமுலமாகவும் தெரிவித்தவிடத்து அவர்கள் அதனைப் பொருப்படுத்தித் தம்மிடத்துள்ள பத்ததிப் பிரதிகளை மனமுவந்து அனுப்பி வைத்தார்கள். அப்பரோபகாரிகள் உபகரித்த பிரதிகளையும் அச்சிட்ட சென்னைப் பிரதிகளையும் வைத்துப் பார்வையிட்டு இயன்றவாறு பரிசோதித்தும் அவசியம் வேண்டப்படும் ஆகமப்பிரமாணங்களை உரிய இடங்களிற் புதிதாக சேர்த்தும் எழுதி முடித்து சிவஸ்ரீ அருணாசல சிவாச்சாரியரது குமாரராகிய இராமநாதக் குருக்களின் பார்வைக்கு அனுப்பிவைத்தேன்."

இதிலிருந்து குருக்களவர்கள் எத்தனை தொலைத் தூரத்திலுள்ள அறிஞர்களைத் தொடர்பு கொண்டு பிரதிகளைப் பெற்று ஆராய்ந்து நமக்கு தேவையான ஆகம நூல்களையெல்லாம் ஆக்கிக் கொடுப்பதற்கு சிரமப்பட்டுள்ளார்களென்பது தெளிவாகிறது.

குருக்களவர்கள் சிவாச்சாரிய அந்தணப் பெருமக்களுக்குச் செய்த பரோபகாரத்திற்கு ஈடு செய்ய முடியாது. அவர்களும் நமது முன்னையோர் போன்று நமது பூஜா தர்ப்பணாதிகட்கு அருகதையுள்ளவரெனக் கருதவேண்டும்.



# அமரஸிம்மன்

தமிழ் சமஸ்கிருத பாஷைகளில் முக்கியமான ஓர்அறிவுக் களஞ்சியம் நிகண்டு. மேலைத்தேய மொழிகளுக்கு நிகண்டு இல்லை. அகராதிகள் உள்ளன. ஆனால் இந்த அகராதிகள் முக்கியமாக ஆங்கிலத்தில் ஏறக்குறைய 500 வருடங்களுக்கு முன்புதான் எழுதப்பட்டுள்ளன. டாக்டர் ஜான்சன் என்னும் ஆங்கில அறிஞனே முதலாவது அகராதியை எழுதி வெளியிட்டான்.

சமஸ்கிருதத்தில் அமரசிம்மன் என்பவனால் சமஸ்கிருத நிகண்டு எழுதப்பட்டது. இந்த நிகண்டுக்கு அவன் "நாமலிங்காநுசாஸநம்" என்று பெயரிட்டுள்ளான். இதில் ஸ்வர்க்க வர்க்கம், திக்வர்க்கம், காலவர்க்கம், தீவர்க்கம், வாக்வர்க்கம், நாட்யவர்க்கம், பூவர்க்கம், புரவர்க்கம், வநௌஷதி வர்க்கம், மநுஷ்ய வர்க்கம், ப்ரஹ்ம வர்க்கம், க்ஷத்ரிய வர்க்கம், வைச்ய வர்க்கம், சூத்ர வர்க்கம் என்பன முக்கியமானவையாகும். இந்த அமரஸிம்மனுடைய மூளை ஒரு கம்பியூட்டரோ என்று இன்று வியந்து நிற்கத்தக்க வகையில் பல விஷயங்களைக் கூறியிருக்கிறான்.

உதாரணமாக நாட்ய வர்க்கத்தில் சங்கீத நாடக நாட்யங்கள் சம்பந்தமான இசைக்கருவிகள், தாளவாத்தியக் கருவிகள், நவரஸங்கள், முகவாத்தியங்கள் முதலியவற்றுக்குரிய பெயர்களையும் வேறு பல அரிய விஷயங்களையும் கூறுகிறான்.

நாட்யவர்க்கத்தின் அறிமுகத்திலே ஸப்த ஸ்வரங்களைப் பற்றி இவன் கூறும் அழகே அலாதியானது. எப்படிக் கூறுகின்றான் பாருங்கள்

நிஷாதர்ஷப கா்ந்தார ஷட்ஜ மத்யம தைவதா:।
பஞ்சமஶ்சேத்யமீ ஸப்த தந்த்ரீ கண்டோத்திதா: ஸ்வரா:॥

என்று சப்தஸ்வரங்களின் பெயர்களைக் கூறிவிட்டு அந்த ஸப்தஸ்வரங்களையும் எங்கெங்கு கேட்கலாம், எப்படிப்பட்டவை என்பதை அவன் கூறியிருப்பது ஆழமாகச் சிந்திக்கத்தக்கது.

> ஷட்ஜம் மயூரோ வததி காவஸ்த்வ்ருஷப பாஷிண:
> அஜாவிகம் து காந்தாரம் க்ரௌஞ்ச: க்வணதி மத்யமம்।
> புஷ்ப ஸாதாரணே காலே பிக: கூஜதி பஞ்சமம்
> தைவதம் ஹேஷதே வாஜீ நிஷாதம் ப்ரும்ஹதே கஜ:॥

| | | |
|---|---|---|
| மயில் அகவும் த்வநி | - | ஷட்ஜம் |
| எருதுகள் இடும் சப்தம் | - | ரிஷபம் |
| வெள்ளாடு முதலியன | - | காந்தாரம் |
| கிரவுஞ்சப்பட்சி கூவுவது | - | மத்யமம் |
| வஸந்தகாலத்தில் கூவும் குயிலின் சப்தம் | - | பஞ்சமம் |
| குதிரையிடும் சப்தம் | - | தைவதஸ்வரம் |
| யானையின் சப்தம் | - | நிஷாதம் |

இதிலிருந்து அவன் உலகத்தில் உள்ள யாவற்றையும் நேரில் மிக நுணுக்கமாகப் பார்த்துப் பதிவு செய்து உலகத்திற்கு மிக உபயோகமான வகையில்

வழங்கியிருக்கிறானென்பது தெளிவாகிறது. மேலும், உலகத்தையும் பல தேசங்களிலுள்ள மாந்தர்களையும் மாந்தரின் பழக்கவழக்கங்களையும் இவற்றை விட இயற்கையையும் மரங்களையும் பற்றி, மிருகங்களைப்பற்றி, ருதுக்கள், காலங்கள் இவைகளைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து அவற்றைப் பற்றிக் கூறியிருப்பது நம்மை மலைக்க வைக்கிறது.

இவன் ஒரு பௌத்தன். இவனை ஜைனன் என்பாருமுளர்.

இவன் பௌத்தன் என்றாலும் ப்ரஹ்ம வர்க்கத்தில் யாகங்களின் விபரங்களையும் அதில் பங்கு பற்றுபவர்களைப் பற்றியும் யாகத்தில் உபயோகிக்கும் பொருட்களைப் பற்றியும் கூறியிருப்பதைப் பார்க்கும் பொழுது இவற்றையெல்லாம் ஒரு பௌத்தனால் எப்படி அறிந்து கொள்ள முடிந்தது என்று பெரு வியப்பாக உள்ளது.

இது மட்டுமல்ல ஸ்வர்க்க வர்கத்தில் இவன் கூறியிருப்ப வற்றைப் பார்த்தால் அதாவது இவன் ஒரு பௌத்த ஜைநனாக இருந்தும் ஏனைய சமயத்து தெய்வங்களைப் பற்றிக் கூறியிருப்பது அவனது சம நோக்கினை, சமய சமரஸத்தை, நடுநிலையை மட்டுமல்ல இவன் மாந்தரில் எவ்வளவு உயர்ந்த பண்பாளன் பரிசுத்தமானவன் என்பதையும் எண்ணி அவனை நினைத்து கைகூப்பி அஞ்சலி செய்யத் தோன்றுகிறது.

சித்தியெய்திய காஞ்சி முனிவர் மஹா பெரியவாள் இந்த அமரஸிம்மனை மிகவும் உயர்வாகக் குறிப்பிட்டதோடு, துவேஷ மெதுவுமில்லாமல் இந்துத்தெய்வங்களினது நாமாக்களை ஸ்வர்க்க வர்க்கத்தில் அழகழகாக அமைத்து வழங்கியிருப்பதை யிட்டு மிக உயர்வாகப் பாராட்டியுள்ளார்கள்.

இந்த அமரசிம்மன் விக்கிரமாதித்த மஹாராஜா காலத்தவ னென்றும், அவனது சபையில் ஒன்பது மணிகளில் இவன் ஒருவனென்றும் அவனது ஆஸ்த்தான வித்துவானாயிருந்தவ னென்றும் தெரிகிறது. அதற்குச் சான்றாக அமரம் புஸ்தக முகவுரையில் பின் வரும் சுலோகம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

> யந்வதாஈக்ஷவணகாஊஈஸிம்ஹஶஜ்ஞ
> ஹெதாள ஹட வடகவஈ காஉிஷாஸா:
> வூாதொ வஈாஹஶிஹிரொ நூவதெஸ்வஹாயாம்
> ஈதூாநிவை வஈஈஷி நஉ விகூஉஸ்வ

அமரசிம்மனையும் விக்ரமார்க்கனையும் பற்றிச் சுவையான சம்பவமொன்று கூறப்படுகிறது.

அமரசிம்மன் தானியற்றிய இந்த நாமலிங்கானுசாசன மென்கின்ற நிகண்டினை விக்ரமார்க்க மஹாராஜாவுக்கு அர்ப்பணிக்கப் போயிருந்தான். இவன் ஒரு பௌத்தனாயிருந்த காரணத்தினால் அங்கிருந்த ஏனைய கவிகள் இவன் இராஜ தரிசனஞ் செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.

அமரசிம்மன் மனம் நொந்து தனது நூலைப் பிரசித்தம் செய்யாமல் அதைத் தம் மாணவர்கட்குப் பாடமாக மட்டும் போதித்து வந்தானாம். இவ்வாறு இவன்

சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது விக்ரமார்க்கன் அவ்வழியே குதிரையில் சவாரி செய்து கொண்டு வந்தபொழுது அமரஸிம்ஹனைக் கண்டான். அவனோடு அளவளாவியபோது அமரஸிம்மன் தனது நாமலிங்கானுசாசனமென்ற நிகண்டினைப் பற்றியும் எடுத்துரைத்தான்.

மஹாபண்டிதனான விக்ரமார்க்க மஹாராஜா அப்பொழுது அமரஸிம்மனைப் பார்த்து "இக்குதிரையின் காலிலிருந்து சிதறுகின்ற தூளிக்கு எத்தனை பதங்கள் உமது நிகண்டில் உள்ளன" என்று கேட்டிருக்கிறான். அதற்கு அமரசிம்மன்

ரெணு ஆ்யொஃ ஷி யாஂ யூஷ ஃ
த்ர

வாஂஸு ந்ாநுயொ ரஜஃ

என்று கூறியுள்ளான். இதைக் கேட்ட விக்ரமார்க்கனுடைய உணர்வுகளை எப்படிப் பதிவு செய்துள்ளார்கள் என்பதை அமரத்தின் முகவுரையில் கூறியுள்ளபடி அப்படியே தரப்படுகிறது.

அந்த விடையைக் கேட்டு "அத்யந்தாநந்தபரனாய் அரை சுலோகத்தில் தூளியின் பர்யாய பதங்களையும் அவற்றில் லிங்க (பால்) விவரணங்களையும் விளக்கி வெளியிட்ட இவன் மஹாபண்டிதனேயாகுமென்றும் இக்கவி தனக்கு ஸமஸ்தான ஆஸ்தான பண்டிதனாயிருத்தல் தக்கதென்றும் மதித்து அவ்வமர ஸிம்ம கவியைத் தனது போஷிணையில் அமர்த்திக் கொண்டான்" அதாவது சமஸ்தான வித்துவானாக்கினான் என்ப.

இந்த நாமலிங்காநுசாசனத்தை அமரகோசமென்றும் அமரமென்றும் வழங்குவர். இந்த விக்ரமார்க்க மஹாராஜா ஸம்ஸ்கிருத மஹாபண்டிதன். மிகப்பிரபலமான மஹாராஜா. இவனைப்பற்றி விக்ரமார்க்க சரிதம் என்று சம்ஸ்கிருத நூல் உளது.

இந்த விக்ரமார்க்கனுடைய சரித்திரம் கர்ண பரம்பரையாகக் கூறப்பட்டு வருவதோடு தமிழில் பெரிய நூலொன்றும் இவன் சரித்திரம் பற்றியெழுதப்பட்டுள்ளது. இவனது காலத்தைத் தொடக்கமாகக் கொண்டு வருடங்கள் கணிக்கப்படுகின்றன என்பதை நோக்கத்தில் கொண்டால் இவன் பாரததேசத்தையாண்ட மன்னருள் மிகவும் சிறந்தவனென்று விளங்கும். எல்லாப் பஞ்சாங்கங்களிலும் இந்த விக்கிரம வருடம் கொடுக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாங்கப்படி இப்பொழுது நடப்பது விக்ரம சக வர்ஷம் 2061. ஆகவே இதன்படி பார்த்தால் அமரசிம்மன் இற்றைக்கு 2061 வருடங்கட்கு முன் வாழ்ந்தவன் என்றாகின்றது.

இவனது கால நிர்ணயம் பற்றி மாறான கால நிர்ணய மெதுவும் இருக்கிறதோ தெரியவில்லை. இவன்பற்றி அதிக விபரம் தெரிந்து யாராவது எழுதினால் நன்று.


இவன் கொடுத்துள்ள தெய்வப் பெயர்களை வைத்து நாம் அந்தந்த தெய்வங்கட்கு அர்ச்சனை செய்யலாம். அவ்வளவு சுத்தமானது. எனது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினால் அதற்கு என்னைப் பெரியோர்கள் மன்னிப்பார்களாக.

நான் 11, 12 வயதுச் சிறுவனாயிருக்கும்போது காளிகோயில் ஒன்றிற்கு எதிர்பாராதவிதமாக பூஜை செய்வதற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். வழக்கமாக நீர்வேலி கதிர்காமக் கோவிலில் தந்தையாருக்குதவியாகப் பூஜை செய்து வந்ததால் முருகன், விநாயகர் இருவரது அர்ச்சனை மந்திரங்கள் மாத்திரமே எனக்குப் பாடம். தீப தூப மந்திரங்கள் பாடமாயிருந்தன.

பூஜை ஆரம்பித்த பின்தான் எனக்கு அம்பாளுக்குரிய அர்ச்சனை மந்திரம் தெரியாது என்பது மனதில் பட்டது. ஆனால் அமரத்தில் அம்பாளுக்கு உரிய நாமாக்கள் பாடமாக்கியிருந்தேன். அதில் காளீ என்றும் வருகிறபடியால் அந்த சுலோகத்தில் வருகிற பர்யாய பதங்களை வைத்து அர்ச்சனை செய்தேன். இது நூற்றுக்கு நூறு உண்மைச் சம்பவம். அம்பாளுடைய நாமாக்களை தொகுத்துள்ள அழகைப் பாருங்கள்.

உஶா காதந்யாயநீ மளரீ காஂஸ ஹைஜவதீஶ்வரீ।
ஶிவா ஜவாநீ ருஂத்ராணீ ஶவஂாணீ ஶவஂ ஊஂமஜா॥
அபணாஂ வாவஂதீ ஊுஂமஂா ஊஜாநீ சஂஷிகாஂபிகா।
ஆயஂா ஊாக்ஷாயணீ சைவ மிரிஜா மெநகாத்ஜா”

இப்படிப்பட்ட ஒரு மஹா பண்டிதனைப்பற்றி நாமறிந்து கொள்வது மிக முக்கியம்.



# மாந்தரின் தெய்வவழிபாடு

ஆதிமனிதன் விலங்கு நிலையிலிருந்தபோது உணவு தேடுவது ஒன்றையே முழுநேர வேலையாக வைத்திருந்தான். மனிதன் வளர்ச்சியடைந்தபின் பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டடான்.

விசித்திரமான மிருகங்கள், மரங்கள், கொடிகள் எல்லாவற்றையும் பார்த்து ஆச்சரியமடைந்தான். மலைகள், மரங்கள் எல்லாம் அவனது வழிபாட்டுக்கு உரியவையாயின.

அக்னிதான் மனிதனின் முதல் செல்வம். நெருப்பின் உபயோகம்தான் அவன் முதன்முதலில் அனுபவித்த செல்வம். இருந்திருந்தாற்போல் காட்டுத்தீ உண்டாகும். மனிதர்கள் தப்பி ஓடுவார்கள். அத்தீயில் அகப்பட்டு மடிந்துவரும் இருப்பர். அக்கினிக்கு மனிதன் பயந்தான்; அதை மெச்சினான், பின்பு வாழ்த்தினான். வணங்கினான்.

*கூநீளை வ˜ளொஹிதழ* என்று வேதம் வாழ்த்தும்.

அக்னியைவிட, முக்கியமான இடத்திற்கு வருணன் வந்தான். வருணனை ராஜா எனப் போற்றினர். வருணன் முதன்மையான தெய்வமாயிருந்தாலும் அவருடன் துவஷ்டா, பிரஜாபதி, மித்ரன், அர்யமா, வாயு இவர்களையும் ஆதிகால மனிதன் வணங்கினான்.

பின்பு இந்திரன் வந்தார். வந்தாலும் வந்தார் தேவர்களின் அரசனாக இன்றுவரை நிலைத்துவிட்டார். ராஜா என்றிருந்த வருணனின் இடத்திற்கு இந்திரன் வந்துவிட்டார். இப்படியே ஒருவர் மாறி ஒருவராகப் பல தெய்வங்கள் கோலோச்சினர். இவர்களுக் கெல்லாம் - அதாவது இவர்களைப் போற்றி சிறுசிறு வேதங்கள் ஆக்கப்பட்டன.

மாணிக்கவாசகர் கூறினாரல்லவரா தேடுகிற இடமெல்லாம் ஒழித்து பிடிக்குள் சிக்காமல் இறைவன் தப்பித்துக் கொண்ட பான்மையை. அதுபோலத்தான்.

இப்படியே தேடித்தேடி ஈற்றில் நமது உண்மையான பரம் பொருள் சிவபெருமானே என வேதங்கள் அறுதியாக அறிந்து கொண்டன.

ஆம். யஜுர் வேதத்தின் நடுப்பகுதியில் ஸ்ரீருத்ரம் வருகிறது. இவ்வுலகில் காணும் பொருள்களெல்லாம் அவன் உருவே என்றும் எவ்லாவற்றிலும் - மரங்களில், மலைகளில், விலங்குகளில், பறவைகளில் இன்னும் இவ்வுலகில் காணப்படும் அசையும் அசையாப் பொருட்களிலெல்லாம் அவனே அந்தராத்மாவாக இருக்கிறான் என்று பதினொரு அன்வாகங்களைக் கொண்ட ஸ்ரீருத்ரத்தில் கூறப்படுகிறது. இந்த ஸ்ரீருத்திரன் நடுப்பகுதியில்தான்

*நஐஸ௵ஂகூளாய ச ஐயஷூளாய ச। நஐஸ௵ிவாய ச ஶிவதளாய ச॥*

என்று இந்த இடத்தில் சிவபஞ்சாட்சரம் எழுந்து நிற்கின்றது. ஆதியில் பரம்பொருள் என்பது வாயுவாக இருக்குமா வருணனாக இருக்குமா இந்திரனாக இருக்குமா என்று வேதங்களெல்லாம் தேடித்தேடி ஈற்றில் உண்மைப்பொருள் - உண்மையான பரம்பொருள் சிவபெருமானே என்று தேறி மாந்தருக்கெல்லாம் சரியான பரம் பொருளை வேதங்கள் நம்முன் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன.

தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான் முகனும்
தேடிக் காணொணாத் தேவாதி தேவனைக்
தேடிக் கண்டு கொண்டேன்.

# சங்கீதம்

சங்கீதம் என்பது மனதிற்கு இன்பமளிப்பது. ஒலிகளை இனிமையாக அமைத்து நீட்டி முடக்கி ஒலிக்கச் செய்து இசை உண்டுபண்ணப்படுகிறது.

எல்லாவிதமான இசை ஒலிகளையும் ஸ ரி க ம ப த நி ஸ் என்ற ஏழு ஸ்வரங்களில் அடக்கிவிடலாம். உலகத்திலுள்ள எல்லாவிதமான சங்கீதமும் இந்த ஏழு ஸ்வரங்களுக்குள் அடங்கும்.

நமது சாஸ்திரீய சங்கீதத்தைக் கர்நாடக சங்கீதம் என்று கூறுவர். நமது சங்கீதம் இராகம் தாளம் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டது. தாளங்கள் சிலவே ஆனால் இராகங்கள் மிகப்பல.

வேங்கடமகி என்றொரு அரசனே இந்த இராகங்களைக் கண்டு பிடித்தான். அதாவது, வேதங்கள் ரிஷிகளுக்கு எப்படிக் கிடைத்தன என்பதை நமது காஞ்சிப்பெரியவர் "வேதங்கள் ரிஷிகளின் மூளையில் ஸ்புரித்தன" 'Flashed' என்று கூறுகிறார். அவ்வாறுதான் வேங்கடமகியின் மூளையிலும் இந்த ராகங்கள் ஸ்புரித்து இருக்கவேண்டும். இவ்வாறு வேங்கடமகியினால் இரண்டாயிரம் இராகங்கள் வரையில் கொடுக்கப்பட்டனவாம். இந்த இராகங்களை தரம் பிரித்தார்கள். 72 இராகங்களை கர்த்தா இராகங்களாகப் பிரித்தெடுத்து ஏனைய இராகங்களை ஸ்வரங்களின் அடிப்படையில் இந்த ஒவ்வொரு கர்த்தா இராகங்களுடைய இராகஸ்வரங்களோடு இணையும் இராகங்களை ஒவ்வொன்றின் ஜந்ய ராகங்கள் என்று வகுத்தார்கள். ஒரு இராகத்திற்கு பதினைந்து இராகங்கள் ஜந்ய இராகங்களாக அமைந்துள்ளன. சிலவற்றுக்கு இரண்டு மூன்று கூட அமையும். "ரிஷபப் பிரியா" என்ற கர்த்தா ராகத்திற்கு "கோ"ப் பிரியா என்று ஒரேயொரு ஜந்ய இராகம். எப்படியான பொருத்தம் பாருங்கள்! "ரிஷபம்" என்றால் காளை, "கோ" என்றால் பசு. இராகங்களின் அடிப்படையில் கீர்த்தனங்கள் இயற்றப்பட்டுள்ளன.

தியாகராஜ ஸ்வாமிகள் தெலுங்கில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். தியாகராஜநுத என்றும் தியாகராஜ என்றும் தனது பெயரை இணைத்து முத்திரைபதித்துள்ளார்.

புரந்தரதாஸர் இயற்றிய கீர்த்தனைகளிலும் இவ்வாறே அவர் தனது பெயரை "புரந்தர" என்று சேர்த்திருப்பார். இவரது கீர்த்தனைகள் கன்னட பாஷையில் இயற்றப்பட்டன.

முத்துஸ்வாமி தீட்சிதருடைய கீர்த்தனங்கள் சம்ஸ்கிருத பாஷையில் இயற்றப்பட்டுள்ளன. இவருடைய கிருதிகளில் "குருகுஹ" எனத்தமது பெயருக்குப் பதிலாக முத்திரை பதித்துள்ளார்.

சியாமா சாஸ்திரிகள் என்றொரு வாக்கேயக்காரர். இவர் அம்பாள் பெயரில் கீர்த்தனங்களை எழுதியிருக்கிறார். இவரது கீர்த்தனங்களும் பிரபல்யமானவை.

இந்த மூவரையும் அதாவது, தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய இம்மூவரையும் "சங்கீத மும்மூர்த்திகள்" என்று அழைப்பார். தமிழில் பூர்வத்தில் அருணாசலக் கவிராயர், வேங்கட சுப்பையர், முத்துத்தாண்டவர்

என்பவர்கள் கீர்த்தனங்களை எழுதினர். சமீப காலத்தில் இராமதாசன் என்ற இயற்பெயருடைய பாபநாசம் சிவன் என்பவர் நூற்றுக்கணக்கில் தமிழில் கீர்த்தனங்கள் எழுதியுள்ளார். இவரது கீர்த்தனங்களெல்லாம் ஸ்வரப்படுத்தப்பட்டு "கீர்த்தனை மாலை" என்ற நூல்வடிவில் வெளிவந்தது.

இவர்களைத்தவிர பெரியசாமிதூரன் என்பவரும் தமிழில் சில கீர்த்தனைகளை எழுதியுள்ளார். தெலுங்கில் தியாகராஜ ஸ்வமிகளாலும், கன்னடத்தில் புராந்தரதாஸராலும், முத்துஸ்வாமி தீட்சிதரால் சம்ஸ்கிருதத்திலும் எழுதப்பட்ட கீர்த்தனைகளே பெரிதும் பாடப்பட்டு போற்றப்படுபவை. இவைகளே - இம்மூவருடைய கீர்த்தனைகளே கர்நாடக சங்கீதத்தை உயிருடன் இயக்கி வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளே கர்நாடக சங்கீதத்தின் முதுகெலும்பு.

தமிழில் கீர்த்தனங்கள் எழுதுபவர்கள் குறைவு. பழைய காலத்துச் சினிமாக்களில் தியாகராஜ பாகவதர், பி. யூ. சின்னப்பா போன்றவர்கள் நடித்த காலத்தில் அவர்களே பாடியும் நடித்துள்ளார்கள். அன்று சினிமாவில் அவர்கள் பாடிய பல பாடல்கள் இன்று சிறந்த கீர்த்தனங்களின் வரிசையில் வைக்கக்கூடியன. அக்காலத்துப் பாடல்களெல்லாம் படுசுத்தமாக கர்நாடக சங்கீத இராகங்களில் அமைக்கப்பட்டன.

சுப்பையா நாயுடு, ஜி. இராமநாதன் போன்ற முன்னோடிகளின் பெயர் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவையாம். சினிமா சங்கீதமும் கர்நாடக சங்கீதத்திற்கு வலுச் சேர்த்துள்ளது. கவிஞர் கண்ணதாசன் பாட்டெழுத, எம். எஸ். விஸ்வநாதன் அற்புதமான மெட்டுக்களில் பாட்டமைத்துள்ளார். சினிமா சங்கீதத்தில் எம். எஸ். விஸ்வநாதன் மிக முக்கியமானவர். அருமையான மெட்டுக்களை எமக்கு கொடுத்துள்ளார். இவர் மெட்டமைத்து வாணி ஜெயராமால் பாடப்பட்ட

"மல்லிகை என் மன்னன் விரும்பும் பொன்னான மலரல்லவோ...."


என்ற பாட்டை மிகவும் க(கொ)டுமையான சங்கீத விமர்சகர் சுப்புடு பெரிதும் பாராட்டி அந்தப்பாட்டு அமைந்த மெட்டிற்கு "விஸ்வநாதம்" என்று இராகப் பெயர் கொடுக்கவேண்டுமென்று பாராட்டினார்.

இவரைத் தொடர்ந்து இசைஞானி இளைராஜா அற்புதமான தெய்வீகமான இசையை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். இவருடைய தேவி உபாசனையே இவருக்கு நல்லிசையை வழங்கி வருகிறது. இவர்களெல்லாம் நம் காலத்தில் இருப்பதால் பெருமையில் குறைந்தவர்களல்ல. என் அபிப்பிராயப்படி இவர்கள் சாதித்தது மிக அதிகம்.

முன்னவர்கள் முன்னோடிகள் என்ற வகையில் தாய் தந்தையர் போல் சிறப்புடையவர்கள்.

ஆனால் இன்றுள்ள இசையமைப்பாளர்கள் எல்லா எல்லையும் தாண்டி சிறந்து விளங்குகிறார்கள். என் தாழ்மையான அபிப்பிராயப்படி இவர்கள் முந்தியவர்களை முந்திவிட்டார்கள். விஞ்ஞானம் புதிய தொழில் நுட்பம் முதலியவை இன்றைய இசையமைப்பாளர்கட்கு பெரிய பலமாக உதவியாக இருக்கின்றன. ஒரு சோகமான விஷயம் என்னவென்றால் வேறு சில இசையமைப்பாளர்கள் நமது சங்கீதத்தை

திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கும் இசையமைக்கும் கலைக்கும் வெகு தூரம்! முதலில் இரண்டொரு பாட்டிற்கு இசையமைத்து அத்துடன் இவர்கள் திறமை வற்றிவிட இனி என்னடா செய்வோமென்று மலைத்து, பின் மேலைத்தேய ஸ்பானிஷ், மெக்ஸிக்கன் இசைகளைப் போட்டுக்கேட்டு ஏதேதோ மெட்டுக்களைக் கொடுக்கின்றனர். தந்தையார் இசையமைப்பாளராக இருந்தால் மகனும் இசையமைப்பாளராக முடியாது. ஆனால் அவர்கள் பிடிவாதமாக தமக்கியலாத விஷயத்தை இது நமது பரம்பரை தொழில் என்று வைத்துக்கொண்டு எப்படியோ மெட்டமைத்துக் கொடுக்கிறார்கள். தமிழகத்தில் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்று, மேலைத்தேய இசை கேட்டு இசையை இரஸிக்கப் பழகிய இளைஞர்கள் இவர்கள் இசையைப் பிடித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு இசை திசை திரும்பிப்போவது வேதனைக்குரியது.



# கவிக்கு நம் உயிர்

முன்னொரு காலத்தில் நந்திவர்மன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் ஒரு தமிழ் அறிஞன். அவனுக்கு கவிதையென்றால் பிரேமை, ஒருவித பித்து. செய்யுள் யாக்கும் புலவர் மத்தியிலேயே அவனது நேரம் கழியும்.

*𑌕𑌾𑌵𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌵𑌿𑌨𑍋𑌦𑍇𑌨 𑌕𑌾𑌲𑍋 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌧𑍀𑌮𑌤𑌾𑌮𑍍॥*

என்ற நீதி சாஸ்திர வாக்கியப்படி அவன் நேரம் முழுவதும் சிறந்த காவியங்களைக் கேட்பதிலும் புலவர்களைச் செய்யுள் எழுதச் சொல்லிக் கேட்பதிலும் கழியும். அவனை நாடி வருகின்ற புலவர்களெல்லாம் அவனைப் புகழ்ந்தும் போற்றியும் கவிதைகள் பாடியும் மகிழ்வித்தார்கள்.

இந்த அரசனுக்கு ஒரு தம்பி இருந்தான். அவனுக்கு அண்ணனான இந்தத் தமையனிடம் பொறாமை. பொறாமை ஏனென்றால் அவன் அரசனாக சிம்மாசனத்தில் இருக்கிறானே என்பதாலல்ல, அவன்மேல் புலவர்களெல்லாம் கவிதைகளை அள்ளிச சொரிகிறார்கள் என்ற காரணத்தினால் தான் இந்தப் பொறாமை. அவனுக்குத் தன்னையும் புலவர்கள் பாட வேண்டுமென்ற கவிப்பித்து. அண்ணனின் தம்பியல்லவா?

தமையனை அரச பதவியிலிருந்து விரட்ட முடியாது. தமையனுக் கெதிராக யுத்தம் செய்யவும் முடியாது. ஆனபடியினால் அவன் புதுமையான ஒரு முறையைக் கையாண்டு அண்ணனை அழிக்கத் தீர்மானித்தான். இந்தக் காலத்தில் இவற்றையெல்லாம் நமக்கு நம்ப இயலாதுதான். ஆனாலும் கதை இதுதான். தம்பியானவன் அரசனைக் கொல்ல எடுத்த உபாயம் என்னவென்றால் அவனை அறம் பாடிக் கொல்வது தான்.

ஆகவே அவன் அண்ணன்மேல் அறம்பாடி முடித்து எப்படி அவனைக் கேட்கச் செய்வதென்று உபாயங்களை வழிவகுத்துக் கொண்டிருந்தான். இந்த விடயம் முதன்மந்திரியின் காதுக்கு எட்டிவிட்டது. தம்பியார் போகும் இடமெல்லாம் ஒற்றர்களை அனுப்பிவைத்து வேவு பார்க்க ஆரம்பித்தான்.

இந்தத் தம்பிக்கு ஒரு காதலியிருந்தாள். தம்பியானவன் தமையனை வதைக்கும் எண்ணத்தில் இருந்தபடியால் காதலியைக் காணச் செல்லவில்லை. அவளோ பிரிவினாலேற்பட்ட விரகதாபத்தினால் வருந்திப் புலம்பியழுது கொண்டிருந்தாள். அவளது சேடிகள் அவள் மேல் பன்னீரையும் வாசனைத் திரவியங்களையும் ஊற்றி உஷ்ணத்தைத் தணித்துக் கொண்டிருந்தனர். தம்பியரசன் ஒற்றர்களுக்காக ஒழிந்துமறைந்து காதலி வீட்டையடைந்தவன் அவளது புலம்பலைப் பார்த்ததும் அந்தச் சந்தர்ப்பத்திற்கேற்றதாக தான் எழுதிய அறப் பாட்டினை ஒரு கேலியாக பாடத்தொடங்கினான்.

"செந்தமிழின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்

சந்தனமென்றாரோ தடவினர் – பைந்தமிழை

ஆய்கின்ற கோன் நந்தி ஆகம் தழுவாமல்

வேகின்ற பாவியேன் மீது."

அவ்வளவு தான்! தம்பியை என்னாலும் வேவு பார்த்துக்கொண்டிருந்த ஒற்றர்கள் தம்பியாரைக் கைதுசெய்துவிட்டார்கள். தம்பி இரவெல்லாம் சிறையில்!

மறுநாள் அரசபை கூடியபோது வழக்கம்போல் வழக்கு விசாரிக்கும் கருமம் ஆரம்பமானது. அரசன் அன்று வரப்போகிற குற்றவாளிகள் யாராயிருக்குமென ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் தன்னுடைய தம்பியையே அதிகாரிகள் குற்றவாளிபோல் அழைத்து வருவதைக் கண்டதும் மகாகோபமடைந்து "அடா! யாரடா என் தம்பியைக் கைதுசெய்தது? விடுங்களடா" உரத்த குரலில் அதட்டியதோடு, மந்திரியைப் பார்த்து "இதெல்லாம் என்ன மந்திரியாரே? இளவரசனை என் தம்பியைக் கைதுசெய்ய உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?" என்று வினாவினான்.

அப்பொழுது மந்திரியானவர் அரசனது தம்பியார் அரசன் மேல் அறம்பாடிய விஷயத்தையும் அதை அரசனுக்கு மறைத்த வலுவான காரணத்தையும் விளக்கினார்.

உடனே அரசன் ஆனந்த பரவசனாகி "என்ன என் தம்பியும் கவிபாடுவானா?" என்று கேட்டதோடு "தம்பி இப்படி வா" என்று அவனை அழைத்து தன்னுடன் அணைத்து உச்சி முகர்ந்தான். அண்ணனின் இந்த அன்புத் தழுவலைச் சிறிதும் எதிர்பாராத நந்திவர்மனுடைய தம்பியின் மனதில் பெரியதொரு பச்சாத்தாப உணர்ச்சி படர்ந்ததும், அவன் அரசனை வணங்கி "அண்ணா என்னை மன்னித்தருளுங்கள்" என்று மன்றாடினான்.

அப்பொழுது அரசன் "தம்பி! என்ன கூறினாய்? மன்னிப்பா சன்மானமா? அதிருக்கட்டும் முதலில் உன் கவிதையை கூறு" என்று வற்புறுத்தினான். அப்பொழுது தம்பி அழுதபடியே "அண்ணா! நான் ஒரு பாவி, கொடியவன். அறிவையிழந்து நானும் உங்களைப் போல் பாட்டுடைத் தலைவனாக வேண்டுமென்ற ஆசையில் அறம் பாடினேன். அதைத் தாங்கள் கேட்டால் தங்கள் உடலிலிருந்து உயிர் பிரிந்துவிடும். அண்ணா மன்னித்துவிடுங்கள். அண்ணா! நான் அந்தச் செய்யுளைச் சொல்லப்போவதில்லை. அண்ணா வேண்டாம் அந்த விஷப்பரீட்சை. மன்னியுங்கள் அண்ணா!" என்று கதறினான். ஆனால் அரசன் விடுவதாயில்லை. மந்திரிகள், பிரதானிகள் எல்லோரும் கெஞ்சியும் அரசன் மசியவில்லை. இறுதியில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது.

எல்லாமாக தம்பியினால் எழுதப்பட்ட பாக்கள் நூறு. இந்த நூறு பாட்டுக்களையும் அரசன் கேட்பதற்காக நூறு பந்தர்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பந்தரின் கீழும் அரசன் நிற்க ஒவ்வொரு பாட்டாகப் பாடப்பட்டது. ஒரு பாட்டுப் பாடப்பட்டதும் அந்தப் பந்தர் எரிந்துவிடும். தொண்ணூற்று ஒன்பதாவது பந்தரும் எரிந்து நூறாவது பந்தரில் தம்பி நிற்கிறான். அரசனும் நிற்கிறான். தம்பியார் அண்ணனின் காலில் விழுந்து புழுதியிற் புரண்ட வண்ணம் "அண்ணா! இந்தக் கடைசிப் பாட்டையாவது தவிர்த்து விடுங்கள்." என்று கதறி அழுதான். அரசன் " தம்பி! என்ன அருமையான கவிதைகளை புனைந்துள்ளாய். இப்படிப்பட்ட ஒரு கவிஞனைத் தம்பியாகப் பெற்ற நான் பெரிய பாக்கியவான். உன்னைப் போன்ற ஒரு கவிஞன்தான் இந்தச் சிம்மாசனத்தில் இருந்து ஆளத்தகுதியானவன். ஆதலால் நீ உன்னுடைய நூறாவது பாட்டையும் பாடு." என்றான்.

தம்பிக்கோ கவிதையைப் படிக்கவிடாமல் நாக்குழறுகிறது. கால்கள் தடுமாறுகின்றன. அவன் மயங்கி விழுந்து விடுகிறான். உடனே அரசன் பக்கத்தில் நின்ற புலவர் ஒருவரை நோக்கி நூறாவது பாட்டை உரத்துப் பாடச் சொன்னான்.

அரச கட்டளையை மீறமுடியாமல் புலவர் நூறாவது பாட்டைப் பாடுக்ன்றான்.

“வானுறு மதியை அடைந்ததுன் வதனம் வையகம் அடைந்ததுன் கீர்த்தி

கானுறு புலியை அடைந்ததுன் வீரம் கற்பகம் அடைந்ததுன் கரங்கள்

தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள் செந்தழல் புகுந்ததுன் மேனி

நானும் என் கவியும் எவ்விடம் புகுவோம் எந்தையே நந்தி நாயகனே”

இந்தக் கடைசிப் பாட்டைப் பாடி முடித்ததும் அரசன் பல்லாக்கிலிருந்து கீழே விழுகிறான். அவனது உயிர் பிரிகிறது. கவிக்காக ஒரு அரசன் தன் உயிரைத்தியாகம் பண்ணியுள்ளதன்மை மிக அற்புதமான ஒரு நிகழ்வாகிறது.



# பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள்

### அவர்களின்

# குரு பரம்பரை

— தி. நடனசபாபதி சர்மா

பிரம்மஸ்ரீ கார்த்திகேசக் குருக்கள் சாம்பசதாசிவக் குருக்கள் அவர்கள் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலின் நித்திய நைமித்தியக் கடமைகளைப் பொறுப்பேற்று ஏறக்குறைய அரைநூற்றாண்டுகளுக்கு அண்மையாய் இருந்தார்.

கோபுர கலசத்தில் சூரியஒளி படும் போது ஏற்படுகின்ற ஒளிப்பிரவாகம் போன்றது அன்னாரின் தேக காந்தி. தங்க நிறமும், தங்க விமானத்தில் நிலாக் காய்ந்ததையொத்த பிள்ளைச் சிரிப்பும் தண்ணளியான பேச்சும், அண்டியவரை அன்போடு உபசரிக்கும் பண்பும், சீரிய ஒழுக்கமும், உயர்ந்த பண்பும் அவரை ஒரு ஆதர்ச சிவாசாரியாராகக் காட்டப் போதுமானவை. அவரது உருவத்திலே சிவாசாரிய லட்சணங்கள் மண்டிக்கிடக்கின்றன. இந்த மாதிரியான சீரிய லட்சணங்கள் எல்லாம் தன்னகத்தே கொண்டிருந்தமையாலேயே அரசகேசரிப் பெருமான் அவரைத் தமக்கு அர்ச்சனை செய்யும்படி வைத்துக்கொண்டார்.

இவர் சிறுவயதிலே, மாயவரத்திலிருந்து இங்கு வந்து கோப்பாயில் வசித்து வந்த பெருந்தகை, தெய்வத்திரு பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத பாடமும் வேதாத்யயனமும் கற்றுக் கொண்டார். உரிய வயது வந்ததும் மணமுடித்து தமது மாதாமஹரான இராமசாமிக்குருக்கள் (அப்பாச்சாமிக் குருக்கள்) பார்த்துவந்த அரசகேசரிப் பிள்ளையாரின் பூஜா காரியங்களையும், ஊர்க்காரியங்களையும் பார்த்ததுமன்றி, நீர்வேலியின் சுற்று வட்டாரத்திலமைந்த அச்செழு, சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பராய் போன்ற அயல் கிராமங்களில் கோவில் கும்பாபிஷேகம், துவஜாரோகணம் மற்றும் விசேஷ நைமித்தியக் கிரியைகள் யாவையும் பார்த்து வந்தார். இன்று அயல் கிராமங்களில் காணப்படும் கோவில்களில் பல இவரால் கும்பாபிஷேகம் பண்ணப்பட்ட ஆலயங்களேயாம். பிற்காலத்தில் இவரது இரண்டாவது புத்திரர் சோமதேவக் குருக்களுடைய உதவியும் வாய்த்தபின் இவரால் ஈடேற்றப்பட்ட கோவில் கைங்கரியங்கள் மிகப் பல. நீர்வேலியும் அதன் சுற்று வட்டாரமும் இவரது சமய சாம்ராச்சியமாய் விளங்கிற்றென்றால் மிகையாது.

ஒருவருக்கு அவரது கல்வி, ஞானம் தோற்றம் அழகு இவையெல்லாம் அவரவர் கர்மவினைகளுக்கேற்ப பிரதானமாக அவரவர் மூதாதையரிடம் இருந்து கிடைப்பனவே. இது மானிடவியலாளர் ஏற்றுக்கொண்ட உண்மை. நூலைப்போல சீலை; தாயைப்போல பிள்ளை என்று இதை சிலசமயங்களில் கிராம வழக்காகக் கூறுவர். ஒருமனிதனுடைய பண்புகளில் காணும் சிறப்புக்கள் ஒரே தலைமுறையில் கிடைப்பனவல்ல. அவை எத்தனையோ தலைமுறைகளில் சந்ததி வழியாகத் தேறித்தேறி வந்து சித்திப்பனவாகும்.

இப்படியெல்லாம் சிந்திக்கும் போது பிரம்ம ஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களுடைய குருபரம்பரையைப் பற்றியறிய ஆவல் உண்டாவது இயல்பே. இவரது முன்னோர். யார் அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பன போன்றவற்றை அறிய யாவருமே விரும்புவர். அதிர்ஷ்டவசமாக வேறு எந்தக் குருபரம்பரையினருக்கும் கிடைக்காத வாய்ப்பு இவரது குருபரம்பரையினருக்குஅமைந்துவிட்டது. மேலும் இவரது குருபரம்பரைச் சரித்திரம் வாசிக்கும் பொழுது சுவாரஸயமாகவும் இருக்கின்றது.

மற்றவர்கட்கு கிடைக்கப்பெறாத வாய்ப்பு என்று கூறப்பட்டது என்னவெனில், இவரின் முன்னோர்களது வரலாறு செப்பேடுகளில் எழுதப்பட்ட சாசனங்களாக கிடைத்துள்ளமையாலேயே.

தென்னிந்தியாவில் திருவுத்தர கோசமங்கையெனும் ஒரு பழம்பெரும் தலமுண்டு. அங்கே மங்களேஸ்வர சுவாமி கோவில் கொண்டிருக்கிறார். அந்தக் கோவிலில் பூஜா காரியங்களை 32 குருக்கள் குடும்பத்தினர் வேதாகம மோக்தமாக மிகவும் சிறப்புடன் நிகழ்த்தி வந்தனர். இதனை அவதானித்த அன்று அத்தேசத்திற்கு அரசனாயிருந்து இராச்சிய பரிபாலனம் செய்த சோமசுந்தர சேதுபதி மகாராசா மிக்வும் மகிழ்ச்சிகொண்டு அவர்களின் சேவையினைப் பெரிதும் மெச்சி, அவர்களுக்கு அந்தக் கோவிலின் பூசை உரிமைகளை சூரிய சந்திரர் உள்ளவரை அவர்களுக்கு உரிமையாக்கி, அவர்கள் வாழ்வதற்கு கிராமங்களையும் கொடுத்து, இவற்றையெல்லாம் அழியாது செப்பேட்டில் எழுதிச் சாசனஞ் செய்துவைத்தான். அந்தச் செப்பேட்டில் காணப்பட்ட சாசன வசனங்களை இக்கட்டுரையின் அடியில் கொடுத்தோம்.

சோமசுந்தர சேதுபதி மகாராசா இருந்தகாலம் தென்னகமெங்கும் சைவ மறுமலர்ச்சி தோன்றிப் பரவிய காலம். கறையான் புற்றினால் மூடுண்டு சிதம்பரத்தில் அழிந்து கொண்டிருந்த மூவர் தேவாரங்களையும் நம்பியாண்டார் நம்பி மீட்டு உலகுக்கு அளித்ததுவும் அவையெல்லாம் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டதுவும் ஏறக்குறைய இந்தக் காலகட்டத்திலேயாம். நாயன்மார் காலத்தையடுத்து வந்த நூற்றாண்டுகளில் பழமையான ஆகமங்கள் எழுச்சிபெற்றன. தென்னிந்தியாவில் பலநூறு கோவில்கள் சிவாகம முறைப்படி கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டன. சோழ பல்லவப் பேரரசர்களால் சைவம் பேணப்பட்டு, சைவமரபெல்லாம் பரந்துபட்டு தமிழகம் முழுவதும் ஒரு உன்னத நிலையில் இருந்தது.

திருவுத்தரகோச மங்கையில் மங்களேஸ்வர சுவாமிக்கு பூசைத் தொண்டு செய்தவர்களுள் காஞ்சிபுரம் கல்யாண சுந்தரக் குருக்களின் மகனான சிவசுப்பிரமணியக் குருக்கள் ஒருவர். ஒருநாள் இவரும் வேறு பல குருமாரும் அரசனைச் சந்திக்கச் சென்றபோது, சிவசுப்பிரமணியக் குருக்கள் அரசன்மேல் சம்ஸ்கிருத கீர்த்தனங்களைப் பாடினார். மற்றக் குருமாருக்கு இவ்வளவு பாண்டித்திய மிருக்கவில்லை. பெரிதும் மகிழ்ந்த மகாராசா சிவசுப்பிரமணியக் குருக்களை தலைமைக் குருக்களாக நியமித்தார்.

மேலே கூறப்பட்ட காஞ்சிக்கலியாண சுந்தரக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்களே சாம்பசதாசிவக் குருக்களின் முதலாவதாக அறியப்பட்ட மூதாதையராவர். சுப்பிரமணியக் குருக்கள் என்ற இந்தப் பெயரைப் பின்வந்த சந்ததியினர் பலரும் தம்மக்களுக்கு வைத்திருப்பதைக் காணலாம்.

இந்த முப்பத்திரண்டு குடும்பத்தைச் சேர்ந்த குருமாரும் இடைவிடாது பதினைந்து தலைமுறை காலமாக மங்களேஸ்வரப் பெருமானின் பூஜாகாரியங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். இப்படி யிருக்கும் நாளில் உள்நாட்டுக் கலகங்கள் தொடங்கின. எங்கு கலகம் ஏற்பட்டாலும் முதலில் பாதிக்கப்படுவது சான்றோரும் ஆலயங்களுமே! இது நாம் கண்டறிந்து பட்டறிந்த உண்மை!! இந்

தக் கலகங்களினால் கிராமங்களிலிருந்து கோவிலுக்கு சேகரிக்கப்படும் நெல், தேங் காய், நெய் முதலிய சம்பாரங்களைச் சேமிக்க முடியாமலும் குருமார் நடமாட முடியாதவாறும் மற்றும் இயல்பானநடை முறைகள் பல பின்பற்றப்பட முடியாம லும் மங்களேஸ்வரப்பெருமானின் பூசைக் குத் தடங்கல் ஏற்பட்டு கொடுமைகள் குவிந்து எங்கும் சீர்குலைந்து அலங் கோலமான நிலைமை உருவானது.

மங்களேஸ்வரப் பெருமானுக்குக் குருத்துவத் தொண்டுகள் ஆற்றிவந்த பிராமணர்களுள் எம்பெருமானின் திரு நாமத்தையே பெற்றோரினால் சூட்டப் பட்ட மங்களேஸ்வரக் குருக்கள் என்ற பெயருடைய பிராமணோத்தமர் ஒருவர் இருந்தார். நாட்டில் இவ்வாறாகக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, மங்களேஸ்வரக் குருக்களும் மற்றும் குருக் கள்மாரும் அரசனை அடைந்து நாட்டு நிலைமையையும், கோவில் கருமங்கள் செய்யமுடியாமல் ஏற்பட்ட நிலைபரங் களையும் எடுத்துக்கூறி கோவிலையும் குருக்கள் குடும்பங்களையும் காப்பாற்ற அரசனென்ற வகையில் அவனைத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பலவாறு கேட் டும் மன்னன் குருக்கள்மார் கொடுத்த அபாயக்குரலைக் கேட்டும் மன்னனது கடமைப்படி அபயமளிக்காமல் வாழா விருந்தான்.

மன்னனோ இந்தக் கலகங்களை அடக்கப் போதிய படைபலமற்றவ னாய் திராணியற்றவனாய் குருமாருக்கு எவ்வித ஆறுதலுங் கூறாது தன்பாட்டிலே ஒன்றும் அறியாதவனாக இருந்தான்.

மங்களேஸ்வரக் குருக்கள் மன முடைந்த நிலையில், மங்களேஸ்வரப் பெருமானுக்கு தான்செய்த சிவப்பணிக்கு தடையேற்பட்டதேயென மிகவருந்தி, மங் களேஸ்வர சுவாமியின் சந்நிதானத்தை யடைந்து அழுது புலம்பி அவர் பாதங் களில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கி] கண்ணில் வழிந்த கண்ணீ ரையோ மனத்தில் வந்த வேதனை யையோ அடக்க முடியாமல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக சுவாமியை விட்டுப் பிரியமனமில் லாதவராய் உத்தரகோச மங்கையை விட்டு நீங்கினார். அப்பொழுது அவரு டன் அவரது மனைவியாரும், சுந்தரேஸ் வரக் குருக்கள் என்பவரும் வேறுஇரண்டு குருக்கள்மாரும் இவர்களுடன் உத்தர கோசமங்கையை விட்டு நீங்கினர். உத்தர கோசமங்கையில் இனித்தொடர்ந்து இருக்க முடியாது என்பதை ஐயந்திரிபற ஆராய்ந்து, சிலகாலத்திற்கு கலகம் அடங் கும்வரை வேறெங்காவதுபோய் இருந்து விட்டு கலகம் அடங்கியதும் திரும்பவும் உத்தரகோச மங்கைக்குத் திரும்பலாம் என்ற எண்ணத்தோடு, அங்கிருந்து புறப் பட்டு இராமேஸ்வரம் வந்தடைந்தனர்.

அங்குவந்து தங்கியிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அங்கே தங்கியிருந்த முத்துமாணிக்கச் செட்டி யாரைச் சந்திக்க நேர்ந்தது. முத்து மாணிக்கச் செட்டியார் தான் குளக் கோட்டரசனால் காரைத்தீவு வியா விலில் கட்டிமுடிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்கு குருக்கள்மாரைத் தேடி இந்தியாவுக்கு பயணம் வந்த வழி யில் இராமேஸ்வரத்தில் தங்கியிருப்ப தாகக்கூறி மங்களேஸ்வரக் குருக்களது வரலாற்றையும் இன்னது என்று கேட் டறிந்து. இது திருவருளின் செயல எனத் தெளிந்து, மங்களேஸ்வரக் குருக்களைத் தன்னுடன் யாழ்ப்பாணத்திற்கு வரும்படி வருந்தியழைத்தார். மங்களேஸ்வரக்குருக் களும் அதற்கியைந்து காரைநகரை யடைந்து வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத் தார்.

இந்த மங்களேசுவரக் குருக்களே சாம்பசதாசிவக்குருக்களின் முற் சந்ததி யினரில் முதன் முதலில் ஈழத்துக்கு வந்த வராவர்.

இந்த மங்களேஸ்வரர்க் குருக்களின் ஐந்தாவது சந்ததியில் வந்த சுப்பிரமணி டக் குருக்கள் என்பவருடைய ஐந்தாவது சந்ததியைச் சேர்ந்தவரே சாம்ப சதாசிவ குருக்களின் தந்தையாரும், கோப்பாய் நாவலர் பாடசாலையின் அதிபராக நீண்டகாலம் ஆசிரியப் பணியாற்றிய பெருந்தகை பிரம்மஸ்ரீ. சுப்பிரமணிய குருக்கள் கார்த்திகேச ஐயர் அவர்கள். அந்தக்காலத்திலேயே அதாவது அந்த ணர்கள் அரசசேவையில் நுழையாத மிகப்பழைய காலத்திலேயே ஆசிரிய சலாசாலையில் பயிற்சிபெற்று வெகுவிரை விலேயே அதிபராக உயர்ந்தார். இவர் தமிழ், கணிதம், ஓவியம் இவற்றில் புலமை மிக்கவர். புராண படனத்தின் போதுபயன் சொல்லும் திறமை மிக்க வர். இவர் உவாத்திமைப் பணியிலிருந்த தனால் ஒரு சிவாசாரியராக வராவிட்டா லும் சிவதீட்சைபெற்று சிவபூஜா துரந்த ராசு இருந்ததோடு, அரசகேசரிப் பிள்ளை யார் ஆலயப்பூஜை காரியங்களில் பங்கு பற்றி அதன் நிர்வாகத்திற்கு உதவிபுரிந் தவர். மேலும் தமது மூத்தமகனான சாம்பசதாசிவக் குருக்களையும் அந்தக் காலத்தில் அந்தண குடும்பங்களிலிருந்த அரசசேவை மாயையில் மூழ்கி அரசாங்க உத்தியோகத்திற்குப் படிப்பிக்காமல் அரசகேசரிப் பிள்ளையாரின் முழுநேரத் தொண்டுக்கு அர்ப்பணித்த பெருமை யுடையவர். இவ்வாறான எழுச்சி மிக்க தும், பூர்வீகப் பெருமையும், பரம்பரை மகிமையும் சிறப்பும் வாய்ந்த இந்த அந் தணர் குலத்தில் வந்த எமது சாமபசதா சிவக் குருக்கள் தம்முதாதையர் போல் எல்லாப் பெருமைக்கும் உரியவர் என்பது சொல்லித் தெரிவதில்லை. அவர் நீண்டகாலம் வாழ்ந்து இறைபணி இயற்ற எல்லாம் வல்ல இறைவன் அருளுவானாக.

## மகாராசாவினால் கொடுக்கப்பட்ட செப்புப்பட்டய சாசனம்

திரு உத்தரகோசமங்கை யென்னுந் திருத்தலத்திலிருந்து மங்களேஸ்வர சுவா மிக்கு இப்போ பூசைசெய்கிறவர்கள் முப் பத்திரண்டு குருமார்கள். இந்த முப்பத் திரண்டு குருக்கள்மாருக்கும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னால் குருக்கள்மார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப் படுகிறது. செப்புப்பட்டயத்திலெழுதப் படுகிற விஷயம் என்னவானால்;-

மங்களேஸ்சுவரர் துணை.

கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்திருநூற் றைம்பத்தொன்று. பிரபவாதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம் சித்திரை மாதம் இருபத்தைந்தாந் திகதி யும் திங்கட்கிழமையும் சோதி நட்சத்திர மும் பூருவபக்கத் திரயோதசியும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழு தப்படுகிற சாதனம்:-

திரு உத்தரகோசமங்கை யென்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக் கின்ற மங்களேஸ்சுவரசுவாமி கோயிலுக்கு இப்போ முதற பூசெய்பங்காளராக இருக் கிற காஞ்சிபுரம் கல்யாணசுந்தரக் குருக் கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்கள், முதல் ஸ்தானிகராகவும் மற்ற வர்கள் தங்கள் தங்கள் பூசைப் பங்கு முறைப்படி ஸ்தானிகர்களாகவும் மகா ராசாவாகிய என்னால் தத்துவங் கொடுக் கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரி யங்களையும் செய்யவும், செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிறது, மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலாக சகலவிதமான சாமான்களும் கஜானாப் பொக்கு முதலிய திறவுகோல்களும் மகா ராசாவாகிய என்னாலேயே கொடுக்கப் படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிறவர்கள் எல்லோரும் பூசை செய்கிறவர்களும் ஸ்தா னிகர்களுமாயிருக்கிற குருக்கள்மார் கட்ட ளைப்படி நடக்கவேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்படவேண்டும். இவர்களுக்கு மங்கள புக்களமென்னும் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்

களுக்குக் கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்களபுக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகிர்ந்து கொள்ளவேண்டியது. இவர்களினால் ஒருகாலத்திலும் கிரயத்திற்குக் கொடுக்கப்படாது வாங்குகிறவர்களுக்கும் இராசசபையிலே தண்டம் விதிக்கப்படும், மற்றப் பணிவிடைகாரர்களுக்கும் இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப்பிரசாதம் அனுப்பவேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும் என்னுடைய வம்சத்தினராலும் எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும் திருஉத்தரகோசமங்கையையும் இராச்சியபரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் இந்தப்பட்டயத்தை அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப் பங்காளராகவும் ஸ்தானிகர்களாகவும் தத்துவம் பெற்ற குருக்கள்மார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் விபூதி உருத்திராட்சம் அழியாமல் இருக்கும்வரைக்கும் இந்த பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டயத்தை ஒருவராலும் அழிக்கமுடியாது. இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கிறேன்.

இங்ஙனம்
சோமசுந்தர சேதுபதி மகாராசா



# முறிகண்டி விநாயகர்

ஈழத்தின் வடபால் கிளிநொச்சியை அடுத்த பகுதியில் அடர்ந்த காட்டின்மத்தியில் மரமொன்றின்கீழ் ஒரு சிறு கொட்டிலினுள் ஒரு பிள்ளையார் வீற்றிருக்கின்றார். இவர் வீற்றிருக்கும் இடம் கண்டி வீதியின் ஓரத்திலேயே அமைந்திருப்பதால் பண்டைக்காலந் தொட்டு காட்டுப்பாதையினூடாகப் பிரயாணம் செய்யும் மக்கள் கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் தமக்கு ஒரு விக்கினமும் ஏற்படக்கூடாது என்று வேண்டி இந்த விக்னேஸ்வரப் பெருமானை வழிபட்ட பின் பிரயாணத்தை மேற்கொள்வது வழக்கம்

இப்பிள்ளையார் இருக்கும் இடம் முறிகண்டி என்றும் பிள்ளையார் முறிகண்டிப் பிள்ளையார் என்றும் வழங்கப்படுகிறது.

முறிகண்டிப் பிள்ளையாரைப் பற்றிக் கர்ணபரம்பரையாகச் சில கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அக்கதைகள் ஏதோ வரலாறோ தலபுராணமோ அல்ல. கதைகள் எல்லாமே ஒரே கருத்தைத்தான் வலியுறுத்துவனவாக இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒரு கதை.

முன்னொருசமயம் ஒரு வண்டிக்காரன் முறிகண்டிப் பிள்ளையார் அமைந்த வீதிவழியே தனது மாட்டுவண்டியைச் செலுத்திச் சென்றானாம். ஏதோ அவசர காரியமாய்ப் போனதனால் பிள்ளையாரை அவன் வழிபட மறந்து விட்டான். நடுவழியில் அவனது வண்டியின் அச்சு முறிந்து பிரயாணம் தடைப்பட்டு விட்டது. அதன்பின் அவன் தனது தவறையுணர்ந்து பிள்ளையாரை வழிபட்டு வண்டியைத் திருத்தி பிரயாணத்தை இனிதே முடித்தானாம்.

இது போன்ற சம்பவங்கள் நவீன காலத்தில் லொறிகளுக்கு ஏற்பட்டதாகப் பல கதைகள் வழங்கப்படுகின்றன. தன்னை மதிக்காது கடந்து சென்றவர்களுடைய வண்டிகளை முறித்தபடியால் "முறிவண்டிப் பிள்ளையார்" எனவும் பின்னர் "முறிகண்டிப் பிள்ளையார்" என்றும் பெயர் வந்ததாக ஒரு ஐதிகம் நிலவுகிறது.

இதை மக்களும் ஏற்று மதித்து அவ்வழியே போகும் எல்லா வாகனங்களும் தரித்து நின்று முறிகண்டிப் பிள்ளையாரை வழிபட்டு இளைப்பாறிப் பின் தமது பிரயாணத்தைத். தொடருவது இன்றும் நடைமுறையிலுள்ள வழக்கம். இராணுவ வாகனங்கள்கூட இப்பாரம்பரியத்தை ஏற்று நடக்கின்றன.

ஒரு சமயம் இவ்வழியே பிரயாணம் செய்த தமிழ்ப் பேரறிஞரும் டாக்டர் உ. வே சாமிநாதையரின் மாணாக்கருமான கி. வா. ஜகந்நாதன் அவர்கள் (கலைமகள் ஆசிரியர்) இவ்வரலாறுகளைக் கேட்டு முறிகண்டிப்பிள்ளையார் மீது ஒரு வெண்பாவைப் பாடி வழிபட்டுச் சென்றார் அவ்வெண்பாவில் அவர் விநாயகரை முறிகண்டிப்பிள்ளையார் என்று விளிக்காமல் "முறிவண்டி" விநாயகர் என்றே பாடியுள்ளார்.

முறிகண்டி என்று பெயர் ஏற்பட்டதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்க முடியுமா? இது பற்றி வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது பற்றிய விபரம் ஏதும் எமக்குத் தெரியவில்லை.

தன்னை வழிபடாதவனுடைய வண்டியை முறித்துத் தவறு செய்தவனைத் தெய்வம் பழிவாங்குமா? பழிவாங்குவது தெய்வப் பண்பாக அமைவது பொருந்துமா? தெய்வத்தை அன்புருவாகவும் தாயாகவும் தந்தையாகவும் (அம்மையே அப்பா) கசிந்துருகி இறைவனைக் கிருபாநிதியாகவுமே நாயன்மார்கள் நமக்கு காட்டியுள்ளார்கள். இலைமறைகாயாகத் தண்டித்த கதைகள் சில புராணங்களில் காணப்பட்டாலும் அது தெய்வப் பண்புக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை.

தமிழ் நாட்டிலுள்ள பல இடப்பெயர்கள் ஈழத்திலும் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு புத்தூர், திருநெல்வேலி என்பவற்றைக் கூறலாம். எத்தனையோ தமிழகத்துப் பெயர்கள் உருமாறியும் திரிந்தும் சிதைந்தும் நம் நாட்டில் நமக்கு விளங்காமல் வழங்கவும் கூடும்.

தமிழ் நாட்டில் முருகன் பூண்டி என்று ஒரு விநாயகர் தலம் உளது. ஒரு முறை சுந்தரமூர்த்தி நானார் அவ்வழியே செல்கையில் அங்கு வீற்றிருக்கும பிள்ளையார் அவரை "சுந்தரமூர்த்தி" எனறு மூன்று முறை விளித்துக் கூப்பிட்டதாகவும் அக்காரணத்தால் அப்பிள்ளையார் "கூப்பிட்ட விநாயகர்" என்று வழங்கப்படுவதாகவும் வரலாறு இருக்கிறது.

இந்த "முருகன் பூண்டி" என்ற பெயரை ஆதிகாலத்தில் அங்கிருந்து புலம் பெயர்ந்த யாராவது இங்கு கொண்டு வந்திருக்கக்கூடும். தாமிருந்த இடப்பெயரை வைத்து இங்கு குடியேறிய யாராவது பிள்ளையாரைத் தாபித்து வணங்கி வந்திருக்கலாம்.

புலம்பெயர்ந்த மக்களிடையே இந்த (Nostalgia) பண்பு மிகச் சர்வசாதாரணம்

ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவுக்கு புலம் பெயர்ந்த மக்கள் சில ஐரோப்பிய நகரங்களின் பெயரை அமெரிக்காவில் தாம் வசிக்கும் இடங்களுக்கு வைத்துள்ளது நமக்குத் தெரியும். பிரான்சிலுள்ள Orleans ஓர்லியன்ஸ் என்ற நகரப் பெயரில் அமெரிக்காவில் New Orleans - நியூ ஓர்லியன்ஸ் என்று ஒரு பகுதியை அங்கு புலம் பெயர்ந்த மக்கள் ஏற்படுத்தி இருக்கின்றனர்.

இவ்வாறு தென்னகத்திலிருந்து இப்பகுதியில் குடியேறிய மக்கள் இவ்விடத்திற்கு "முருகன்பூண்டி" என்று புலம் பெயர் மக்களின் Nostalgic பண்புக்கமையப் பெயர் சூட்டியிருக்கலாம். இப்பெயர் காலப்போக்கில் சிதைந்து "முறிகண்டி" என வழங்கப்படுவதாயிருக்கலாம். "முருகன் பூண்டி" "முறிகண்டி" இருபெயர்களின் ஒலியும் ஒரே மாதிரியமைந்துள்ளன. ஏதோ தொடர்பு இருப்பதுபோல் தெரிகிறது.

திருநெல்வேலி என்ற பெயரை இன்று நாம் திண்ணைவேலி என்று குறிப்பிடுகிறோம். ஐம்பது வருடங்கட்கு முன் திருநெல்வேலி என்ற சொல் மக்களிடையே சாதாரணமான புழக்கத்தில் இருக்கவில்லை. எழுத்தறிவு வந்த பின் சரியாக விலாசமிடத் தொடங்கியபின் அதன் உண்மைப் பெயர் இன்று திருநெல்வேலி எனப் பரவலாக வழக்கத்திற்கு வந்துவிட்டது. எது எப்படி இருந்தாலும் திருமுருகன் பூண்டி விநாயகரே கடல்கடந்து வந்து நாம் போக்குவரத்துச் செய்யும் பெருஞ்சாலையில் நம் கண்முன்னே அமர்ந்து எமக்கு அருள் பாலிக்கிறார் என்று எண்ணும்போது அது மனதிற்கு இதமாக இருக்கிறது அல்லவா. அதுவே போதும்.

# இப்படி எழுது கவிதை

வந்தனம் குருவே வணக்கம் அடியேன்
வந்தனன் தங்கள் அருகில் நாடி
பல நாளாக எனக்கோர் ஆசை
கலைகளிற் சிறந்த கவிதை எழுதி
நல்ல பேர் எடுத்திட வேண்டும் என்றே
தாங்களோ பல கவிகள் எழுதி
ஓங்கு புகழ் கொண்ட ஒப்பிலாக் கவிஞன்
எனக்கும் அந்தக் கவிதை எழுதும்
முனைப்பு வந்துளதால் மனம் கொண்டுள்ளேன்
கூறிடும் ஐயா கருணை கொண்டு
தேறிடவே நான் கவிதை உலகில்
அன்புடன் அந்த இரகசியம் தன்னை

இதனைக் கேட்ட குருவும் இசைந்தே
விதந்தே உரைத்தார் எழுது முறையை
சீடனே கேட்பாய் சிறப்புடன் கவிதை
யாத்திட உள்ள வழிமுறை யெல்லாம்
வகுக்கப் பட்டது வானவர் உலகில்
வந்தனைக்குரிய வியாழ பகவான்
விளம்புகின்றார் கவிதை முறையினை
கவிதை எழுதும் கவியினைக் கேட்பாய்
தவிசிலிருந்தே தாளை எடுத்து
விரும்பிய விஷயம் விபரமாக
பெரும் பெரும் வசனமாய் எழுதி அதனை
அங்கும் இங்கும் குற்றும் கோலனும்
கமாவும் போட்டே வரைந்த பின்னர்
வேண்டிய அளவில் வெட்டியே அதனை
ஆறங்குலமோ ஐந்தங்குலமோ
பட்டியல் போல அடுக்கி அதற்கோர்
சித்திரம் போலத் தலைப்பும் இட்டு
வைத்து விட்டால் கவிதை ஆகும்
இந்த இரகசியம் இந்திரன் மூலம்
இறங்கி இங்கே ஈண்டு வந்தது
இதற்கோ பலபெயர் இட்டு வைத்துள்ளார்
புதுமைக் கவிதை, புதுக் கவிதை
அதுக்கும் மேலாய் வசன கவிதை
என்றே ஆயிரம் பெயர்கள் கொண்டது
நானுனக்கிதனை நவின்றுரைத் துள்ளதை
நானிலம் முழுக்க நீயதைப் பரப்பிடு

மோனையும் யாப்பும் எதுகையும் இன்றி
ஏனைய கரிமா தேமா புளிமா
ஆகிய 'மா'க்கள் எதுவுமின்றி
வாகுடன் செய்யுளை யாத்து விட்டால்
சாகித்தியப் பெரும் அக்கடமிகளும்
பத்தும பூஷன், பாடலரசன்,
வித்துவான் என்றே விளம்பரமாக
பட்டமெல்லாம் அளித்தே உன்னைக்
கற்றவர் உலகில் கதிரையில் வைக்கும்.

---

**கவிதை**

# பட்டிக்காட்டான் பார்த்த படம்.

நேற்றுப்படம் பார்க்கப் போயிருந்தேன் நான் - அதை
நினைக்க நினைக்க மனம் உருகுதே அண்ணே
சோற்றுக்கு வழி இன்றிச் சீரழிந்தாலும்
சாகமுன் ஒருமுறை போய்ப்பார்த்து வா அண்ணே

என்னென்ன புதுமைகள் கண்டிட்டேன் அண்ணே
எதைத்தான் நானுனக்குச் சொல்லுவேன் அண்ணே
வண்ணப் பறவையெல்லாம் பாடுதே யண்ணே
வானத்துச் சந்திரனும் தோன்றுதே அண்ணே

கண்ணைக் கவரும் இளம் குட்டிகள் எல்லாம்
காதல் விளையாடி மிகக் களிக்கிறாரண்ணே
எண்ணம் பறிகொடுத்தங்கவர்களுடனே
ஏதோ கதைப்பதுபோல் இருந்ததே அண்ணே

அப்பன் ஆறுமுகனும் ஆனைமுகனும்
ஆளாக வந்து அருள்புரிகிறாரண்ணே
தப்பை உணர்ந்து கைகள் கூப்புமுன்னரே
தாவிப் பறந்தோடி மறைகிறாரண்ணே

பாட்டன் கொப்பாட்டனிதை அறிவாரோ அண்ணே
பாட்டி கொப்பாட்டி தானும் அறிவாரோ அண்ணே
ஏட்டுச் சுரைக்காயைப் படித்ததினாலே
என்ன பலனடைந்து போயிறாரண்ணே!

**1945ஆம் ஆண்டளவில் 'மறுமலர்ச்சி' இதழில் வெளிவந்தது.**

# பலதும் பத்தும்

**தகவற் தொகுப்பு**

## பண்டைய இந்தியா

பண்டைக் காலத்தில் விந்திய மலைக்கு வடக்கே உள்ள தேசம் கௌட தேசம் என்றும், தெற்கே உள்ள தேசம் திராவிட தேசம் எனவும் வழங்கிற்று.

## பண்டைய சில இந்தியப் பிரதேசங்களும் மக்களும்

1. காஷ்மீரம் - ஸாரஸ்வதர்
2. பஞ்ஜாப் - கான்யகுப்தர்
3. பீஹார் - மைதிலர்
4. ஒரிஸ்ஸா - உத்கலர்
5. வங்காளம் - கௌடர்
6. கூர்ஜரர் - குஜராத்தி மற்றும் மராட்டியர்

## திராவிடர்

தமிழர், ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள்.

மலையாள பாஷை ஆயிரம் வருடங்களுக்குள்ளாகத்தான் தனி உருவம் பெற்றது.

வள்ளத்தோல் என்பவர் வடமொழி எழுத்து, சொற்களைப் பெரிதும் மலையாளத்தில் கலந்து வழங்கச்செய்து வளம்படுத்தினார்.

அமரர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள் “வடமொழியும் வள்ளத்தோலும்” என்ற கட்டுரையில் இதுபோன்ற பல சுவையான விடயங்களைக் கூறியுள்ளார்.

## யாகங்கள்

யாகங்கள் சிலவற்றின் பெயர்கள்

1. வாஜபேயம் 2. அஸ்வமேதம் 3. ஸோமயாகம்

அஸ்வமேதம் அரசர்களால் மட்டும் இயற்றப்படக் கூடியது.
வாஜபேயம் ஸோமயாகம் இரண்டும் பிராமணர்கள் செய்வது.

முன்னாள் இந்தியப் பிரதமர்களுள் சிறந்த ஒருவர் வாஜ்பாய் என்பவர். இவரது முன்னோர்களினால் வாஜபேயம் என்னும் யாகம் இயற்றப்பட்டதால் இந்தக் குலத்தினர் தம் பெயருடன் வாஜ்பாய் என்று சேர்த்துக்கொள்கிறார்கள்.

யாகங்களை முன்னின்று நடத்துபவர் ‘பிரம்மா’ எனப்படுகிறார். இவர் மூன்று வேதங்களாலும் யாகத்தைக் குற்றமறச் செய்யும் பொறுப்புடையவர்.

யாகங்களை வெளியிலிருந்து யாரும் கெடுக்காமற் தடுப்பதும் யாகத்தில் இருத்விக்குகள் யாருக்கேனும் நோய் வரின் அவற்றைப் போக்குவதும் இவர் கடன். ஆகவே பிரம்மாவாக இருபபவர் அதர்வ வேதமும் தெரிந்திருக்கவேண்டும்.

யாகங்களில் முக்கிய பங்கேற்றுக் கடமையாற்றுபவர் ரித்விக் எனப்படுவார்.

ரித்விக் ஆவது ப்ரம்மா, ஹோதா, உத்காதா, அத்வர்யு ஆகிய நால்வருமே.

## வைதிக நூல்கள்

ருக் வேதத்தில் அக்னி, இந்திரன், ஸவிதா, வருணன், விஸ்வேதேவர், ஸோமன், ருத்ரன், விஷ்ணு, மருத்துக்கள், அஸ்வினி தேவர்கள் முதலியவர்கள் துதிக்கப்படுகின்றனர்.

ருக் என்றால் மந்திரம் என்று பொருள்படும். ருக் வேதத்திலுள்ள எட்டு அட்டகங்களிலும் மொத்தமாக 10,415 மந்திரங்கள் காணப்படுகின்றன.

அதர்வ வேதத்தில் 730 சூக்தங்கள் உள்ளன. இவற்றுள் 30 மட்டுமே அபிசாரப் பிரயோகங்கள்.

பெரும்பான்மையான அதர்வ வேத மந்திரங்கள் க்ருஹ்ய கர்மாக்களைப்பற்றியே கூறும். மஹாபாரதம் அதர்வ வேதத்தை நான்காம் வேதம் என்று கூறுகின்றது.

ஸோம சூர்யாக்களின் விவாஹத்தைக் கூறும் மந்திரமும் அதர்வ வேதத்திலிருந்தே ருக் வேதத்திற்குப் போயிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ருக் வேதம் 10ஆம் மண்டலத்தில் ஸோம சூர்யாக்களின் விவாஹம்பற்றிக் கூறப்படுகிறது.

ருக் வேதத்தில் ஸோம சூர்யாக்களின் விவாஹத்தில் ஓதப்பட்ட மந்திரங்களே இன்றைய நடைமுறையிலுள்ள வைதிக விவாஹங்களில் ஓதப்படுகின்றன.

**சிரௌத சூத்திரம்:**

பல்வகைப்பட்ட யாகங்களில் தொடக்கம் முதல் இறுதிவரை செய்யவேண்டியவற்றைக் கூறும்.

**கிருஹ்ய சூத்திரம்:**


ஔபாசனாக்னியில் செய்யப்படும் சடங்குகளைப்பற்றிக் கூறும்.

**பிராமணங்கள்:**

பெரும்பாலும் வசன நடையில் அமைந்திருக்கும். மந்திரங்களுக்கு விளக்கம் கொடுத்து உரைபோன்று உதவுகிறது. மந்திரங்கள் எவ்விடங்களில் வழங்கவேண்டுமென்று கூறுபவை பிராமணங்களேயாம்.



# இயல் 4
# தில்லானா



அறிஞர் வழங்கிய அறிவுப் பெட்டகம்.
– கட்டுரைத்தொகுப்பு.

# காஞ்சி மாமுனிவர் போற்றும் வைதிக தர்மம்

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

தகைசார் பேராசிரியர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

“வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்'' என்பது திருமூலரது வாக்கு. தெய்வநூல் எனப் போற்றப்படும் வேதம் கூறும் தர்மம் வைதிக தர்மம். “வேதோ(அ) கிலோ தர்ம மூலம்'' என்ற மனுதர்ம சாஸ்திர வாக்கினால் வேதமே அனைத்துத் தர்மங்களுக்கும் மூலம் என்பது பெறப்படுகின்றது. அத்துடன் நாம் செய்ய வேண்டிய காரியங்களுக்கும் பின்பற்ற வேண்டிய நெறிகளுக்கும் வேதந்தான் மூலமாக, ஊற்றாக, வேராக விளங்குகின்றது. தர்மமப் பிரமாணங்கள் பதினான்கில் முதன்மை பெறுவது வேதம். ரிக் - யசுர் - சாமம் - அதர்வம் ஆகிய நான்கு வேதங்களும்தான் பதினான்கில் முதல் நான்காக உள்ளன. எஞ்சியுள்ள பத்தில் ஆறு வேதத்தின் அங்கம் என்றும் மிகுதியுள்ள நான்கும் உபாங்கம் என்றும் அழைப்பர். வேதத்தை அங்கம் உபாங்கம் ஆகியவற்றோது கற்கவேண்டும் என்பது மரபு. அதற்கு ‘ஸ அங்க உபாங்க அத்யயனம்'' என்ற பெயர் உள்ளது. தேவமே அனைத்துக்கும் முதன்மையானது. மையமானதுங்கூட. அதனை வைத்துத்தான் ஏனையவை வளர்ச்சியடைந்தன. எமது மதத்திற்குத் தர்மப்பிரமாணம் யாதெனில் வேதம்தான் என இந்துக்கள் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளனர். காலத்தால் தொன்மையான இலக்கியம் ஆகையால் வேதம் தெய்வ நூல் எனப் போற்றப்படுகின்றது. தர்மப்பிரமாணமாக விளங்கிவரும் வேதம் பற்றி காஞ்சிப்பெரியார் கூறுமிடத்து,

“வேதத்தைப் பற்றிச் சொல்வதென்றால் எங்கே ஆரம்பிப்பது எங்கே முடிப்பது என்பது மலைப்பாக இருக்கின்றது. அத்தனை விஸ்தாரமான மகிமை வாய்ந்தது அது'' எனக் குறிப்பிட்டுள்ளதன் மூலம் வேதத்தின் மகிமையை நாம் உணரலாம்.

மேலும் “ப்ரமாணம் வேதாச்ச'' என்று ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அதனைத்து தர்மங்களுக்கும் மூலமான பிரமாணம் நான்கு வேதங்களுமே என்பது குறிப்பிடற்பாலது. எல்லாக் காலத்துக்கும் பொதுவான நிலைபேறான தர்மங்களைக் கூறுவது வேதமே என்பது இதன் விளக்கமாக அமைகின்றது. வேதம் எப்படிச் சொல்கின்றதோ அப்படித்தான் செய்யவேண்டும் என்றும் அதனை மீறக்கூடாது என்ற மரபின் காரணமாக “வேதவாக்கு'' எனக் கூறும் மரபும் தோன்றிற்று.

வேதம் அநாதியானவை என்பதற்கு காஞ்சிப் பெரியார் சிறப்பான விளக்கம் தருகின்றார். “வேதத்தை ரிஷிகள் என்ற மனிதர்கள் பண்ணினார்கள் என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். வேதம் என்பது பல சூத்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு சூத்திரத்திலும் பல மந்திரங்கள் உள்ளன. “ஸுக்தம்'' என்பது ஸு + உக்தம் என்பதாகும். ஸு என்றால் ‘நல்ல' என்று பொருள். ‘உக்தம்' என்றால் ‘சொல்லப்படுவது' அல்லது வாக்கு எனப் பொருள்படும். எனவே ஸுக்தம் என்றால் ‘நல்வாக்கு' என்று பொருள். சாஸ்திரோத்தமாக வேதத்தைச் சொல்கின்றபோது அதிலிருக்கின்ற ஒவ்வொரு ஸுக்தத்திற்கும் இன்ன ரிஷி, அது இன்ன சந்தஸ், அது இன்ன தேவதையைக் குறித்தது என சொல்லிவிட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். இப்படி

அநேக ரிஷிகளின் பெயர்களிலேயே வேத மந்திரங்கள் இருப்பதால் இந்த ரிஷிகள்தான் இவற்றைப் பண்ணியிருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஒவ்வொரு ரிஷியும் இன்னார் பிள்ளை இன்ன கோத்திரம் என்று அவர்களுடைய மூதாதையர்களாக குறிப்பிட்டுச் சொல்லப் படுகின்றது. 'அகஸ்த்யோ மைத்ரா வருணி: என்றால் 'மித்ரா வருணர்களின் பிள்ளையான அகஸ்தியர்' என்பது பொருள். மதுச்சந்தா வைச்வாமித்ர: என்றால் 'விச்வாமித்ர கோத்திரத்தில் வந்த மதுச்சந்தரிஷி என்பது பொருள். இப்படிக் கூறுகின்றபோது ஒவ்வொரு ரிஷியின் பேரில் மந்திரங்கள் இருக்கின்றன. அப்படியாயின் அந்த ரிஷியே அதைச் செய்தார், இயற்றினார் என்று தவறாக நினைத்துவிடுகிறோம். உண்மையில் அந்த ரிஷிகள் மந்திரங்களைத் தாங்களே இயற்றவில்லை. வேதங்கள் 'அபௌருஷேயம்'' எனப் போற்றப்படுவதால் ரிஷிகளும் வேத மந்திரங்களை ஆக்கவில்லை என்பது பெறப்படுகின்றது. மந்திரங்களை ரிஷிகள் இயற்றியிருந்தால் அவர்களுக்கு "மந்த்ரகர்த்தா" என்ற பெயர் வந்திருக்கும். ஆனால் உண்மையில் அவர்களுக்கு "மந்த்ர த்ரஷ்டா" என்றுதான் பெயருள்ளது. இதற்கு 'மந்திரங்களைக் கண்டவர்கள்' என்றே பொருள். "செய்தவர்கள்" என்ற அர்த்தமில்லை. இவர்கள் தான் அவற்றைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் இவர்கள் பேரிலேயே அவற்றைச் சொல்வது வழக்கமாகிவிட்டது. எமக்குப் பயன்படும்படியாக அவற்றை வெளிப்படுத்தி சிறந்த உபகராஞ் செய்தவர்கள் ரிஷிகள்தான். அதனால்தான் அவர்களது பெயரைச் சொல்லி நமஸ்காரம் செய்வது மரபாகிவிட்டது. எனவேதான் வேதங்கள் அநாதி எனப் போற்றப்படலாயின. அவை "ஈச்வரனின் சுவாசமாகும்" என பிருகதாரண்யக உபநிடதம் (2.4.10) குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இந்த வேதங்கள் சப்தரூபத்தில் ஈச்வரனது மூச்சுக்காற்றாக இருந்திருக்கின்றன என்பது சிறப்பம்சமாகும்" என காஞ்சிப்பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சிறப்பு மிகுந்த வேதத்தின் முக்கிய தர்மம் யாதெனில் உலக க்ஷேமத்திற்காக வேத சப்தம் பரவும் பொருட்டு அத்யயனம் செய்வது, யக்ஞம் முதலிய வைதிக கர்மாக்களைச் செய்வது ஆகியவையாகும். வேதத்தைச் சிறிதும் பிழையின்றிக் காப்பாற்றுவதற்காக நமது ஆன்றோர்கள் பலவழிகளைக் கையாண்டுள்ளனர். ஓர் அஷரம் கூட மாறிவிடாது பாதுகாக்கவும் ஸ்வர அமைப்பில் மாறுபாடு ஏற்படாது இருக்கவும் மந்திரசக்தியானது நிறைவாய் பலன்தரவும் அத்யயனத்தில் பல விதிகளை ஏற்படுத்தி வைத்துள்ளனர். ஒரு மந்திரத்திலுள்ள பதங்களை வாக்கியம், பதம், கிரமம், ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜம், தண்டம், ரதம், கனம் ஆகிய பலவித முறைகளில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. இதனைப் பேணிப் பாதுகாப்பவர்கள் கனபாடிகள் என அழைக்கப்படலாயினர். இத்தகைய ஒழுங்கு முடுறைகளிற் திருப்பித் திருப்பிச் சொல்லும்போது மந்திரங்களின் கம்பீரமும் தெய்வீகமும் கலந்து இருக்கும். அனைத்து உயிரினங்களின் க்ஷேமம் வேத சப்தத்தின் விசேடத்தினாலேயே ஏற்படுகின்றது.

வேதம் போற்றும் தர்மத்தில் சிறப்பிடம் பெறுவது யக்ஞம். அக்காலத்தில் தனிப்பெரும் வழிபாடாக இது திகழ்ந்தது. மந்திரங்களை வாயால் ஓதி, அதனோடு கூட ஒரு காரியத்தை அக்கினி முகமாகச் செய்வதுதான் யக்ஞம். "யஜ்" - 'வழிபடுதல்' என்ற வினையடிலிருந்து பிறந்தது 'யக்ஞம்'. தெய்வங்களிடம் பக்தி பூர்வமாக உணர்ச்சியுடன் ஒரு வழிபாடாகச் செய்யப்படும் தர்மமே அதுவாகும். இந்த யக்ஞத்தில் சொல்லப்படும் வேதமந்திரம் குறிப்பிடற் பாலது. மனனம் செய்தால் எது காப்பாற்றப்படுகிறதோ அதுவே மந்திரம் என்ற சொல்லின் பொருளாகும். மனனம்

செய்வதால் அது காப்பாற்றப்படுகின்றது. அதன் பொருள் விளங்காவிடினும் அதனைக் கேட்கின்றவர்களுக்கெல்லதம் ஒரு தெய்வீக ஆனந்தத்தைத் தருகின்றது. அந்த மந்திர சப்தங்களுக்கு உலக நன்மையை ஏற்படுத்தக்கூடிய சக்தியும் உளதால் அவை யக்ஞத்தில் பிரயோகிக்கப்பட்டன. யக்ஞத்தினால் சிறப்பாக மூன்றுவித பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது இவ்வுலகில் உயிர்வாழும்போதே எமக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் தெய்வ அருளால் நன்மையைப் பெற்றுத் தருவது. இரண்டாவது தேவலோக வாழ்வை விரும்பி நாம் யக்ஞ கர்மானுஷ்டானங்களைச் செய்தால் விரும்பிய அந்தப் பலனைப் பெறுவது. மூன்றாவது கீதையில் பகவான் கூறியுள்ளவாறு பலனை எதிர்பாராது நிஷ்காமியமாக யக்ஞம் செய்வதால் ஏற்படும் நன்மையாகும். உலக நன்மைக்காக இது எமக்குக் கடமையாக வந்திருக்கிறது என்ற உணர்வுடன் எமது சொந்தப் பலனில் பற்றுக் கொள்ளாமல் யக்ஞங்களைச் செய்தால் அது விரைவில் சித்த சுத்தியை ஏற்படுத்தி நம்மை ஞான மார்க்கத்தில் சேர்த்துவிடும். "தினமும் வேதம் ஓதுங்கள்; அதில் கூறப்பட்டுள்ள யக்ஞாதி அனுஷ்டானங்களைச் சிறப்பாகச் செய்யுங்கள்" என எமது ஆன்றோர்கள் கூறியிருப்பது இந்த மூன்றாவது பலனை உத்தேசித்துத்தான். இந்த யக்ஞம் வைதிக தர்மத்தில் முக்கியமானது. இதன் தொடர்ச்சியாகவே அக்கினி வழிபாடும் ஆலயங்களிலும் இல்லங்களிலும் நடைபெறும் கர்மானுஷ்டானங்களில் பலவித ஹோமங்களும் இடம்பெறுகின்றன. இந்த யக்ஞங்கள் அனைத்தையும் வழங்கும் காமதேனுவாக விளங்குவது குறிப்பிடற்பாலது. எமக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்யும் தெய்வங்களுக்கு நாம் காட்டும் செய்நன்றியின் பிரதிபலிப்பாகவும் அது அமைகின்றது. தேவர்களும் யக்ஞத்தினால் திருப்தியடைந்து மழை முதலிய நன்மைகளை நல்கி நாம் நலமுடன் வாழ அருள்புரிவர் என்பது யக்ஞ தர்மத்தின் அடிப்படையாகும். கீதையிலும் யக்ஞத்தின் பலன் நன்கு வலியுறுத்தப் பட்டுள்ளது. பல யக்ஞங்கள் செய்து தேவர்ளைத் திருப்தியடையச் செய்து தெய்வ அருளுக்குப் பாத்திரராகும்படி கீதையில் உபதேசிக்கப் பட்டுள்ளது.

வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றாகிய கல்பம் கார்யத்தில் ஒருவனை ஈடுபடச் செய்யும் சாஸ்திரத்தை குறிப்பதாகும். வேதத்தையும், சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜ்யோதிஷம் முதலியவற்றையும் தெரிந்துகொண்ட பின்னர், செய்ய வேண்டிய காரியங்களில் ஒருவன் ஈடுபடவேண்டும். தனது விருப்பத்திற்கேற்ற காரியங்களைச் செய்து ஈட்டிய பாவங்களெல்லாம் நீங்கும் பொருட்டு நற்காரியங்களில் ஈடுபடுவது அவசியமாகும். அதற்கு உரிய மந்திரம், அதன் சரியான உச்சாரணம், பொருள் முதலியன பற்றி அறிந்திருத்தல் நன்மை பயக்கும். அத்தகைய காரியங்களைச் செய்வதற்குத் தேவையான பொருட்கள் வேண்டும். அவற்றை நடத்துவதற்குரிய இல்லம் வேண்டும். அதற்குரிய வாஸ்து லட்சணங்களும் அவசியமாகும். இவை பற்றிய விடயங்களைக் கூறுவது கல்பம் ஆகும். நமது வாழ்வில் 'சடங்கு' என்று கூறுவதையெல்லாம் கல்பமே வகுத்துக்கூறுகின்றது. 'ஷடங்கம்' என்பதே சடங்கு எனப்படலாயிற்று. கல்பம் வேதத்தின் ஆறாவது அங்கமானதால் ஷஷ்டாங்கம் ஆகின்றது. ஒரு வைதிக கர்மா தொடர்பான அனைத்து விவரங்களும் இதில் கூறப்படுகின்றது.

கல்ப சாஸ்திரத்தை அநேக ரிஷிகள் உருவாக்கியுள்ளனர். தெற்கில் சிறப்பாகப் பின்பற்றப்படும் கிருஷ்ண யசுர் வேதத்திற்கு, ஆபஸ்தம்பர், போதாயனர், வைகானசர், ஸத்யாஷாடர், பரத்துவாசர், அக்கினிவேசர் ஆகிய ஆறுபேர் கல்ப சூத்திரங்கள் ஆக்கியுள்ளனர். இருக்கு வேதத்திற்கு ஆச்வலாயனர் ஆக்கியுள்ளதே அதிகம் வழக்கில்

உள்ளது. சாங்காயனர் என்பவரும் உருவாக்கியுள்ளார். சாமவேதத்தின் கௌதுப சாகைக்கு லாட்யாயனரும் ராணாயதீக சாகைக்கு திராஹ்யாணரும் தலவகார சாகைக்கு ஜைமினியும் சூத்திரம் வகுத்துள்ளனர். கல்பத்தின் ஒவ்வொரு சாகைக்கும் கிருஹ்ய சூத்திரமென்றும் சிரௌத சூத்திரமென்றும் இருவகையுண்டு. கர்ப்பம் உண்டாவது முதல் உடல் அக்கினிக்கு ஹோமம் செய்யப்படும் தகனக்கிரியை வரையுள்ள நாற்பது கிரியைகள் பற்றி இவ்விரு சூத்திரங்களும் கூறுகின்றன.

சம்ஸ்காரம் என்றால் தூய்மைப்படுத்தப்படுவது என்று பொருள். வீட்டில் நிகழ்வது அக்னி ஹோத்திரம், யாகசாலையில் செய்யப்படுவது யக்ஞம். பெரிய யாகங்கள் செய்யும் முறையை சிரௌதசூத்திரம் கூறுகின்றது. நாற்பது சம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் கல்பசூத்திரங்களிற் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பதினான்கு ஹவிர், சோமயாகங்களைத் தவிர மிகுதியுள்ள இருபத்தாறும் கிருஹ்யசூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. அதில் கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப் பிராசனம், சௌளம், உபநயனம், விவாகம், அந்தியேஷ்டி முதலியன கூறப்பட்டுள்ளன. எட்டு ஆத்ம குணங்களாவன தயை, பொறுமை, பொறாமையற்று இருத்தல், சுத்தி, பிடிவாதமின்மை, மனம் குளிர்ந்திருத்தல், லோபமின்மை, ஆசையற்றிருத்தல் என்பவைகளாகும். இவை எட்டும் சாதாரண தர்மங்களைச் சேர்ந்தவை.

நம்முடைய சாஸ்திரங்கள் அனைத்தும் ஈஸ்வர சரணாவிந்தத்தையே தழுவியுள்ளன. எதைப் படித்தாலும் அது ஈஸ்வர அர்ப்பணமாகவும் ஆத்ம நலனைத் தருவதாகவும் உள்ளன. ரிஷி பரம்பரையினரால் உருவாக்கப்பட்ட சிரௌத சூத்திரங்களும் கிருஹ்ய சூத்திரங்களும் புனிதமானவை. மக்களை வைதிக தர்மவழியில் நெறிப்படுத்த வல்லன. இவற்றுடன் தர்மசூத்திரங்கள் சிலவும் உள்ளன. இவற்றில் மனிதன் தனிவாழ்விலும் இல்லத்திலும் சமூகத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றிலிருந்தே பிற்காலத்தில் தர்மசாஸ்திரங்கள் உருவாகி வளர்ச்சி அடைந்தன.

வேதங்களை நன்குணர்ந்த மஹரிஷிகள் அவற்றிலுள்ள தர்மங்களையும் கர்மங்களையும் ஒரே இடத்தில் தொகுத்து முறைப் படுத்திக் குறிப்பாக எழுதி வைத்தவையே ஸ்மிருதிகள் ஆகும். 'ஸ்மிருதி' என்றால் 'நினைவுக்குறிப்பு' என்று பொருள் கொள்வர். ஸ்மிருதி மூலம் நாம் செய்யவேண்டிய காரியங்கள் எவை எவை என்பது தெளிவாகத் தெரியும். 'இந்த ஸ்மிருதிகள்தான் தர்ம சாஸ்திரங்கள்' என்று சொல்லப்படுவதாக காஞ்சிப்பெரியார் கூறுகின்றார்.

வைதிக தர்மம் தொடர்ந்து தமிழ்நாட்டில் பேணப்படுவதற்கென உருவாகியது வைத்யநாத தீக்ஷிதீயம் ஆகும். வைத்யநாத தீக்ஷிதீயத்தைப் பெரியோர்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளமை இத் தர்மநெறியைப் பின்பற்ற அனுகூலமாக அமைகின்றது. வைத்யநாத தீக்ஷிதர் என்பவர் எழுதிய நூலான படியால் இதற்கு வைத்யநாத தீக்ஷிதீயம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. அவர் இந்நூலுக்கு வைத்த பெயர் 'ஸ்மிருதி முக்தாபல நிபந்தன கிரந்தம்' என்பாதாகும். வைதிக தர்மங்களை அனுசரிப்பதற்கு இந்நூல் பரம உபகாரமாக உள்ளதாக காஞ்சிப் பெரியார் குறிப் பிடுகின்றார்.

இவர் இருநூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டுமென்றும் நாச்சியார் கோயிலுக்கு அருகிலுள்ள கண்டிர மாணிக்கத்தைச் சேர்ந்தவரென்றும் அறியப்படுகின்றது. இவ்வாறு இந்நூலை இவர் எழுதியதோடு மாத்திரமன்றி அவரே அனைத்து

தர்மங்களையும் கர்மாக்களையும் அனுஷ்டித்துக் காட்டியதாகவும், பெரிய யாகங்கள் செய்தார் என்றும் அறியப்படுவதாகக் காஞ்சிப் பெரியார் குறிப்பிடுகின்றார். நிபந்தனக் கிரந்தங்களில் தீக்ஷிதீயமே கடைசியில் வந்ததாகையால் முன்னைய எல்லா தர்ம சாஸ்திர நூல்களையும் அலசி ஆராய்ந்து எல்லாவிடயங்களையும் தொகுத்துத் தருகின்றது. இந்நூல் தோன்றியதுமுதல் எத்தகைய வேறுபாடுமின்றி பலரும் இதனை ஆதாரமாக ஏற்றனர். எனவேதான் மோதாதிதி, விக்ஞானேச்வரர், ஹேமாத்ரி முதலியவர்களது உயர்ந்த நிபந்தனக் கிரந்தங்களைவிட வைத்யநாத தீக்ஷிதீயமே உயர்ந்ததாகக் கருதப் படுவதாக காஞ்சிப் பெரியார் குறிப்பிடுகின்றார். ஒரு விடயத்தைத் தவிர்த்துவிடாமல் வர்ணதர்மம், ஆச்சிரமதர்மம், ஆசௌசம், சிராத்தம், பிராயச்சித்தம், ஸ்திரீதர்மம், தாயபாகம், திரவியசுத்தி போன்றை அனைத்தையும் நிறைவாகக் கூறும் நூல் இதுவாகும். சுருதியான வேதத்தையும் அதன் விளக்கங்களான முன்னர் தோன்றிய கல்பசூத்திரம், தர்மசூத்திரம், கிருஹ்ய, சிரௌத சூத்திரங்களையும் ஸ்மிருதிகளையும் போன்று, பிற்காலத்தில் தோன்றிய நிபந்தனக் கிரந்தங்களை அனைவரும் ஏற்கும் வண்ணம் செய்வது அவ்வளவு எளிதான காரியமன்று. தீக்ஷிதர் எத்தகைய பக்கச்சார்பின்றி, முன்னர் எழுந்த சாஸ்திரங்களைத் தொகுத்து, அவற்றில் ஏற்படும் முரண்பாடான பகுதிகள் தொடர்பாக ஒரு தீர்மானத்திற்கு வந்து இந்நூலை உருவாக்கியுள்ளதால் தீக்ஷிதீயம் தெற்கில் பிரமாண நூலின் அந்தஸ்தைப் பெற்றது. ஸ்மிருதிகள் ஒன்றுக்கொன்று முரணாயிருக்கும் சில இடங்களில் "அவரவர் இவற்றை தோசாசாரப்படி செய்துகொள்ளட்டும்; தங்கள் குலபூர்விகர்கள் எப்படிப் பண்ணினார்களோ அப்படி பண்ணட்டும்", என்று பரந்த மனப்பான்மையோடு குறிப்பிடுவதாக காஞ்சிப்பெரியார் சுட்டிக் காட்டியுள்ளார். "சாஸ்திரவிதி" என்பதற்கு முக்கியத்துவம் தரும் அதேவேளை, குலவழக்கம், ஊர்வழக்கம் ஆகியவற்றுள்ளும் கடைசி தர்மசாஸ்திர நூலான வைத்யநாத தீக்ஷிதீயம் இடந்தந்து ஒப்புக் கொள்வதாக காஞ்சிப் பெரியார் குறிப்பிடுகின்றார். இவர் மாத்திரமன்றி முன்பு இருந்தவர்களும் அவ்வாறே ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. பெரும்பாலானவர்களால் பின்பற்றப்படுகின்ற பிரமாண அந்தஸ்துடைய ஆபஸ்தம்ப சூத்திரத்திலேயே மகரிஷி ஆபஸ்தம்பர் முடிவில் "நான் இந்த சாஸ்திரத்தில் எல்லா தர்மங்களையும் சொல்லி விடவில்லை. மீதி எவ்வளவோ இருக்கின்றன. ஸ்திரீகளிடமிருந்தும் நான்காம் வர்ணத்தாரிடமிருந்தும் கூட கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவை அநேகம் இருக்கின்றன. அவர்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" எதைக் குறிப்பிட்டுள்ளதை காஞ்சிப் பெரியார் எடுத்துக் காட்டுகின்றார். இவ்வாறு சிறப்பாக அனைத்து விடயங்களையும் அனுசரித்து உருவாக்கப்பட்டிருப்பதால், வைத்யநாத தீஷிதீயம் வைதிக தர்மத்தின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

வைதிக தர்மத்தின்படி அனுசரிக்கப்படும் சம்ஸ்காரங்களில் விவாகம் தர்மத்திற்காகவே ஏற்பட்டதென காஞ்சிப்பெரியார் குறிப்பிட்டுள்ளார். பிரமச்சரிய ஆச்சிரமத்தில் கற்க வேண்டியவற்றைக் கற்று நல்லறிவையும் நற்குணங்களையும் பெற்றபின் தர்மப்படி கர்மானுஷ்டானங்களை மேற்கொள்வதற்கு விவாகம் செய்துகொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்படுகின்றது. சந்நியாசிகளுக்கும் ஆகாரமளிக்க இல்லறத்தான் இருந்தே ஆகவேண்டும். உலகில் எல்லோரும் சந்நியாசிகளாக ஆகிவிடமுடியாது. ஆகையால் இந்த ஆச்சிரமத்தில் தர்மத்தோடு வாழ்ந்து பிரம்மச்சாரிகளுக்கும் சந்நியாசிகளக்கும் கூட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றித் தருகின்ற கிருஹஸ்த ஆச்சிரம தர்மத்தைப் பின்பற்றுபவனையே சாஸ்திரங்கள் மிகவும் உன்னதமாகச் சிறப்பித்துக் கூறுவதோடு சமூகத்தின் முதுகெலும்பு என போற்றுவதாக காஞ்சிப்பெரியார் குறிப்பிட்டுள்ளார். எனவே விவாகத்தை நாற்பது சம்ஸ்காரங்களில் ஒன்றாக

வைத்திருப்பதன் காரணம் அது ஜீவனைப்பரிசுத்தம் செய்யும் புண்ணிய கர்மாவாக விளங்குவதினாலாகும். இந்திரியத்தை நெறிப்படுத்தி ஒரேயொரு மார்க்கத்தில் செல்லும்படி சீராக்கித் தருவதோடு அனைத்து தர்மங் களையும் நடத்துவதற்கும் ஓர் ஆச்சிரமமாக அமைந்த கிருஹஸ்த ஆச்சிரமத்திற்கு முன்னோடியாக அமைவதே விவாகமாகும்.

இந்த உன்னத தர்மமாகிய விவாகத்தினர் தொடர்ச்சியாகவே இல்லறத்தானின் அறுபதாவது ஜன்ம நட்சத்திரத்திலன்று இடம்பெறும் ஷஷ்டியப்தபூர்த்தி, எழுபதாவது அகவையில் வரும் ஜன்ம நட்சத்திரத்திலன்று நடைபெறும் பீமரதசாந்தி மற்றும் எண்பதாவது அகவையில் வரும் ஜன்ம நட்சத்திரத்திலன்று இடம்பெறும் சதாபிஷேகம் போன்ற வைபவங்களும் அமைகின்றன. இத்தகைய வைபவங்கள் மூலம் வைதிக தர்மம் செழித்தோங்குவது குறிப்பிடற் பாலது.

உலகம் முழுவதையும் பகவானுடையதாகப் பார்த்து அதற்கேற்ப எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடப்பதே மனிதர்களது தர்மம் என காஞ்சிப் பெரியார் குறிப்பிடுகிறார். ஒருவனுக்கு இருக்கின்ற சுயநலத்தைக் குறைத்து ஈஸ்வரனின் நினைப்பை உண்டாக்கி, அவனது உடைமையே உலகமெல்லாம் என்ற அறிவை ஏற்படுத்தவே சகல மதங்களும் முயல்கின்றன. இத்தகைய வைதிக தர்மங்கள் அத்தகைய உன்னத நிலைக்கு மனிதனை ஆற்றுப்படுத்ததுகின்றன. நாம் உலகத்திற்கும் இறைவனுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைக் குறைவின்றிச் செய்யவேண்டும். இந்தக் கடமைகளை நமக்கான தர்மம் என்கின்றார் காஞ்சிப்பெரியார். அதாவது உடல் உள்ளபோதும் உடல் போனபின்பும் நன்மை பயப்பதே தர்மம். எனவே நாம் நற்கதி பெற வேண்டியதற்கான தர்ம காரியங்களைச் செய்ய வேண்டும். தர்மத்தை அனுஷ்டிப்பது தொடர்பாக காஞ்சிப் பெரியார் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

“எந்த தர்மத்தை நாம் அனுஷ்டிப்பது என்ற குழப்பமே வேண்டாம். பலகாலமாகப் பெரியவர்கள் பரம்பரையாக அனுஷ்டித்து வந்த தர்மத்தில் நாம் ஊறியிருக்கின்றோம். அனுபவத்தில் அவர்கள் நித்திய சௌக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். இந்த தலைமுறையில் நாம் ஓயாது அதிருப்தியோடு கிளர்ச்சி Demonstration என்று செய்கிற மாதிரி இல்லாமல் அவர்கள் நிம்மதியாக நிச்சிந்தையாக இருந்தார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. எனவே அந்த தர்மத்தை நாம் கடைப்பிடித்தால் போதும். நாமாக ஒன்றைப் புதிதாகப் பண்ணிப் பிடித்துக்கொண்டால் வீண்சிரமந்தான். அது நல்லதாயிருக்குமா கெடுதலாயிருக்குமா என்று நமக்கே ஓயாத சந்தேகமாக இருக்கும். ஆதலினால் முன்பே பெரியார்கள் அனுஷ்டித்து நமக்கென ஏற்பட்டுள்ள தர்மத்தைக் கைக்கொள்வதே நல்லது” எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை எமது சிந்தனைக்குரியாதாகும். ஸ்ரீராமனுக்கு வனவாசகாலத்தில் உதவக்கூடிய தர்மத்தையே அவனது தாயார் கௌசல்யை உபதேசித்தாள். “ராகவா! தைரியத்துடனும் நியமத்துடறும் நீ பாதுகாக்கும் தர்மமே உன்னைப் பாதுகாக்கும்.” எனக் கூறி தர்மத்தையே அவனுக்குத் துணையாக அனுப்பினாள் அவனது தாயார். எனவே தர்மம் தலைகாக்கும். இந்த தர்மத்தை அனைவரும் தைரியமாக நியமமாகப் பின்பற்றி சாசுவத சௌக்கியத்தைப் பெறுவார்களாக! என காஞ்சிப்பெரியார் எம்மை ஆசீர்வதிக்கின்றார்.

மேலும் இந்த வைதிக தர்மத்தையும் அதன் மூலமான வேதத்தையும் நாம் பாதுகாக்கும் எளிய வழிமுறைகளையும் கூறுகின்றார். அவரவர் கொண்டாடும் ஜன்ம நட்சத்திர வைபவங்களின் போது வேதரட்ணத்திற்காக அப்பெரியாரை நினைத்துக்கொண்டு தமது வசதிக்கேற்றவாறு ஏதாவது சிறுநிதியை ஒதுக்கி உதவ வேண்டுமெனவும்

அதனை வேதரட்சணம் செய்யும் அமைப்புகளுக்கோ நிறுவனங்களுக்கோ அனுப்பி உதவுவதும் பெரிய தர்மமாக அமையும் எனக் குறிப்பிடுகின்றார். இதனால் வேத ரட்சணத்திற்குப் பெரிய பலம் கிடைக்கும் என்பது அப்பெரியாரின் நம்பிக்கையாகும். இது தொடர்பாக அவர் கூறும் கருத்து.

"அடுத்த சந்ததிக்கு எப்படியாவது வேதத்தை ரட்சித்துக் கொடுத்துவிட வேண்டும் என்ற ஆலோசனைதான் எனக்கு எல்லா வற்றையும் விட முக்கியமாக இருக்கிறது. வேதம் ஏன் இருக்க வேண்டும் என்றால் முதலில் அந்த மந்திர சப்தம் அதிலுள்ள யக்ஞாதி கர்மங்கள் லோகத்தில் இருந்து கொண்டிருந்தாலே சகலருக்கும் பெரிய க்ஷேமம். இரண்டாவதாக, உலகம் முழுவதற்குமான ஒரு மதமாக வைதிகமே இருந்திருக்கிறது என்பது சகல தேசத்தவருக்கும் தெரிந்து, இதனாலேயே ஒரு ஒற்றுமை சாந்தி ஏற்பட வேண்டுமானாலம் நம்தேசத்தில் வேதத்திற்கு என்றே வாழ்க்கையை அர்ப்பணித்த (dedicated) ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கவேண்டும். இப்படியாக இன்றைக்கும் என்றைக்கும் நம்தேசத்திற்கு மட்டுமன்றி லோகம் முழுவதற்கும் சுபிட்சத்தையும் ஆத்ம சாந்தியையும் உண்டாக்குவதற்காகத்தான் வேத ரட்சணத்தை அதி முக்கியமாகச் சொல்லி வருகிறேன்" என்பது அனைவரது கவனத்திற்குமுரியதாகும்.

காஞ்சிப் பெரியாரது ஆலோசனைக்கமைவாக வேத தர்மத்தைக் காப்பாற்றும் முயற்சியில் தென்னத்திலும் எமது நாடாகிய இலங்கையிலும் உள்ள சம்ஸ்கிருத மொழிப்புலமையுடைய பெரியார்கள் பலர் மகரிஷிகள் மற்றும் வைத்யநாத தீஷிதர் போன்றோர் வகுத்துத்தந்தந்த வைதிக கர்மானுஷ்டானங்களுக்குரிய நூல்கள் பலவற்றை இளந் தலைமுறையினரின் நன்மை கருதி அர்ப்பணிப்புடன் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடற்பாலது. இம்முயற்சி காஞ்சிப்பெரியாரின் அபிலாஷையினை ஓரளவுநிறைவு செய்வதாக உள்ளது.

எம்மிடம் வந்துள்ள ஆதிமூலமான வைதிக தர்மத்தைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற காஞ்சிப் பெரியாரின் வேண்டுகோளை நாம் அனைவரும் எமது கருத்திற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். வேதத்தைக் காப்பாற்றினால் அதுவே அனைவருக்கும் பரமசிரேயஸைத் தருகிற காரியம் என்பதே அவர் உலகுக்குத் தரும் நற்செய்தியும் குரு ஆசியும் ஆகும்.

"குருர்ப்ரஹ்மா குருர் விஷ்ணுர் குருர்தேவோ மஹேசவர:
குருரேவ பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:॥
(குருகீதை - I - 46)


**உசாவியவை:**

1. ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஸ்ரீசந்திரசேகேரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள், **தெய்வத்தின் குரல்** - முதற்பகுதி, தொகுப்பு - ரா.கணபதி, வானதி பதிப்பகம், சென்னை, 1976.
2. மேற்படி **தெய்வத்தின் குரல்,** 2ம் பகுதி, 1978.

# மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம்

இந்தியக் கோயில்களில் அரசன் என பெயர் பெற்றுள்ள காசியம்பதி மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புற்று விளங்குகிறது. காசியம்பதி சிவனின் உடம்பாக கருதப்படுகின்றது. அங்குள்ள சிவலிங்கம் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்றாகும். புண்ணிய பாரத பூமியில் காசிக்கும் கங்கைக்கும் தலைசிறந்த பெருமையுண்டு. புண்ணிய நதிகளில் முதன்மைப் பெற்று விளங்குவது கங்கை நதி. எனவே தான் "காசிக்கு நிகரான பதியுமில்லை, கங்கைக்கு நிகரான நதியுமில்லை" என போற்றுவர்.

காசிக்குச் சென்று கங்கையில் நீராடி அப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் விஸ்வநாத ஸ்வாமியை வழிபட்டால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் நீங்கும். நமக்கும் முத்திகிட்டும். காசி என்ற சொல்லிற்கு ஒளிமயமானது என்பது பொருள். காசிக்குச் சென்றாலும் முக்தி, காசி என உரைத்தாலும் முக்தி, காசியில் வசித்தாலும் முக்தி, காசிக்குச் சென்ற வந்தோரை கண்டு வணங்கினாலும் முக்தி என கூறுவர்.

காசி நகருக்கு வடக்கே "வாரணா" என்ற ஆறும், தெற்கே "அசி" என்ற ஆறும் கங்கையில் வந்து சங்கமமாகுகின்றன. இந்த இரண்டு ஆறுகளுக்குமிடையில் இத்தலம் அமைந்திருப்பதால் "வாரணாசி" என்ற சிறப்புப் பெயருமுண்டு. காசி, காஞ்சி, மதுரை, ஹரித்வார், மாயா, அயோத்தி, துவாரகா ஆகிய ஏழு ஸ்தலங்களும் முக்தி ஸ்தலங்களாகும். ஏழில் காசி முதற்பீடமாக விளங்குவதனால் "கௌரீமுகம்" எனவும் கூறப்படும்.

காசியில் இறக்கும் பசு, பறவை, மனிதர் ஆகிய அனைத்து உயிரினங்கட்கும் எல்லாம் வல்ல இறைவன் தாரக மந்திரத்தை உபதேசிப்பதால் முக்தி கிடைக்கிறது. இத்தலத்தின் எழில் நகரம் கங்கை நதிக்கு மேற்குக்கரையில் மிகவும் அழகாகவும், அகன்றதாகவும் அமைந்து விளங்குகின்றது. காசிக்குத் தெற்கே இருபது மைலிலிருந்து வடக்கு வரை இருபது மைல் வரை கங்கைநதி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓடுகின்றது. கங்கைநதி தெற்கு நோக்கி ஓடுவது தான் இயல்பு. ஆனால் இங்கு மட்டும் வடக்கு நோக்கி ஓடுகின்றது. அவ்வாறு ஓடுவதால் கங்கைநதிக்கு பெருமை அதிகமாக உண்டாகிறது.

காசிக்குச் செல்பவர்கள் கங்கையில் நீராடி கங்காதீர்த்தம், வில்பபத்திரம் ஆகியன கொண்டு சென்று விஸ்வநாதப் பெருமானுக்கு தாங்களாகவே அபிஷேகம் செய்து வழிபடுவது முறையாகும்.

இத்தலத்தில் கேதாரீஸ்வரர், விசாலாட்சி, துண்டி விநாயகர், அன்னபூரணி, பைரவர், தண்டபாணி, துர்க்கை, கௌடிபாய் ஆகியோர் உள்ளனர். கங்கையின் மறுகரையில் ஈஸ்வரர் திருக்கோயிலும் உண்டு. திருவருள் மணக்கும் விஸ்வலிங்கம் வழிபடுவோர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். மேற்கு நோக்கி மிகவும் தாழ்ந்த நிலையில் அமைந்திருக்கும் காசி சிவலிங்க மூர்த்தியை நான்கு பக்கங்களிலிருந்தும் பார்க்கலாம். எம்பெருமான் விஸ்வநாதர் திருக்கோவில் முழுவதும் பளிங்கு கற்களால்

ஆக்கப்பெற்றுள்ளது. இக்கோவிலில் பல சிவலிங்கங்கள் நாலா பக்கமும் பார்க்கலாம். இத் திருக்கோவிலின் மீது ஒரு தொன்னிற்கு மேற்பட்ட இரண்டு தங்கச் சிகரங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

காசி விஸ்வநாதப் பெருமானுக்கு தினசரி ஆறு காலப் பூஜைகள் இடம்பெறுகின்றன. அதிகாலை நான்கு மணிக்கு ஸ்மஸான சாம்பலால் நடைபெறும் அபிஷேகமும், இரவு எட்டு மணிக்கு நடைபெறும் சப்தரிஷி பூஜையும் மிக விசேடமானவை. காசியம்பதியிலுள்ள அறுபத்து நான்கு கட்டங்களிலும் தீர்த்தமாடுவது முடியாததாயின் ஐந்து முக்கிய தீர்த்த கட்டங்களில் ஒரே நாளில் தீர்த்தமாடலாம். முதலில் அஸி கட்டத்தில் நீராடி சங்கமேஸ்வரரை வணங்க வேண்டும். இரண்டாவதாக தசாசுவமேதா கட்டத்தில் நீராடி சூலடங்கேஸ்வரரை வழிபடவேண்டும். மூன்றாவதாக வடகாசி சென்று வருணா சங்கமத்தில் நீராடி ஆதிகேஸ்வரர், வருணேஸ்வரர், சங்கமேஸ்வரர் ஆகியோரை வணங்க வேண்டும். நான்காவதாக பஞ்சகங்கா கட்டத்தில் நீராடி பிந்துமாதவரையும், கங்கேஸ்வரரையும் வணங்க வேண்டும். ஐந்தாவதாக மணிகர்ணிகையில் நீராடி மணிகர்ணிகேஸ்வரரையும், தேவியையும் வணங்கி யாத்திரையின் பயனாக விஸ்வநாதரையும் அன்னபூரணியையும் வணங்க வேண்டும்.

காசி திருத்தலத்தில் பல்லி ஒலிப்பதில்லை, கருடன் பறப்பதில்லை, மாடு முட்டாது, பூ மணக்காது, காகங்கரையாது. இவை இத் தலத்தின் பல அற்புத நிகழ்வாகும். காசியம்பதியை காசி, அவிமுக்தம், ஆனந்தவனம், மஹாச்மஸானம், வாரணாசி, பனாரஸ் என பல பெயர்களால் அழைப்பர். க்ஷேத்திர மகிமை, மூர்த்தி மகிமை, தீர்த்த மகிமை இம்மூன்றையும் ஒருங்கே கொண்ட ஸ்தலம் காசி.

மனிதன் பிறக்கும் போது மூன்று கடன்களுடன் பிறக்கின்றான். அவை பித்ரு, ரிஷி, தேவ கடன்களாகம். இவற்றினை பிரயாகை(அலகபாத்), காசி, கயா ஆகிய மூன்று புண்ணிய இடங்களில் பிண்டம் போட்டு தர்ப்பணம் செய்து தீர்த்துக்கொள்ளலாம். பிரயாகை, காசி, கயா ஆகிய இடங்களில் அக்ஷய ஆலமரம் உண்டு. இந்த தத்துவ ஆலமரத்தின் வேர்ப்பகுதி பிரயாகையிலும், நடுப்பகுதி காசியிலும், கயாவில் அக்ஷய மரத்தின் கிளைகளும் உள்ளதாக ஐதீகம்.

காசி யாத்திரை செல்பவர்கள் முதலில் இராமேஸ்வரம் இராமநாதஸ்வாமியை தரிசனம் செய்து பின் தனுஷ்கோடி சென்று தீர்த்தமாடி முறைப்பிரகாரம் சிவலிங்கம் மணலால் செய்து நேராக பிரயாகை சென்று சிவமடத்தில் அதற்கான சங்கல்ப்ப பூஜைகள் செய்து திரிவேணி சங்கமத்தில் நீராடிச் சிவலிங்க மணலை கரைக்க வேண்டும்.

(திரிவேணி சங்கமத்தில் கங்கைநீர் கண்ணாடி போன்று தெளிவாகவும், யமுனை நீர் சிறிது கருமையாகவும் வருவதை காணலாம். இந்த இரு புண்ணிய நதிகளும் சங்கமமாகும் இடத்திற்கு அடியில் இருந்து பாய்ந்து வரும் சரஸ்வதி நதி கலக்கிறது. இதுவே திரிவேணி சங்கமமாகும். இந்த இடம் ஆழம் மிக அதிகமாகவுள்ளதால் இரண்டு படகுகளை ஒன்றாக மூங்கிலால் இணைத்து இரண்டு படகுகளுக்குமிடையே ஏற்படும் சிறிய இடைவெளியில் இறங்கி ஸ்நானம் செய்வதற்காக சிறிய பலகை மேடை அமைத்துள்ளார்கள். இந்த மேடையில் இறங்கி எச்சரிக்கையாக தீர்த்தமாட வேண்டும்.)

இதன் பின்னர் முன்னோர்களுக்கான பிண்டம் போட்டு தர்ப்பணம் செய்வது முறையாகும். பிரயாகையில் தீர்த்தமாடி கங்கை நீர் எடுத்து இராமேஸ்வரம் திரும்ப வந்து இராமநாதஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து காசி யாத்திரையை பூர்த்தி செய்வது வழமையாகும்.

காசியில் முன்னோர்களுக்கான சிராத்தம் முறைப்பிரகாரம் ஐந்து கட்டங்களிலும் தீர்த்தமாடி பிண்டம் போட்டு தர்ப்பணம் செய்து பித்ருக்கருக்கான முறைகள் யாவும் செய்த பின்னர் கயா செல்ல வேண்டும். கயாவில் விஷ்ணுபாதம் கோவிலுக்கு முன்புறமாக புனித பல்குனி நதி ஓடுகின்றது. இந்த பல்குனி நதியில் சில காலங்களில் மட்டுமே நீரைக் காணமுடியும். அங்கு தீர்த்தமாடி ஈர உடையுடன் உயிர்நீத்த எம் முன்னோர்க்கானதும், எமக்கு மிக வேண்டியவர்கள், அன்பாக வளர்க்கப்பட்ட பிராணிகள் யாவருக்கும் பல்குனி, விஷ்ணுபாதம், அக்ஷயவடம் ஆகிய இடங்களில் பிண்டம் போட்டு தர்ப்பணம் செய்யப்படுகின்றது. கயா அக்ஷய வடவிருக்ஷத்தில் பிண்டம் போடப்படும்போது தங்கள் மீதமுள்ள வாழ்நாளில் ஒரு இலை, ஒரு காய், ஒரு பழம் என்பனவற்றை விடவேண்டும். அதாவது அன்றுமுதல் அவற்றை உண்பதை விட்டுவிட வேண்டும்.

இராமேஸ்வரத்தில் சேது மாதவர்

பிரயாகையில் வேணி மாதவர்


காசியில் விந்து மாதவர்.

காசியாத்திரை செல்பவர்கள் இறுதியாக கௌடிமாதா கோவில் சென்று வழிபட்டு காசி சென்ற பலன் வேண்டித் திரும்புவார்கள்.

காசி ஸ்தலத்தை நேசித்து, கங்கை நீராடி, எம்பெருமான் விஸ்வநாதரை வணங்கி வழிபட்டு, நற்பயன் பெறுதல் நமது கடமையாகும்.

வந்தே காசிம்!





# நாம் வணங்கும் தெய்வம்

ஸ்ரீவித்யா கணினி அச்சகம், இணுவில் - T.P:- 021 222 6004